MANAVAR TAMIL VACHAKAM

(SIXTH READER)

BY

Sembur V. ARUMUGAM SERVAIYAR

TAMIL PANDIT



PUBLISHED BY

N. MUNISAWMY MUDALIAR

Proprietor, "Ananda Bodhini"

SOWCARPET, MADRAS.

1933

[Price Annas 7

மாணவர் தமிழ் வாசகம்

(ஆறும் புத்தகம்)

ஆசிரியர் :

சேம்பூர் வீ. ஆறுமுகம் சேர்வை

தமிழ்ப் பண்டிதர்

இது

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்

நா. முனிசாமி முதலியார் அவர்களால்

வெளியிடப் பெற்றது.

1933

 [விலை அணா ஏழு

PRINTED AT THE
"ANANDA BODHINI" POWER PRESS,
NO. 6. LAWYER CHINNATHAMBI MUDALI STREET,
SOWCARPET, MADRAS.

பொருளடக்கம்.

முகவுரை.

மாணவர்கள், கல்வி கற்கும் பருவத்தில் எந்தவிதமான பாடங்களைப் படிக்கின்றார்களோ, அந்தப் பாடங்களுக்குத் தக்கபடிதான் அவர்களுக்கு அறிவு விருத்தியடைந்து பிற்காலத்தில் பல வகைகளில் உதவி செய்யும். ஆதலின் அவர்களுக்குப் பிற்கால வாழ்க்கைக்கு அனுகூலமாயிருக்கும் பாடங்களே போதிக்கப்பட வேண்டும். அவற்றில் முக்கியமாக எழுத்துப் பிழை, இலக்கணப் பிழை முதலியன இன்றி வாக்கியத் தொடர்களை எழுதும் வகைகளும், படிக்கும் விதங்களும், செய்யுட்களுக்குப் பொருள் தெரிந்து கொள்ளும் மார்க்கங்களும், பற்பல நீதிகளும், உலக இயற்கைகளும், கைத்தொழில் முறைகளும், வியாபாரத் துறைகளும், விவசாய விவரங்களும், உத்தியோக கிரமங்களும், இராஜாங்க அமைப்புக்களும், தேச சரித்திரங்களும், பெரியார் வரலாறுகளும், கணித வகைகளும், வானசாஸ்திர விவரங்களும், பூகோள விவரமும், மருத்துவ முறைகளும், சுகாதார கிரமங்களும், பிராணிகளின் தன்மைகளும், தாவர வகைகளும், நாட்டு வர்த்தமானங்களும், உலக அற்புதங்களும், தெய்வ வழிபாடு முதலியனவும், இவைபோல்வன பிறவும் விளக்கிக் காட்டப்பட வேண்டும்.

இத்தகைய பாடங்களை மாணவர்க்குப் போதிப்பதால் அவர்கள் உலக வாழ்க்கைக்கு அவசியமாக வேண்டியவைகளை நன்குணர்ந்து, குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்துங்

காலத்தில், தங்கள் வாழ்க்கைக்கு ஏற்ற காரியங்களை ஒழுங்கு பெறச் செய்து நன்மை யடைவார்கள்.

ஆதலின், மேற்கூறிய பாட முறைகளில் இவ் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்ற பல பாடங்களே இதில் எழுதப்பட்டிருக்கின்றன. செய்யுள் உணர்ச்சி உண்டாகும் பொருட்டு இதன் ஈற்றில் செய்யுட் பாடங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப் பாடங்களை ஆசிரியர்கள் முறைப்படி போதித்து மாணவர்கள் நற்பயன் அடையுமாறு செய்வார்களாக.

S. V. A.

மாணவர் தமிழ் வாசகம்

ஆறும் புத்தகம்

—:(o):—

1. கடவுள்

உலகத்தில் எந்தக் காரியமும் ஒரு தலைவனைக் கொண்டே நடக்கும்; தலைவன் இல்லாவிடில் ஒரு காரியமும் நடைபெறாது. ஆதலின், எல்லாப் பிராணிகளும் ஒரு தலைமையின் கீழ் இருந்தே தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றன: மிருகங்களில் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை மிருகம் உண்டு; பறவைக்கூட்டங்களிலும் தலைமைப் பறவைகள் இருக்கின்றன. மற்ற ஊர்வன, நீர் வாழ்வன முதலிய பிராணிகட்கும் தலைமைப் பிராணிகள் உண்டு. மனிதருக்கும் தலைவர் உண்டு. பிராணிகளெல்லாம் தங்கள் தலைமைப் பிராணிகட்கு அடங்கி நடந்து வரும். தலைமைப் பிராணிகள் நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து தமக்கடங்கி நடக்கும் பிராணிகளை நல் வழியிற் செலுத்தி நன்மை அடையச் செய்யும்; அதனால் அந்தப் பிராணிகள் நல்ல வாழ்க்கையைப் பெற்று வருகின்றன. இவற்றைப் போலவே மனிதர் கூட்டத்தில் தலைவரா யிருப்பவர்கள், தமக்கடங்கி நடக்கும் மனிதர்களை நன் மார்க்கத்திற் செலுத்துவார்கள்; நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து, தீமைகளை விலக்கி அவர்க்கு நன்மையைச் செய்வார்கள். இப்படிப்பட்ட தலைவரைப் பெற்ற மனிதர்கள், துன்பங்களினின்றும் நீங்கி இன்பமான

வாழ்வை அடைந்து வருகின்றனர்கள். இவ்வாறு தலைமையைப் பெறாத பிராணிகள் மனம் போனபடியே தீயவழிகளிற் சென்று துன்பத்திற் சிக்கிக் கொள்வனவாம். தலைவரைப் பெறாத மனிதர்களும் இடரான மார்க்கங்களிற் புகுந்து பெருந் துன்பத்திற்காளாவர்.

இவ்வாறு ஒவ்வொரு பிராணி வகுப்புக்கும், மனிதர் வகுப்புக்கும் தலைமைப் பிராணிகளும், தலைமை மனிதரும் ஏற்பட்டிருப்பதுபோல உலகம் முழுவதுக்கும் ஒரு பெரிய தலைவர் ஏற்பட்டிருக்கின்றனர்; அவரே கடவுள். அவர் எங்கும் நிறைந்தவர்; எல்லாவற்றிற்கும் ஆதியானவர்; முடிவில்லாதவர்; எல்லா முணர்ந்தவர்; சகல வல்லமையு முடையவர்; உலகத்தையும், உலகத்திலுள்ள பொருள்களையும், உயிர்களையும் படைத்துக் காக்கும் பரம பிதா; உலகத்தில் உள்ள உயிர்கள் வாழ்வதற்குக் காலந் தவறாமல் மழை பெய்யச் செய்கிறார்; உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கிறார்; நிலங்களை உண்டாக்கி யிருக்கின்றார்; காற்று வீசச் செய்கிறார்; சூடு, குளிர்ச்சி முதலியவற்றைச் சமமாக உண்டாக்கி யிருக்கின்றார்; இரவையும் பகலையும் ஏற்படுத்தி யிருக்கின்றார்; சந்திரனையும், சூரியனையும், விண் மீன்களையும் உண்டாக்கி எங்கும் வெளிச்சம் உண்டாகச் செய்கிறார்; மலைகளையும், மரங்களையும், புற் பூண்டு முதலியவற்றையும் உண்டாக்கி யிருக்கிறார்; மனிதர் இன்பத்தை அடைதற்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் படைத்திருக்கிறார்; வியாதி முதலிய துன்பங்களைத் தீர்த்துக் கொள்வதற்கு உபயோக மாகும் மருந்துகளையும் உற்பத்தி செய்திருக்கிறார்; ஒவ்வொருவருக்கும் உரிய தொழில்களுக்கு வேண்டிய சாதனங்களையும் அமைத்திருக்கிறார்.

இப்படி எல்லாவற்றையும் உண்டாக்கிச் சகல உயிர்களையும் அவர் பாதுகாத்து வருகின்றார். அவர் உலக முழுவதையும் ஆளும் பெரிய அரசர். பிராணிகளைத் தலைமையான பிராணிகள் ஆளுகின்றன; அவற்றை மனிதர் ஆளுகின்றனர்; ஒரு கிராமத்திலுள்ள மனிதரைக் கிராமத் தலைவர் ஆளுகின்றனர்; கிராமத் தலைவர்களைச் சிற்றரசர் ஆளுகின்றனர்; சிற்றரசர்களைப் பேரரசர்களாகிய சக்கரவர்த்திகள் ஆளுகின்றனர்; அந்தச் சக்கரவர்த்திகளையும், அவர்களின் ஆளுகைக் குட்பட்ட எல்லா உயிர்களையும் கடவுள் ஆளுகின்றனர்; அவருடைய ஆளுகையின் கீழேதான் யாவும் நடைபெறுகின்றன.

இவ்வாறு உலகத்துக்கெல்லாம் பெரிய இறைவராகிய கடவுள் மனிதர் கண்ணுக்குத் தெரியாமல் மறைவில் இருந்தபடியே ஒவ்வொருவருடைய குணங்களையும், செய்கைகளையும் நன்றாக உணர்ந்து கொள்வார். மனிதர், தம் தலைவருக்கும், அரசருக்கும் தெரியாமல் ஒரு காரியத்தைச் செய்து விடலாம்; கடவுளுக்குத் தெரியாமல் எதையும் செய்ய முடியாது. கடவுள் எல்லாவற்றையும் உணர்ந்து நன்மை செய்தவர்க்கு நல் வாழ்வைக் கொடுத்து முடிவில் அவரைத் தம் அடியிற் சேர்த்துக்கொள்வார்; தீமை செய்தவர்க்குப் பல தண்டனைகளை விதித்து முடிவில் கெட்ட கதியில் அவரைச் சேர்ப்பார். மனிதர், அரசர் தண்டனைக்காவது தம்முடைய சாமார்த்தியத்தால் தப்பித்துக் கொள்ளலாம்; கடவுள் தண்டனைக்கு எப்பொழுதும் தப்பமுடியாது.

கடவுள் இவ்வாறு உலகம் முழுவதையும் பொதுவாக ஆள்வதோடு, உலகத்தில் தோன்றியிருக்கும் பற்பல மதங்களுக்கும் தெய்வமாக விளங்கி அவரவர் வணக்கத்திற்குத்

தக்கபடி ஒவ்வொரு மதத்தினருக்கும் கிருபை செய்கிருர். ஆதலால், எல்லோருக்கும் கடவுள் ஒருவரே; ஒவ்வொரு மதத்தினரும் அவருக்கு ஒவ்வொரு பெயரிட்டிருப்பினும் அவர் கடவுள் என்ற ஒரே பொதுப் பெயரை உடையவராவர்.

சிலர், "கடவுள் நம் கண்களுக்குத் தெரியாததால் அவர் இருக்கிருர் என்பது பொய்" என்று சொல்லக்கூடும். இஃது அறியாமையான நாஸ்திகக் கொள்கையாம். கடவுள் அரூபமாய் எங்கும் நிறைந்தவர். ஆதலால், நம் வெளிப் பார்வைக்குத் தோற்றமாட்டார்; அறிவினுல் ஆராய்ந்து அவர் சொரூபத்தை நாம் நன்ருகத் தெரிந்துகொள்ளலாம். உலகத்தில் ஒரு காரணமில்லாமல் காரியம் தோன்றவே மாட்டாது. அதனுல், காரியத்தைக் கண்டு இதற்கொரு காரண முண்டு என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம்; நெடுந் தூரத்தில் உள்ள ஊரில் நெருப்பு எரியும்போது அந் நெருப்பு நம் கண்களுக்குத் தெரிவதில்லை; அதிலுண்டாகும் புகையை மாத்திரம் நாம் தெரிந்து கொள்கிறோம்; அதனுல் அங்கே நெருப்பு எரிகிறதென்பதைத் தெரிந்து கொள்கிறோம்; ஒரு கோவிலுக்குள் மணி அடிக்கப்படும்போது வெளியில் உள்ளவர்களுக்கு மணியின் உருவம் தெரியாமல் ஓசை மாத்திரம் கேட்கிறது. அந்த ஓசையைக் கொண்டு அவர்கள், ஓசையை வெளிப்படுத்துவது மணிதான் என்று தெரிந்து கொள்கிருர்கள். இவற்றைப் போல கடவுள் உருவம் நமக்குத் தெரியாவிடினும், அவரால் படைக்கப்பட்ட உலகமும், மற்ற பொருள்களும் நம்முடைய கண்களுக்குத் தெரிகின்றன; ஆதலின், இவற்றைக் கொண்டு, "இவற்றிற்கு ஒரு கர்த்தா இருக்கவேண்டும்; அந்தக் கர்த்தாவே கடவுள்" என்று அவரை நாம் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு எல்லாவற்றையும் படைத்து, எல்லா உயிர்களுக்கும், எல்லா மதங்களுக்கும் பொதுவாயிருந்து நம்மைப் பாதுகாத்து வரும் பரம பிதாவாகிய கடவுள் நம்மீது எப்பொழுதும் கருணை யுடையவர்; பிரதி உபகாரத்தை விரும்பாமல் உலகத்துக்குப் பெரிய உதவி செய்துவரும் மழையைப் போல நமக்கு உதவி செய்பவர். நாம் அவருக்குப் பிள்ளைகள்; தந்தையர், தங்கள் பிள்ளைகள் குற்றஞ் செய்தாலும் அவர்கள்மீதுள்ள அன்பினால் அவற்றைப் பொறுத்து அவர்களை ஆதரிப்பது போல, நாம் குற்றம் செய்யினும் கடவுளைச் சிந்தித்து மன்னிக்குமாறு வேண்டினால் அவர் அவ்வாறே மன்னிப்புக் கொடுத்து நம்மை ஆதரிப்பார்.

ஆதலால், நாம் கடவுள் மீது முழு நம்பிக்கை கொள்ள வேண்டும்; அவரை அவமதித்தல் கூடாது; இல்லையென்று நாஸ்திகம் பேசுதல் கூடாது. நாம் கல்வி கற்பதெல்லாம் கடவுள்உண்டென்பதை அறிந்து, நன்மை தீமைகளை உணர்ந்து, நன்மை செய்தார்க்குக் கடவுள் நன்மைசெய்வார், தீமைசெய்தாரைக் கடவுள் தண்டிப்பார் என்னும் உறுதி கொண்டு, தீமை செய்தற்கும், கடவுள் தண்டனைக்கும் அஞ்சி நன்மார்க்கத்தில் நடந்து அக் கடவுளைத் தொழுது நற்கதி அடைதற்காகவே. கடவுளை வணங்காதவர்கள் எவ்வளவு கல்வி கற்றபோதிலும் ஒரு பயனையும் அடைய மாட்டார்கள். கடவுள் நம்பிக்கை யில்லாதவர் மனிதர் வகுப்பைச் சேர்ந்தவராக மாட்டார்.

ஆதலின், கடவுள் வணக்கத்தை எல்லோரும் கைக்கொள்ள வேண்டும். அவரை, இன்ன நாளில், இன்ன நேரத்தில்தான் வணங்கவேண்டுமென்பது இல்லை. அவ்வாறு

நாளேயோ, நேரத்தையோ குறிப்பிட்டு நாம் அக்காலத்தை எதிர்பார்த்திருப்போமானல், அதுவரை உயிரோடிருப்போ மென்பது நிச்சயமில்லை. ஆதலின், ஒவ்வொரு நாளிலும் நாம் அவரை வணங்க வேண்டும். அப்படி வணங்குவதிலும் காலை நேரத்தில் நாம் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும் போது மனம் மிகப் பரிசுத்தமாக இருக்குமாதலின், அந் நேரம் கடவுள் வணக்கத்திற்கு மிகத் தகுதியானதாம்; அத ேேடு மத்தியானம், மாலை ஆகிய நேரங்களிலும், இரவில் படுத்துக் கொள்ளும்போதும் கடவுளைத் துதிப்பது நல்லது கடவுள் எல்லா மதங்களுக்கும் பொதுவானவர். ஆதலால், ஒவ்வொருவரும் அவரவர் மதக் கொள்கையின்படி பக வானை வணங்கலாம். மத விரோதங்கொண்டு இதர மதக்காரர் கொண்டாடும் தெய்வத்தைப் பழிக்கலாகாது; அவ்வாறு ஒரு மதக்காரர் பழிப்பது தங்கள் கடவுளையே நிந்திப்பதாகும். ஆல யங்களில் உருவம் வகுத்துக் கடவுளை வணங்குவோர் அவ் வாறே வணங்கலாம்; அரூபமாக வணங்குவோர் அவ்வாறே வணங்கலாம்; கோவிலுக்குப் போகாமல் இருந்த இடத்தி லிருந்தே கடவுள் தியானம் செய்வோர் அவ்வாறே செய்ய லாம். எப்படி வணங்கினாலும் கடவுள் வணக்கம் ஒன்றே. ஆத லின், அவர் அவ் வணக்கத்தை ஏற்றுக் கொள்வார்.

இவ்வாறு வணங்கி, முன் குற்றங்கள் செய்திருப்பினும் அவற்றை மன்னிக்குமாறு கடவுளைப் பிரார்த்திக்க வேண் டும்; மேலும் குற்றங்கள் செய்யாதிருக்கும் அறிவைத் தரு மாறு கேட்கவேண்டும்; கல்வியும், செல்வமும், நல்ல வாழ் வும், பூரண ஆயுளும் கொடுக்கும்படி வேண்ட வேண்டும்; முடிவில் அவருடைய பாதத்தை யடையும் வரம் தருமாறு துதிக்க வேண்டும். தம்மை அடைந்து வணங்குவோர் கேட்கும் வரங்களை யெல்லாம் கடவுள் தடையின்றி அவர்க்

குத் தருவார். கடவுள் இல்லையென்று பேசி அவரை நிந்திப்போர் அவர் கோபத்துக் காளாகி அழிவர்; கடவுள் பக்தியுடையவர் நன்மையும் புகழும் பெற்று வாழ்வர்; கடவுளை அவமதித்து இரணியாசுரன் அழிந்து உலக நிந்தைக்காளானான்; கடவுளை நம்பிய பிரஹலாதன் அழியாத வாழ்வு பெற்று நற்கதி யடைந்து உலகமுள்ளவரையும் கீர்த்தியை நிலை நாட்டினான்.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்."

2. அக்பர்

இந்தியாவில் அரசாட்சி புரிந்த மன்னர்களில் அக்பர் மிகவும் சிறந்தவர். அரசர் சரித்திரங்களில் இவர் சரிதை மிகவும் உயர்வுடையதாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவர், மோகல் அரசனாகிய ஹுமாயூனுக்கும், அவன் மனைவியாகிய, 'ஹமீதா' என்பவளுக்கும் 1542 - ம் வரு அக்டோபர்மாதம் அமரக்கோட்டையில் புத்திரராகப் பிறந்தவர். இவருக்கு, 'பக்ஷிபானுபேகம்' என்னும் ஒரு சகோதரியும் உண்டு. இன்னும் இவர், தார்த்தாரிதேசத்து முகம்மதிய வகுப்பைச் சார்ந்த, 'பாபர்' என்பவருக்குப் பேரப்பிள்ளை.

அக்பருடைய பாட்டனாராகிய, 'பாபர்' காலத்திலும், அக்பர் தந்தையாகிய ஹுமாயூன் காலத்திலும் காபூலும், இந்தியாவில் டில்லி, ஆக்ரா, இராஜபுதனம் முதலிய சில பாகங்களுமே அவர்களுடைய ஆட்சிக் குட்பட்டிருந்தன. அக்பர் தந்தையாகிய ஹுமாயூன் எட்டு வருஷ காலம் அர

சாண்டு 1556 ம் ஹு ஜனவரிமீ 24௳ 48 வது வயதில் மரணமாகி விட்டார். அப்பால் அக்பர் பாதுஷாவானர். இவர் பட்டத்துக்கு வந்தபோது இவருக்கு வயது பதி னன்கு. அப்போது காபூலும், டில்லி, ஆக்ரா முதலியவை



களுமே இவர் ஆளுகைக்குட்பட்டிருந்தன. இவர் பட்டந் தரித்தபோது பாஞ்சாலத்திலிருந்தார். அப்போது பழைய விரோதியாகிய, 'ஹீமூ' என்பவன் படை யெடுத்து வந்து டில்லியையும், ஆக்ராவையும் கைப்பற்றினன். அக்பர் உடனே வந்து அவனைத் தோற்கடித்து டில்லியைக் கைப்

பற்றி அரசுரிமையைப்பெற்ருர். அக்பர் அரசுரிமையைப் பெற்றபின் டில்லியில் ஒருமாசம் தங்கியிருந்து ஆக்ராவையும் கைப்பற்றினுர்.

அக்பர் அரசு பெற்றதுமுதல் ஐந்து வருஷ காலம், 'பெய்ராம்கான்' என்பவன் மந்திரியாயிருந்து எல்லாக் காரியங்களையும் பார்த்து வந்தான். அவனுல் காரியங்கள் ஒழுங்காக நடைபெறவில்லை. அதனுல் அவர், அவனுடைய அதிகாரத்தை நீக்கி, 1560 ம் வருடம் முதல் தாமே நேரில் சுய ஆட்சி நடத்தத் தொடங்கினுர். அவ்வாறு சுய ஆட்சி நடத்தத் தொடங்கிய முதல் வருடத்திலேயே மாளவ தேசத்தையும், ஜான்பூரையும் கைப்பற்றினுர்; இரண்டாவது வருடத்தில் ஜோட்பூரில், 'மெர்டா' என்னும் நகரத்தையும் கைப்பற்றினுர். பின்னர் மேற்கில் உள்ள பிஜாகர், பரான்பூர் என்னும் நகரங்களும் அவர் கைவச மாயின. பின்னர், அக்பர் 1565 ம் வருடத்தில் ஆக்ராவில் ஒரு கோட்டையைக் கட்டத் தொடங்கி எட்டு வருடங்களில் முடித்தார்; அது மிகவும் பலமானது; இப்பொழுதும் முக்கிய காட்சிகளில் ஒன்ருக அது நிலைபெற்றிருக்கின்றது.

பின்னர், அக்பர் கூர்ஜரம், கிழக்கு மாகாணங்கள், இராஜபுதனம், பீஹார், வங்காளம், காஷ்மீரம், தக்ஷிண மாகாணங்கள் ஆகிய எல்லாவற்றையும் கைப்பற்றி இந்தியா முழுவதையும் ஒரு குடை நீழலில் ஆட்சி புரிந்தார். இவருடைய யுத்தங்களுக்கும், ஆட்சி முறைக்கும் பைஜி, அபுல் பஜல் முதலியவர்களும், பகவான்தாஸ், மான்ஸிங், தோடர்மல் முதலிய இராஜ புத்திர அரசர்களும் மிக்க துணையா யிருந்தார்கள்.

அக்பர், எல்லோரும் தம்மீது விசுவாசம்வைத்து நடப்ப தற்கும், பலரையும் ஒற்றுமைப்படுத்தி ஆளுவதற்கும், இந்து முஸ்லிம் ஒற்றுமையை உண்டாக்குவதற்கும் எல்லோருக் கும் பொதுவான நீதியைச் செலுத்தி அரசாண்டு வந்தார்; இந்து அரசர் குடும்பங்களில் விவாகம் செய்து கொண்டார். இவருக்குப் பல மனைவியர் உண்டு; அவர்களுள் ஒருத்தி ஜோட்பூர் இராஜபுத்திர இராஜ குமாரி; மற்றொருத்தி பீகார் நகர் இராஜ குமாரி.

அக்பருக்கு முதலில் இரட்டைப்பிள்ளைகள் பிறந்து இறந்துபோனார்கள். பிறகு ஜோட்பூர் இராஜகுமாரியின் வயிற்றில், 'ஸலீம்' என்னும் புத்திரர் பிறந்தார். இவரன்றி மூராட், டானியெல் என்னும் இரண்டு புத்திரர்களு மிருந்தார் கள். இவர்களில் மூராட், டானியெல் என்னும் இருவரும் மதுபானப் பழக்கத்தால் இறந்து விட்டார்கள். ஸலீம் ஒரு வரே உயிருடனிருந்தார்—ஆனால், இவர் குடிமுதலிய துர்ப் பழக்கங்களும், கெட்ட நடக்கைகளும் உள்ளவரா யிருந்த தோடு, அக்பருக் கடங்காமல் விரோதமான காரியங்களையே செய்து வந்தார். அக்பருக்கு எல்லாச் சிறப்புக்களும் பொருந்தியிருந்தும் புத்திரர் விஷயத்தில் திருப்தி யில்லாமற் போயிற்று. 'டானியெல்' என்னும் புத்திரன் இறந்தபோது அக்பர் புத்திர சோகம் சகிக்காமல் வியாதியுற்றார்; அவ் வியாதி மீறி அவர் பிழைப்பது சந்தேகமா யிருந்தது. அத னால், அவருக்குப் பின் பட்டத்துக்கு வரத் தக்கவர் யாரென்று பிரதானிகள் ஆலோசித்தார்கள். அக்பர் பிள்ளை களில் உயிருடனிருந்த ஸலீம், துர் நடக்கை யுள்ளவரா யிருந்தபடியால், பலர் அவரை நீக்கி அவருடைய குமார னை குஸ்ரூவைச் சிங்காதன மேற்றக் கருதினர். அதனால், அக்பர் நோயுற்றவுடன், ஸலீம் அரண்மனையில் பிரவேசிக்

காதபடி துருப்புகளைக் காவல் வைத்திருந்தனர். ஸலீம், இவ்வாறு எல்லோரும் தம்மீது விரோதமாயிருப்பதை அறிந்து ஆக்ராவுக்கு வெளியில் சிறிது தூரத்தில் தங்கி யிருந்தார்.

அப்போது அக்பர், ஸலீம் தம்மைப் பார்க்க வரவில்லையென்று அவர் மீது வெறுப்புற்றிருந்தார். எனினும், தமக்குப் பிறகு ஸலீமையே பாதுஷாவாக்கும்படிக்கும், குஸ்ரூவை வங்காளத்துக்கு அதிபதியாக்கும்படிக்கும் பிரதானிகளுக்குக் கட்டளையிட்டார். எல்லோரும் அவ் வுத்தரவை ஏற்றுக் கொண்டார்கள்.

இவ்வாறு ஸலீம் பட்டத்துக்கு வருவது உறுதியான பிறகு அவர் அரண்மனைக்கு வந்தார். அக்பர் அன்புடன் அவரை வரவேற்றார்; பிரதானிகளிடம் நேசப் பான்மையோடிருக்கும்படி அவருக்குப் போதனை செய்தார்; ஸலீம் செய்த குற்றங்களை மன்னிக்கும்படி பிரதானிகளுக்குக் கூறினார். ஸலீம் கண்ணீரொழுக அக்பரை வணங்கி நின்றார்; அக்பர், ஸலீமை நோக்கி முக்கியமான புத்தி மதிகளைக் கூறி விட்டு, 1605 ம் வருஷம், அக்டோபர்மீ 15உ உயிர் நீங்கினர். அப்போது அவருக்கு வயது அறுபத்து மூன்று.

இவ்வாறு அரசாண்ட அக்பருடைய கீர்த்திச் செயல்கள் அளவிட்டுக் கூற முடியாதனவாம். இவர் மிக்க தேகதிடம் பெற்றவர்; பேரழகுடையவர்; ஆஜானுபாகு; அகன்ற மார்பும் பரந்த நெற்றியு முள்ளவர்; அன்பு ததும்பும் முக முள்ளவர்; கரிய கண்களும், புருவங்களு முடையவர்; பழுப்பு நிறமான உடம்புள்ளவர்; காம்பீரமும், சாதுரியமும் பொருந்திய வார்த்தைகளை யுடையவர்; ஆசார உபசாரங்கள் உள்ளவர்; அவருடைய மூக்கில் இடப்பக்கத்தில் அழகிய சிறு மறுவொன்

திருக்கும்; இன்னும் அவர் சாமுத்திரிகாலக்ஷணம் உணர்ந்த வர்; மிக்க தைரியம் உள்ளவர்; ஒரு யானையின் மேலிருந்து மற்றொரு மதங்கொண்ட யானையின் முதுகில் குதிப்பார்; புலியைத் தனிமையாக எதிர்த்துக் கொல்வார்; ஒரு சமயம் அவர், ஒரு புலியையும், ஐந்து புலிக் குட்டிகளையும் கண்டு ஒரே குத்தில் அந்தப் புலியைக் கொன்றுவிட்டார். இன்னும் அவர் தேகப் பிரயாசைக்கு இளைக்க மாட்டார்; இரண்டுநாட் களில் இருநூறுமைல்தூரம் குதிரைச்சவாரிசெய்வார்; யானை வேட்டை யாடுவார்; யானைகளைச் சண்டையிற் பழக்கிச் சண் டைக்கு விட்டு வேடிக்கை பார்ப்பார்; துப்பாக்கி சுடுவார்; நெடுந்தூரம் நடப்பார்; பிரியமாகக் குதிரைச் சவாரி செய் வார்.

சண்டைக்குச் செல்லும் வேலையில்லாமல் இருக்குங் காலத்தில், 'சரகன்' என்ற ஆட்டம் ஆடுவார். இது இங்கி லீஷில், 'போலோ' என்று சொல்லப்படும். இன்னும் அக்பர் செங்கோல்முறை நன்கு தெரிந்தவர்; தளகர்த்தனுக்குள்ள ஆண்மைத் திறமு முள்ளவர்; ஒரு சமயத்தில் தளகர்த்தன் ஒருவன், பாதுஷா தன்னை அவமதித்ததாக எண்ணித் தன் னுடைய ஆண்மையைக் காட்டும் பொருட்டு ஆயுதங்களை யெல்லாம் எறிந்துவிட்டு வெறுங்கையோடு சண்டைக்குப் போனான். அக்பரும் அவனுக் குண்டாகிற அபாயம் தமக் கும் உண்டாகட்டுமென்று ஆயுதங்களை எறிந்து விட்டு அவ னைப் போலவே சென்றார். மற்றொரு சமயம் ஒரு கோட் டையை முற்றுகை யிட்ட காலத்தில், அக்கோட்டை நெடு நாளாகியும் பிடிபடாமலிருக்க, பகை யரசனை நோக்கி, "வீணா கச் சேனைகளின் உயிரை நாம் ஏன் மாய்க்க வேண் டும்; நாம் இருவரும் சண்டை செய்து நம்மில் வெற்றி பெற்

றவர் கோட்டையைக் கைக் கொள்ளலாம்'' என்று அவனைத் தனிச் சண்டைக்கு அழைத்தார்.

இன்னும், அக்பர் அன்புடையவர்; பொறுமை யுள்ள வர்; நண்பினரை மறவாதவர்; பழிக்குப் பழி வாங்கும் குண மில்லாதவர்; பொறுக்கத் தகாத குற்றங்களுக்குத் தக்க தண் டனை விதிப்பார்; கொடுமை செய்ய மாட்டார்; கருணையுடன் அரசு செலுத்துவார்; உதாரகுண முள்ளவர்; குடிகளின் விருப்பத்தை நிறைவேற்றுவதிலேயே நோக்க முள்ளவர்; எல்லா மதத்தினருடனும் வித்தியாசம்பாராட்டாமல் கலந்து உறவாடுவார். எவர் எதைக்கூறினும் கேட்டு அதைப்பற்றி ஆலோசிப்பார்; சிறிதும் தான் என்ற அகங்காரம் கொள்ள மாட்டார்; அடிக்கடி போர் புரிவதில் வெறுப்புடையவர்; அவசியமானபோது மாத்திரம் சண்டை செய்வார்; உலக போகங்களில் வெறுப்புடையவர்; ஒருநாளைக்கு ஒருவேளையே மித போஜனம் பண்ணுவார்; மாம்ச பக்ஷணத்தைக் கூடிய வரை விலக்கி யிருந்தார்; பழங்களைப் புசிப்பதில் விருப்ப முடையவர்; காலையில் காலைக்கடன் முடித்து இராஜ காரியம் பார்ப்பார்; மத்தியானம் இளைப்பாறுவார்; நித்திரையில் சிறிதுகாலமே கழிப்பார்; வீண் பொழுது போக்கமாட்டார்; கடமைகளைச் செய்யாமல் விடமாட்டார்; இராஜ காரியங் களைப் பார்ப்பதும், ஞானிகளோடு சம்பாஷிப்பதும், இராஜ காரியங்களைச் சீர் திருத்தஞ் செய்வதுமே பெரும் பான்மை யும் அவருடைய பொழுது போக்காக இருக்கும். இன்னும் அவர், எல்லோரையும் ஒன்றுபடுத்தி ஆளுதற்குத் தாமே சுய அதிகாரம் நடத்துவது நல்லதென்று அவ்வாறே அதிகாரம் நடத்தி வந்தார்.

இன்னும் அக்பர் ஆளுகையில் கல்வி முறைகளை ஒழுங் காக ஏற்படுத்தி அதனைப் பலவகைகளில் விருத்தி செய்தார்;

அநேகம் கல்விச் சாலைகளை ஏற்படுத்தினார்; பல வித்வான் களை ஆதரித்தார்; அவர்களைக் கொண்டு பல பாஷைகளில் பல நூல்களை இயற்றுவித்தார்; பல நூல்களை மொழி பெயர்க்கச் செய்தார்; நைடதத்தையும், பீஜ கணிதம், லீலாவதி என்னும் கணித சாஸ்திரங்களையும் ஸமஸ்கிருதத்திலிருந்து பாரஸீகத்தில் மொழி பெயர்க்கச் செய்தார்; சித்திர வித்தை, சங்கீதம் முதலியவற்றை விருத்தி செய்தார்; புத்தக சாலையை ஸ்தாபித்தார்; தாமும் பல கல்விகளைக் கற்றிருந்தார். ஸிக்ரியில், 'இபாடட்கானு' என்னும் ஒரு மண்டபம் ஏற்படுத்தி அதில் கல்விமான்களும், பெரியோர்களும் கூடிச் சிறந்த விஷயங்களைச் சம்பாஷிக்கச்செய்து அவர்களுக்குச் சன்மானங்கள் அளித்து வந்தார்.

இன்னும் அக்பர், மதங்களை நன்ருக ஆராய்வார்; ஒரு மதந்தான் சிறந்தது என்று ஒப்புக்கொள்ள மாட்டார். ஒவ்வொரு மதக்காரர்களிடத்திலும் அந்த அந்த மதக் கொள்கைகளைக் கேட்டு அவற்றில் சிறந்தவைகளை எடுத்துக்கொண்டு மற்றவைகளைத் தள்ளி விடுவார்; மூடப் பழக்க வழக்கங்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்; எல்லா மதங்களிலும் பெரியார் உண்டு, சில உண்மைகளும் உண்டு என்பதை ஒப்புக் கொள்வார்; ஒவ்வொரு மதப் பெரியாருக்கும் அவரவர்க்குத் தக்கபடி கௌரவம் கொடுப்பார். பைஜயி, அபுல் பஜல் என்னும் இரண்டுபேர்கள் கல்வியிலும், இராஜ தந்திரங்களிலும், சிறந்தவர்களா யிருந்தபடியால் அவர்களின் துணையைக் கொண்டே புகழ்ச்சிக்குரிய காரியங்களை யெல்லாம் செய்து வந்தார்.

பார பக்ஷமின்றி எல்லா மதத்தினரையும் அன்புடன் ஆட்சி புரிவதற்கு முகம்மதிய முல்லாக்களுடைய அதிகாரம்

தடையா யிருந்தபடியால், அக்பர் மத விஷயங்களிலும் பாதுஷாவாகிய தமக்கே அதிகார முண்டென்று அந்த முல்லாக்களைச் சாசனம் எழுதிக் கொடுக்கும்படி செய்து, அதன் மேல் எல்லா மதத்தினருக்கும் நன்மைகளைச் செய்தார்; இந்துக்களை முகம்மதியர் துன்புறுத்தும் வழக்கத்தை அடியோடொழித்தார்; நியாயஸ்தலங்களில் எல்லா மதத்தினருக்கும் பொதுவான நீதியே வழங்கச்செய்தார்; பாரபக்ஷமாகத் தீர்ப்புச்செய்யும் நியாயாதிபதிகளை அறவேஒழித்துவிட்டார்; எல்லோருக்கும் கடவுள் ஒருவரே; தாம் கடவுளுடைய பிரதிநிதி என்னும் ஒரு புதிய மதத்தை எங்கும் பரவச் செய்தார்; ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் தங்கள் மதங்களின் நல்ல கொள்கைகளை மாத்திரம் அனுசரிக்க இடங் கொடுத்தார்; கெட்ட கொள்கைகளை நீக்கிவிட்டார்; இந்தியாவில் கௌரவமான குடும்பங்களில் பெண்கள், கணவன் இறந்தபோது உடன்கட்டை யேறுவதான கொடியபழக்கத்தைப் பெரும்பான்மையும் குறைக்க முயன்றார்; பெண்கள் தாங்களே சம்மதித்தால் உடன் கட்டை யேறலாமென்றும், சம்மதிக்காதவர்களை மற்றவர் கட்டாயப் படுத்தலாகாதென்றும் கட்டளை பிறப்பித்தார்; விதவா விவாகம் நடை பெறும்படி செய்தார்; பாலிய விவாகத்தைத் தடுத்தார்; யாகங்களில் பிராணிகளை வதைப்பதை நிறுத்தினார்; மதச் சார்பாக நடந்த நியாய விரோதமான தீர்ப்புக்களை அகற்றினார்; முகம்மதியரில் பன்னிரண்டு வயதுக் குட்பட்டவர்களுக்குச் சுன்னத்துச் செய்வது கூடாதென்று கட்டளை பிறப்பித்தார்; பசுவதை செய்வதை நிறுத்தினார்; இன்னும் சில சீர் திருத்தங்களையும் செய்தார்.

இன்னும் சண்டையில் தோல்வியடைந்த எதிரிகளின் குடும்பத்தார்களுக்கு எவ்வித கெடுதியும் செய்யாதிருக்கத்

தக்க ஏற்பாடுகளைச் செய்தார். தம்முடைய படைகள் இறங்கு மிடங்களுக் குரியவர்களுக்கு அதனுல் நஷ்ட முண்டானுல் அந்த நஷ்ட ஈட்டைக் கொடுத்து வந்தார்; யாத்திரை செய்பவர்களிடம் வரி வசூலிக்கும் வழக்கத்தைப் போக்கினுர்; அக்பருக்கு முந்தியகாலத்தில் இஸ்லாமிய மதத்தில் சேராதவர்களுக்குத் தலைவரி ஏற்படுத்தப்பட்டிருந்தது; அதையும் அக்பர் நிறுத்தி விட்டார்; நிலவரிகளைப் பல வகைகளிலும் குடிகளுக்கு அனுகூலமாக ஏற்படுத்தினுர்; தரிசு நிலங்களில் குடிகள் சாகுபடி செய்யத்தக்க வசதிகளை யெல்லாம் ஏற்படுத்தினுர்; இராஜ சுதந்தரமாக நிலங்களில் வரும் தானியங்களை, சர்க்கார் கால் நடைகளுக்கு உணவளிப்பதற்கும், ஏழைகளுக்கு அன்ன மிடுவதற்கும், பஞ்ச காலத்தில் குறைந்த விலைக்குக் கொடுப்பதற்கும் உபயோக மாகும்படி செய்தார்; மானிய நிலங்களை யோக்கியதை யுள்ளவர்களே அனுபவிக்கும்படி செய்தார்.

அக்பருடைய இராஜ்ஜியம் அவரால் பதினைந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு ஸுபதார்கள் மூலமாக ஆட்சி செய்யப்பட்டுவந்தது. இந்த மாகாணங்கள் முதலில் ஹிந்துஸ்தானத்தில் பன்னிரண்டும், தக்ஷிணத்தில் மூன்றுமாக இருந்தன; பிறகு தக்ஷிணம் ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. அலஹாபாத், ஆக்ரா, அயோத்தி, ஆஜ்மீர், கூர்ஜரம், பீஹார், வங்காளம், டில்லி, காபூல், லாகூர், மூலஸ்தானம், மால்வா என்னும் பன்னிரண்டும் ஹிந்துஸ்தானத்தின் பிரிவுகள்; பீரார், கான்டேஷ், ஆமெட் நகர், பீடர், ஹைதராபாத், பீஜப்பூர் என்னும் ஆறும் தக்ஷிணத்தின் பிரிவுகள்.

இன்னும் அக்பர் நீதி முறைகள் இரக்கத்தோடும், ஒழுங்காகவும் நடக்கும்படி செய்தார்; இராஜத் துரோகிகளாய்

அபாயம் விளைவிப்பவர் தவிர, மற்றவர்களுக்குத் தம் உத்தர வின்றிக் கொலைத் தண்டனை விதிக்கலாகாதென்று அதிகாரி களுக்குக் கட்டளையிட்டிருந்தார். நியாய ஸ்தலங்களில் நியாய விவகாரங்களை நடத்துவதற்கு ஒரு பெரிய நியாயாதி பதியையும், ஒரு காஜியையும் நியமித்திருந்தார். காஜியின் வேலை நியாய விசாரணை நடத்தி அதற்குரிய சட்டத்தை எடுத்துக் காட்டுவது; நியாயாதிபதியின் வேலை தீர்ப்புச் செய் வது. ஊர்க்காவல் அதிகாரத்தைப் பெரிய நகரங்களில் கொத் தவால் என்னும் உத்தியோகஸ்தனும், சிறிய நகரங்களின் அதிகாரத்தை அரசிறை அதிகாரியும், கிராமங்களின் அதிகாரத்தைக் கிராம அதிகாரிகளும் நடத்தும்படி அக்பர் ஏற்பாடு செய்திருந்தார்.

இராணுவங்களை மிக்க சீர் திருத்தமான முறையில் வைத்திருந்தார். இராணுவ வீரர்களுக்குத் தக்க பட்டங் களும், தகுதியான சம்பளங்களும் கொடுத்து வந்தார். அக் பர், ஆடம்பரத்தை விரும்பாதவராயினும், இந்திய ஆட்சிக்கு ஆடம்பரம் அவசியமாயிருந்த படியால், விசேஷ தினங்களில் ஆடம்பரமாக உடை யணிந்து அலங்காரம் செய்து கொள் வார். அக்பர் பாளைய மிறங்கும் படை வீடுகளும், வேட்டை யாடும் போதும், பிரயாணம் செய்யும்போதும் தங்கும் வீடு களும், விசேஷ தினங்களில் கொலுவிருக்கும் கூடாரங்களும் மிக்க ஆடம்பரமாகவே யிருக்கும். பண்டிகை தினங்களிலும், பிறந்த நாட் கொண்டாடுங் காலத்திலும் மிக்க ஆடம்பரங் களும், வேடிக்கைகளும் நடக்கும்; அக்பர் ஆடம்பரமாக உடை யணிந்து கொலு வீற்றிருந்து, தரிசிக்க வருவோர்க்கு நற்காட்சி கொடுப்பார்; தக்க சன்மானங்களும் அளிப்பார்.

அக்பர் மங்கலத்தின் பொருட்டும், ஏழைகளுக்குத் தானங்கொடுக்கும் பொருட்டும் வருடத்தில் இரண்டு முறை பிறந்த நாளைக் கொண்டாடும் சமயங்களில் துலாபார மேறுவது வழக்கம்; ஆபான்மீ 1வ-யில் பொன், பாதரஸம், பட்டு முதலிய வெவ்வேறான பண்டங்களைத் துலாத் தட்டில் இட்டுப் பன்னிரண்டு முறை துலாபார மேறுவர்; ரஜப்மீ 5வ-யில் வெள்ளி, தகரம், வஸ்திரம் முதலிய வெவ்வேறான எட்டு வித பண்டங்களிட்டுத் துலாபார மேறுவர். அக்பருக்கு ஒவ்வொரு வருஷத்திலும் எத்தனை வயது ஆகிறதோ அத்தனை ஆடுகளையும், கோழிகளையும் அவற்றை வளர்ப்பவர்களுக்குக் கொடுப்பது வழக்கம். இன்னும் அக்காலங்களில் கூண்டுகளில் அடைக்கப்பட்டிருக்கும் சிறு பிராணிகள் விடுதலை செய்யப்படும்; எல்லா வகுப்பு ஜனங்களுக்கும் வெகுமதியளிக்கப்படும்; அபராதங்கள் மன்னிக்கப்படும். அக்பருடைய குமாரர்களும், பேரப் பிள்ளைகளும் கூடத் துலாபார மேறுவதுண்டு. துலாபார மேறின பொருள்களை, அக்பர் பக்திமான்களுக்கும், யாசகர்முதலான ஏழைகளுக்கும் கொடுத்து விடுவார்.

மாதத்திற்கு ஒருநாள் அக்பர், உலகத்திலுள்ள அதிசயப் பொருள்களை அறியும்பொருட்டு ஒரு தர்பார் நடத்துவார். பலதேசங்களிலிருந்து எல்லா வியாபாரிகளும் அருமையான பொருள்களைக் கொண்டுவந்து அதில் விற்பனைக்கு வைப்பார்கள்; முதலில் அந்தப்புரத்துப் பெண்கள் வந்து அவற்றைப் பார்த்துத் தங்களுக்கிஷ்டமான பொருள்களை வாங்குவார்கள்; அக்பரும் தமக்கு வேண்டிய பொருள்களை வாங்குவார்; பொருள்களின் அதிசயங்களையும் பார்த்து மகிழ்வார். இதனால், கைத்தொழில் விருத்திக்கும், வியாபார விருத்திக்கும் ஏதுவுண்டா யிருந்தது.

அக்பர், கொலு வீற்றிருப்பது மிக்க ஒழுங்கான ஏற்பாடுகளுடன் அமைந்திருக்கும். அவர் சிம்மாசனத்தில் உட்கார்ந்தவுடன் அங்கு வந்தவர்களில் உயர்ந்த அந்தஸ்துள்ளவர்கள் முறைப்படி வணக்கஞ் செய்து ஏவல் கேட்டு நிற்க வேண்டிய சமயத்தில் நிற்பார்; உட்கார வேண்டிய சமயத்தில் உட்காருவர். மற்றவர்கள் தாங்கள் நிற்கவேண்டிய இடத்தில் நிற்பார்கள். முதல் அரசிளங் குமரன் இரண்டுமுழம் முதல் எட்டுமுழ அளவான தூரத்தில் நிற்பான்; இருக்கும் போது நான்குமுழம்முதல் பதினாறுமுழ அளவான தூரத்தில் இருப்பான். இரண்டாவது குமாரன் மூன்றுமுழம்முதல் பன்னிரண்டு முழம் அளவான தூரத்தில் நிற்பான்; ஆறு முழ முதல் இருபத்துநான்கு முழ அளவான தூரத்தில் இருப்பான்; மூன்றாவது குமாரன், இரண்டாவது குமாரனுக்குச் சமீபமாக நிற்பான்; பக்கத்தில் இருப்பான்; சில சமயங்களில் இவ்விருவரும் ஒரே தூரத்தில் சேர்ந்து நிற்பதுண்டு. இளங் குமாரரை அக்பர் அருகில் வைத்துக்கொள்வது முண்டு. உயர்ந்த பதவியில் உள்ள முக்கியஸ்தர்கள் ஆறு முழம் முதல் முப்பது முழ அளவான தூரத்தில் நிற்பார்கள்; பத்து முழம் முதல் நாற்பது முழம் அளவான தூரத்தில் இருப்பார்கள். ஏழு முழ தூரத்துக் கப்பால் பெரிய பிரதானிகளும், இருபது அல்லது இருபத்தைந்து முழ தூரத்திற்கப்பால் மற்றப் பிரதானிகளும் இருப்பர். மற்றவர்கள், அவர்களுக் கப்பால் நிற்பார்கள். கைக்குடை பிடிப்பவரும், விசிறி வீசுவாரும் அக்பருக்குச் சமீபத்தில் நிற்பர்.

அக்பர், கொலுவுக்கு வருமுன் முரசம் முழங்கும். அந்தக் குறிப்பை யுணர்ந்து, தம் குறைகளைத் தெரிவிக்க விரும்புவோர் அவரிடம் செல்வார்கள். அவர்களுக்குத் தடையொன்று மிராது. காலையில் ஒன்பது மணிக்குக் கொலுக்

கூடத்தில் அமர்வது அக்பரின் வழக்கம். சில சமயங்களில் மாலை நேரத்திலும், இரவிலும் கொலுவிருப்பது முண்டு. சில சமயங்களில் அவர் கொலு மண்டபத்திற்குள் வாராமல், கொலுக்கூடம் முழுவதும் கண்ணுக்குத் தெரியும்படியான ஒரு பலகணிக்கப்பாலிருந்து இராஜ காரியம் பார்ப்பது முண்டு.

அக்பர் கொலு வீற்றிருந்தவுடன், இலேககர்கள் அவசியமான காரியக் குறிப்புக்களைத் தெரிவிப்பார்கள்; நியாயாதிபதிகள் விவகாரங்களைத் தெரிவிப்பார்கள்; துரைத்தன உத்தியோகஸ்தர்கள் இராஜகாரியங்களைத் தெரிவிப்பர். அக்பர் ஒவ்வொன்றுக்கும் நியாயமான முடிவு கூறுவார். இராஜ பேட்டிக்கு வந்திருப்பவர்களுக்குப் பேட்டி கொடுப்பார்; பரிசு பெற வந்திருப்பவர்களுக்குப் பரிசளிப்பார்.


இன்னும் அக்பருடைய மகிமைச் செயல்கள் அளவிறந்தவை. இந்தியாவைத் தம் ஒரு குடை நிழலில் ஆளும் பொருட்டு இவர், எல்லா ஜாதியாரையும் அணைத்து, மத துவேஷமும், பாரபக்ஷமும் இன்றித் தகுதியுடைய எந்த மதத்தினருக்கும், எந்த ஜாதியாருக்கும் தலைமையும், உயர்ந்த பதவிகளும் கொடுத்து, இந்து அரச குடும்பங்களில் பெண் கொண்டு சம்பந்தம் செய்து, குடிகளுக்குப் பலவித நன்மைகள் புரிந்து நீதியோடு அரசாட்சி நடத்தி வந்தார். அதனால், இந்தியா முழுவதும் இவருடைய ஆளுகைக் குட்பட்டிருந்தது. சகல ஜனங்களும் இடரற்று வாழ்ந்தார்கள்; எங்கும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை மேலோங்கி வளர்ந்தது; சமாதானம் அதிகரித்திருந்தது; நாற்பத்தொன்பது வருஷ காலம் இவருடைய ஆட்சி செல்வாக்குடன் நடைபெற்று வந்தது. இவருடைய ஆட்சியில் அன்னிய நாட்டார் படை

யெடுப்பு இல்லாமலிருந்தது. இவர், உள்நாட்டு விரோதிகளை யெல்லாம் எளிதில் வென்று இராஜ்யத்தை ஸ்தாபித்தார்; உலகத்தாரெல்லோரும் இவரைக் கொண்டாடினார்கள்; இப்பொழுதும் கொண்டாடி வருகின்றார்கள்.

—:(o):—

3. உடற் பயிற்சி

'உடற் பயிற்சி' என்பது, உடம்பிலுள்ள உறுப்புக்கள் அசைந்து தொழில் செய்யும்படி அவற்றைப் பழக்குவதாம். இந்த உடற் பயிற்சியானது, உடம்பில் நோய் வாராமல் அதனைத் தடுக்கும்; உடம்பிற்கு வலிமையை உண்டாக்



கும். உடற் பயிற்சி செய்யும் மனிதன், "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கிணங்க, நோயில்லாத வாழ்வாகிய செல்வத்தைப் பெற்று எப்பொழுதும் ஆனந்தத்தை

யடைவான். மேலும், நோயற்று நல்ல நிலையோடு கூடி யிருக்கும் உடம்பே அறிவு விருத்தி யடைவதற்கும் ஆதாரமா யிருப்பதால், தேகாப்பியாசம் செய்து உடல் வலிமை பெற்றிருப்பவன் சிறந்த அறிவுடையவனாகவு மிருப்பான்; உடம்பின் வல்லமையைக் கொண்டும், அறிவு விருத்தியைக் கொண்டும் பிறரால் செய்ய முடியாத அரிய பெரிய தொழில்களையெல்லாம் செய்து, எளிதில் பொருளைச் சம்பாதித்து இவ்வுலகில் நீண்ட ஆயுளைப் பெற்று மகிழ்ச்சியோடு வாழ்ந்து, உயர்ந்த ஞானத்தையும் அடைந்து முடிவில் மேலான பதவியிற் சேர்வான்.

இன்னும், உடம்பில் நீங்காத நோயுற்றிருப்பவர்களும் தேகாப்பியாசம் செய்து வந்தால், அந்த நோயினின்றும் நீங்கித் தேகபலம்பெற்று வாழ்வார்கள்; வயது முதிர்ந்தவர்களும் இந்த அப்பியாசத்தினால் இளமை பெற்று விளங்குவர்; இன்னும் உடற் பயிற்சியால் தைரியம், வீரம், ஊக்கம், கட்டழகு முதலியவை அதிகரிக்கும்.

மனிதர் உட்கொள்ளும் ஆகார பேதத்தாலும், காற்றின் பேதத்தாலும், தண்ணீரின் பேதத்தாலும் உடம்பில் சில அசுத்தங்களாகிய நச்சுப் பொருள்கள் உண்டாகிக் கொண்டே யிருக்கின்றன; இவை நாள் தோறும் கிரமமாய் வெளிப்பட்டு விட வேண்டும்; அவ்வாறு வெளிப்படின், மனிதர் உட்கொள்ளும் ஆகாரம் கிரமப்படி ஜீரணமாகிப் பல மாறுதல்களை அடைந்து மல மூத்திரங்களாகவும், ஜீவாதாரமாகிய இரத்த சத்தாகவும் பிரிகின்றது; அசுத்த சத்துக்களாகிய மலங்கள் கழிந்து விடுகின்றன; உடம்பை வளர்க்கும் இரத்த சத்து இரத்தமாக மாறி உடம்பைக் காப்பாற்றுகின்றது. இந்த இரத்தம் பரிசுத்தமா யிருக்க வேண்டும்; அப்படி யிருக்

தால் உடம்பில் நோய் உண்டாகாது; பலம் அதிகரிக்கும். இரத்தம் அசுத்தமா யிருந்தால் நோய் அதிகரிக்கும்; வலிமை குறையும். சுத்தமான இரத்தம் நரம்புகளின் வழியாக விரைந்து உடம்பின் பல பாகங்களுக்கும் செல்லும்; அவ் வாறு சென்று ஆங்காங்குள்ள அசுத்தங்களைக் கிரகித்துக் கொண்டு இருதயத்தை அடைகின்றது; மனிதர் மூச்சு விடும் போது உட்கொள்ளும் காற்று அந்த அசுத்தங்களை இழுத்து வெளிப்படுத்தி விடுகின்றது. இன்னும், வியர்வை வெளிப் படுவதாலும், மல மூத்திரங்கள் கிரமமாகக் கழிவதாலும் அசுத்தங்கள் வெளிப்பட்டு விடுகின்றன. இப்படி அசுத்தங் கள் கிரமமாக வெளியாகிக் கொண்டிருந்தால் மட்டுந்தான் இரத்த ஓட்டம் அதிகரித்து விரைவாக வேலை செய்யும்; அத ஞல் உடம்பில் பலமும் அதிகரிக்கும். அசுத்தங்கள் வெளிப் படாவிடின் மூச்சுப் பை சுருங்கி, இரத்த ஓட்டங் குறையும்; வியர்வை வெளிப்படாது; ஜீரணக் கருவிகள் முதலிய உறுப் புக்கள் பலஹீனப்பட்டு ஜீரணக் குறைவு முதலியவை உண் டாகும்; பலவித வியாதிகளும் உற்பத்தியாகும்; உடம்பி லுள்ள மற்ற உறுப்புக்களும் வலிமை குன்றிப்போம்.

உடற் பயிற்சி செய்தால் இவ்வகைக் குறைவுகள் ஏற் பட மாட்டா; தேகாப்பியாசத்தால் உடம்பிலுள்ள நரம்புகள் கெட்டிப்படுகின்றன; தசை நார்கள் வலிமை யடைகின்றன; மூச்சுப்பை சுருங்காமல் நன்ருய்க் காற்றை யிழுத்து வெளிப் படுத்தக்கூடிய சக்தியைப் பெறுகின்றது; இரைப்பை பலப் பட்டு, உட்கொள்ளும் ஆகாரங்களை நன்ருய் ஜீரணிக்கச் செய் கிறது; வியர்வை வெளிப்படுகின்றது; அசுத்தங்கள் கழிந்து போகின்றன; இரத்த ஓட்டம் அதிகரிக்கின்றது; தேகாரோக் கியம் ஏற்படுகின்றது. தேகப் பயிற்சி செய்யாதவர்களுக்கு உடம்பை வளர்க்கும் கருவிகள் கெட்டு மேற் கூறிய கேடுக

ளெல்லாம் உண்டாகின்றன. ஆகையினுல்தான் தேகாப்பியாசம் மனிதர்க்கு மிகவும் அவசியமானதென்று அறிவுடையவர்களால் போற்றப்பட்டு வருகின்றது.

இந்தத் தேகாப்பியாசமானது, உயிர்களின் நன்மையைக் கருதி, மனிதரும், மற்ற பிராணிகளும் உயிர் வாழ்வதற்குச் செய்யும் இயற்கையான தொழில்களோடு சம்பந்தப்படுத்தியே கடவுளால் அமைக்கப்பட் டிருக்கின்றது; மனிதரும், பிராணிகளும் நடப்பதாலும், ஓடுவதாலும், விளையாடுவதாலும், விவசாய வேலை முதலிய அவயவங்கள் அசையும் வேலைகளைச் செய்வதாலும் இயற்கையாகவே தேகாப்பியாசம் உண்டாகின்றது; குழந்தைகள் கால் கைகளை உதறுவதாலும், துள்ளிக் குதித்து விளையாடுவதாலும் தேகாப்பியாசம் ஏற்பட்டு உடல் வலிமையைப் பெறுகின்றது; மிருகங்கள், பறவைகள் முதலிய பிராணிகளும் அவ்வாறே இயற்கையாகச் செய்யும் உடம்பின் இயக்கத்தால் வலிமை பெற்று நோயற்றிருக்கின்றன; மரங்கள் முதலிய தாவரங்களும் அசைவதால் உறுதி பெற்று நீண்டு வளர்கின்றன. விவசாயிகள், தொழிற்சாலைகளில் வேலை செய்வோர் முதலியவர்களும் தங்கள் தொழில் மூலம் ஏற்பட்டிருக்கும் இயற்கையான உடற்பயிற்சியால் தேக வலிமைபெற்று நோயற்றவாழ்வை அடைகின்றூர்கள். இவ்வாறு இயற்கையான உடற் பயிற்சியைக் கொண்டிருக்கும் மனிதரும், பிராணிகளும் உடல் வலிமையோடு நெடுங்காலம் உயிர் பெற்றிருப்பதை நாம் பார்க்கிறோம்.

இவ்வாறு இயற்கையான உடற் பயிற்சியால் அடையும் பலத்தைக் காட்டினும், விசேஷ வலிமையை அடைவதற்கு நம் நாட்டில் பண்டைக்காலத்திலிருந்த புத்திமான்கள்

செயற்கையான சில தேகாப்பியாச முறைகளையும், அவற்றை அப்பியாசிப்பதற்குச் சிலம்பப் பள்ளிக்கூடங்களையும் ஏற்படுத்தினார்கள்; அப் பள்ளிக்கூடங்களில் மனிதர் மல்யுத்தம் செய்தல், தாவிக் குதித்தல், சிலம்பம்பழகுதல், ஓடுதல், தண்ணீரில் நீந்துதல், படகு ஓட்டுதல், கால்பந்து எறிபந்து குழிப்பந்து முதலிய பந்து விளையாட்டுக்கள், கஸரத் செய்தல், தண்டால் எடுத்தல், பஸ்கி போடுதல், காலாச் சுற்றுதல் முதலிய அப்பியாசங்களைச் செய்து வந்தார்கள். அந்த அப்பியாசங்களால் பலர் உடல் வலிமை பெற்றுச் சிறந்த வீரர்களாய் விளங்கி வந்தார்கள்.

இவ்வாறு பல விதத்திலும் நன்மையை உண்டாக்கத் தக்க தேகாப்பியாசப் பழக்கமானது இக்காலத்தவர்களால் கைநழுவவிடப்பட் டிருக்கின்றது; இயற்கையான உடற் பயிற்சியையும் அநேகர், நாகரிக மயக்கத்தால் அடியோடு தொலைத்து விட்டிருக்கின்றனர். தேகாப்பியாசத்தால் உண்டாகும் நன்மையைப் பலர் சிறிதும் உணராதிருக்கின்றனர். சிலர், தேகாப்பியாசமானது முரடர்களும், போக்கிலிகளும், நாகரிக மில்லாதவர்களும் செய்யும் வேலையென்றும், தாங்கள் அதைச் செய்வது கௌரவக் குறைவான காரியமென்றும் நினைத் திருக்கிறார்கள். இவ்விதம் தேகாப்பியாசத்தின் உயர்வை அறியாதிருப்பதாலும், பேதைமையான அபிப்பிராயத்தாலும், அநேகர் விவசாயம், கைத்தொழில் முதலிய இயற்கைத் தேகாப்பியாசத் தொழில்களை அறவே ஒழித்து விட்டுச் சோம்பேறிகளாயிருக்கின்றனர்; செயற்கையான தேகாப்பியாச முறைகளையும் செய்யாமல் மூக்குப் பிடிக்கப் பெருந் தீனி தின்று விட்டு எப்பொழுதும் கும்பகர்ணனைப் போல உறங்கிக்கிடக்கின்றனர்; வெளியேறி நடக்காமல் வீட்டிற் குள்ளேயே அடைக் கோழிகளைப்போல அடைபட்டுக்

கிடக்கின்றனர்; ஒரு பர்லாங்கு தூரம் நடப்பதற்கும் வண்டியேறிச் செல்கின்றனர்; தங்கள் ஆடைகளைத் தோய்க்கவும், உடம்பைத் தேய்க்கவும் வேறு வேலைக்காரர்களைத் தேடுகின்றனர்; சிலர், ஆகாரத்தை ஊட்டி விடுவதற்கும் ஒரு ஆளைத் தேடுகின்றனர்.

இவர்கள், இவ்வாறு தங்கள் உடம்பை ஒன்றுக்கும் உதவாமல் செய்து கொள்வதால் இவர்களிற் பலர் தொந்தியும், தொப்பையும் இறங்கப் பெரிய யானையைப்போல உடல்பெருத்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு விக்கினேசுரர் போலவும், மணல் தவளைகளைப் போலவும் தத்தித்தத்தி நடந்து திரிகின்றனர்; இவர்களுக்குக் கால்கள் சூம்பிப் போகின்றன; ஜீரணக் குறைவும், பசி மந்தமும், புளியேப்பமும், நித்திரா பங்கமும் உண்டாகின்றன; இவர்கள் கால்களை முடக்கிப் படுத்துக்கொண்டு புரண்டு புரண்டு வருந்துகின்றார்கள். இன்னும் இவர்களுக்கு உடம்பில் அசுத்தங்கள் நிறைந்து, ஜீரணக் கருவிகள் கெட்டு, மலச்சிக்கல் ஏற்பட்டு வேறு பல நோய்களும் உண்டாகின்றன; இந்த நோய்களைப் போக்குதற்கு இவர்கள் எப்பொழுதும் மருந்துகளை உண்டு அம் மருந்துகளாலும் பல கெடுதிகள் ஏற்பட்டு வருந்துகின்றார்கள்; இளமையிலேயே உடலில் பலமின்றிக் கிழத் தன்மையை அடைகின்றார்கள்; பலர்குறைந்த ஆயுளுடையவர்களாய் இறந்து போகின்றார்கள். இவ்வளவு கெடுதிகளும் உடற்பயிற்சி யில்லாமையால் அல்லவா ஏற்படுகின்றன?

சில பணக்காரர்கள், இவ்வாறு தேகாப்பியாசமின்றித் தங்களுக்குப் பல நோய்களுக்கிடமாய்த் தொந்தியிறங்குவதைத் தங்கள் கௌரவத்திற்குரியதென்றும், தங்களுக்கு அழகைத் தருவதென்றும் நினைக்கின்றார்கள்; இவர்களுக்குத்

தொப்பையர் என்றும், தொந்திக் கருப்பர் என்றும், தொந்தி சேர்வை யென்றும் பட்டப் பெயர்களும் ஏற்பட்டு விடுகின் றன. இவர்கள் இதைக் கெடுதி யென்று நினைக்காமல் இவ் வாறு கௌரவமென்று நினைப்பது மிகவும் அறியாமை யாகும்.

நம் நாட்டிலுள்ளவர்கள் இப்படி உடற்பயிற்சி செய்யா மல் பற்பல கெடுதிகளுக்குள்ளானாலும் மேல்நாட்டுக்காரர்கள் உடற் பயிற்சியின் நன்மையை உணர்ந்து, அதைச் செய்து பலமுள்ள உடம்பையும், தேகாரோக்கியத்தையும், நோயற்ற வாழ்வையும், நீண்ட ஆயுளையும், தைரியத்தையும், வீரத்தை யும், விடா முயற்சியையும் பெற்று எதிலும் வெற்றி யடைந்து, எளிதில் பொருளைத் தேடிப் பல இன்பங்களையும் அனுபவித்து வருகின்றார்கள்; மேல் நாட்டில் பள்ளிக் கூடங் களில் மாணவர்களுக்குப் படிப்பு ஒரு பங்கும், உடற்பயிற்சி இரண்டு பங்குமாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இத் தாலியா தேசத்திற் பிறந்த, 'யூஜின் சாண்டோ' என்பவர், இளமையில் நோயுற்றவராயும், பல மில்லாதவராயு மிருந்தும் உடற்பயிற்சிசெய்து அழகும் பலமும் பொருந்திய உடம்பைப் பெற்று, அற்புதமான காரியங்களை யெல்லாம் செய்து, 'கலி யுக வீமன்' என்று பலராலும் கொண்டாடப்பட்டுத் தம் உடம்பையே ஒரு காட்சிப் பொருளாகப் பல தேசத்தார் களுக்கும் காட்டி வந்தார்; புலியுடனும் சண்டை போட்டு அதை வதைத்திருக்கின்றார். 'ஆர்தர் சாக்சன்' என்பவரும் உடற் பயிற்சியால் பல நன்மைகளை அடைந்து அதன் உயர்வை எடுத்துக் கூறி யிருக்கின்றார். 'லீடர்மான்' என் பவர் உடற் பயிற்சி செய்து பெரிய நன்மை அடைந்ததாகக் கூறுகின்றார். 'சான்போர்டு பெனட்' என்னும் அமெரிக்கர், இளமையிலே தீராத நோயுற்றிருந்து, உடற் பயிற்சி செய்து

எழுபதாம் வயதில் இளமையைப் பெற்றிருக்கின்றார். நம் நாட்டிலுள்ள புரோபசர் இராமமூர்த்தி முதலிய அறிஞர்களும் பிற்காலத்தில் தேகாப்பியாசத்தால் உடல் வலிமை பெற்றுப் பல அற்புதச் செயல்களைச் செய்து காட்டி யிருக்கின்றனர்.

ஆதலின், திடதேகத்தையும், நீண்ட ஆயுளையும் பெற்று நோயற்ற வாழ்வை அடைய விரும்புவோர் ஒவ்வொருவரும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்; முக்கியமாகக் கல்வி கற்கும் மாணவர்கள் அதைக் கைக்கொள்ள வேண்டும். 'பர்னர் மெக் பாடன்' என்னும் அமெரிக்க ஆசிரியர் உடற்பயிற்சியில் மிகத் தேர்ச்சியடைந்து, 'உடற் பயிற்சித் தகப்பன்' எனச் சிறப்புப் பெயர் பெற்றிருக்கின்றனர்; உடற் பயிற்சியைப் பற்றிப் பல நூல்களை வெளிப்படுத்தி யிருக்கின்றார்; 'உடற் பயிற்சி' என்னும் பத்திரிகையையும் நடத்தி வந்திருக்கின்றார்; இவரைப் போலவே நம் நாட்டிலும் பல உடற் பயிற்சி ஆசிரியர்கள் ஏற்பட வேண்டும்; தேகாப்பியாசத்தைப் பற்றிய பல நூல்களும், பத்திரிகைகளும் வெளிப்பட வேண்டும்; உடற் பயிற்சிச் சாலைகளும் அமைக்கப்பட வேண்டும்; உடற் பயிற்சியை விருத்தி செய்ய வேண்டும்.

உடற் பயிற்சி செய்வதற்குக் காலையும், மாலையுமே ஏற்ற காலங்களாம். ஆகாரம் சாப்பிட்டவுடன் தேகப் பயிற்சி செய்வது கூடாது; உணவுண்ட ஒரு மணி நேரத்துக்குப் பிறகே உடற் பயிற்சி செய்யவேண்டும்; தேகப்பயிற்சி செய்வதற்குக் காற்றோட்ட முள்ள இடமே தக்கதாகும்; ஜனக்கூட்ட முள்ள இடங்களிலும், அசுத்தமான இடங்களிலும் தேகப் பயிற்சி செய்வது கூடாது; இவ்விடங்களிற் செய்வதால்

கெடுதியே விளையும்; உடற்பயிற்சி செய்வோர், சீக்கிரம் வியர்வையை இழுத்துக்கொள்ளும் உல்லன், ட்வில் முதலிய துணிகளினால் ஆகிய உடையை அணிந்து கொள்ளவேண்டும்; தேகப்பயிற்சி செய்தவுடன் உடையை நீக்குதல் கூடாது; குளிர்ந்த தண்ணீரில் குளிப்பதும் கூடாது; தேகப் பயிற்சியில் தேர்ந்த ஆசிரியர் சொல்லி வைக்கும் முறைப்படியே உடற் பயிற்சிகளைச் செய்யவேண்டும்; தேகப் பயிற்சிசெய்யும்போது மூக்கின்வழியாகச் சுவாசத்தை இழுத்து வெளியில் விடவேண்டும்; வாயினால் மூச்சை இழுத்து விட லாகாது; உடம்பில் உள்ள பல உறுப்புக்களும் வலிமை அடையுமாறு அது அதற்குத்தக்க தேகாப்பியாசங்களைச் செய்ய வேண்டும்; மல்யுத்தம் செய்தல், சிலம்பம் அடித்தல், பஸ்கி போடுதல், கசரத் செய்தல், பந்தாடுதல், ஓடுதல் முதலிய அப்பியாசங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உறுப்பைக் கெட்டிப்படுத்தக் கூடியதாகும். ஆதலின், ஒவ்வொரு அப்பியாசத்தையும் கிரமப்படி செய்யவேண்டும். தேகப் பயிற்சியை ஏற்பட்ட அளவுப்படி செய்ய வேண்டும்; அளவுக்கு மிஞ்சிச் செய்தல் கூடாது; ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக் கேற்பட்ட உடல் வலிமைக்குத் தக்கபடி முதலில் குறைந்த அளவாக ஏற்படுத்திப் படிப்படியாக அதிகப் படுத்திக்கொண்டு போக வேண்டும்.

உடற் பயிற்சி ஆண்மக்களுக்கு மாத்திரம் உரிய தன்று; பெண் மக்களுக்கும் மிக அவசிய மானதே. ஆதலின், ஆண், பெண் ஆகிய இருபாலாருமே தேகப் பயிற்சி செய்தல் வேண்டும்; இளைஞரும் செய்யலாம்; வயது முதிர்ந்தவர்களும் செய்யலாம்.

பெரும்பான்மையும் நம்முடைய நாட்டில் கல்வி கற்கும் மாணவரும், உத்தியோகம் செய்வோரும், பணக்காரருமே

உடம்பில் பலங் குன்றியவர்களா யிருக்கின்றனர். இவர்கள் தினந்தோறும் ஒருமணி நேரமாவது உடற் பயிற்சி செய்தல் வேண்டும். தேகப் பயிற்சி ஒவ்வொரு மனிதரின் இயற்கைக்குத் தக்கபடி வெவ்வேறு வகையா யிருக்க வேண்டும்; சிறுவர் ஆடுதல், ஓடுதல், துள்ளி விளையாடல் முதலியவற்றில் பழக வேண்டும்; வாலிபர் பந்தாடுதல், கசரத்துச் செய்தல், பஸ்கி போடுதல் முதலிய அப்பியாசங்களைச் செய்யவேண்டும்; வயது முதிர்ந்தவர் நடத்தல், குதிரைச் சவாரி செய்தல் முதலியவற்றில் பழக வேண்டும்; இங்குக் கூறப்பட்ட செயற்கையான தேகாப்பியாச முறைகளைச் செய்ய இயலாதவர்கள் இயன்றவரை தங்கள் தங்களுக் கேற்பட்ட சிறு வேலைகளையாவது உறுப்புக்கள் அசையும்படி செய்துவர வேண்டும்; இவ்வாறு எல்லோரும் உடற் பயிற்சி செய்வதோடு நாள் ஒன்றுக்கு எட்டுமணி நேரம் தூங்கவேண்டும்; பரிசுத்தமான காற்றுள்ளவிடத்தில் சஞ்சரிக்க வேண்டும்; நல்ல தண்ணீர் பருக வேண்டும்; அளவுப்படி ஆகாரங் கொள்ள வேண்டும். பெருந் தீனியை ஒழிக்கவேண்டும்; தினந்தோறும் மலத்தைக் கழிக்க வேண்டும்; எப்பொழுதும் நிமிர்ந்திருக்க வேண்டும்; அளவுக்கு மிஞ்சி வேலைசெய்ய லாகாது; சினம், கவலை ஆகியவற்றைப் போக்கி மகிழ்ச்சியுட னிருக்கவேண்டும்; வேண்டிய அளவுப்படி சூரியவொளியை அனுபவிக்கவேண்டும்; சுருட்டு, புகையிலை, கஞ்சா, மது ஆகியவற்றை உபயோகிக்கும் பழக்கத்தை அறவே ஒழிக்க வேண்டும்.

இந்த முறைகளை அனுசரித்து ஒவ்வொருவரும் தேகப் பயிற்சி செய்து வந்தால் உடல் வலிமை, அறிவு, மனவுறுதி, அன்பு, பொறுமை, நன்னடக்கை, வீரம், அஞ்சாமை, கல்வி,

ஞானம், நீண்ட ஆயுள் முதலியவற்றைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழலாம்.

4. மாம்பழக் கவிராயர்.

தமிழ் நாட்டில் முற்காலத்திலும், பிற்காலத்திலும் எண்ணிறந்த தமிழ்ப் புலவர்கள் தோன்றிக் கீர்த்தியை நிலை நாட்டியிருக்கின்றார்கள். பிற்காலப் புலவர்களில் மாம்பழக் கவிராயரும் ஒருவர். இவர், தம்மை ஒருவர் பார்த்து, "இன்ன விதமான கவி பாடவேண்டும்" என்று சொன்னமாத்திரத்தில் அந்தக் கவியை விரைந்து பாடும் ஆசுகவித்திறம் பெற்றவர்; சித்திர கவிகள் பாடுவதிலும் சாமார்த்தியமுடையவர். பல சிற்றரசர்களாலும், பிரபுக்களாலும் கொண்டாடப்பெற்றவர். இவர் சரிதை படிப்பவர்க்கு மிக்க ஆனந்தத்தை ஊட்டும்.

இவர், பாண்டிநாட்டைச் சார்ந்த, 'திருவாவினன் குடி' என்னும் பழனித்தலத்தில், விசுவப்பிரம குலத்தில், 'முத்தையாசாரியார்' என்னும் பெரியாருக்கு, கி. பி. 1836-ம் ஆண்டில் இரண்டாம் புத்திரராகப் பிறந்தவர். இவருடைய மூதாதையார், மதுரையில் அரசாண்ட திருமலை நாயக்கர் காலத்தில் கோவில் திருப்பணி வேலை செய்து வந்தார். அவர், சிற்பத்தொழிலில் மிக்க திறமை பெற்றிருந்ததோடு, இனிமையாகப் பேசும் வாக்குச் சாதுரியமுடையவராயுமிருந்தார். திருமலை நாயக்கர், அவருடைய சிற்ப வேலைத் திறமைக்காக மகிழ்ந்து அவருக்கு உயர்ந்த பொருள்களைச் சன்மானம் செய்ததோடு, பேச்சின் இனிமையைப் பாராட்டி அதற்காக,

'மாம்பழம்' என்ற பட்டப் பெயரையும் கொடுத்தார். அப் பெயர் அதுமுதல் அவருக்கு வழங்கி வந்ததோடு, அவர் மர பில்உதிக்கும் பிள்ளைகளுக்கும், அவர் குலப்பெரியோர்களால் சூட்டப்பட்டு வழங்கி வந்தது. அவ்வழக்கப்படியே இவருக் கும் இவருடைய தந்தையார் அப்பெயரையே சூட்டினர். அப்பெயருடன் இவர் வளர்ந்து வந்தார்.

அப்படி வளர்ந்துவருங் காலத்தில், இவருக்கு மூன்று வது வயதில் அம்மை என்னும் வைசூரிநோய் உண்டாயிற்று. அதனல் இவர் மிகுந்த துன்பத்தையடைந்தார். இவருடைய தந்தையார், அதற்குத் தக்க பரிகாரங்களை யெல்லாம் செய்து பார்த்தார்; எதனலும் நோய் தணியவில்லை; மேலும் மேலும் துன்பம் அதிகரித்தது. இப் பிள்ளை படுந் துன்பத்தைப் பார்த் துத் தந்தையார் சகிக்காது வருந்தி, "இந்நோயைத் தீர்க்கத் தக்கவர் பழனியாண்டவர் தவிர வேறெவருமிலர்" என்று நிச்சயித்து, இவரைப் படுக்கையுடன் எடுத்துக்கொண்டு போய்ப் பழனிக் குமார சுவாமியின் சந்நிதியிற் கிடத்தி, "எம்பெருமானே! இக்குழந்தையின் வேதனையைத்தீர்ப்பதுன் கடன்" என்று அக்கடவுளைத் துதித்து, முருகக் கடவுளின் பிரசாதமாகிய திருநீற்றைக் குழந்தைக் கணிந்து, "இப்பிள்ளை நின் அடைக்கலம்" என்று சொல்லி வீட்டிற்குப் போய் விட்டார்.

மறுநாள் காலையில் முத்தையாசாரியார் எழுந்து சண் முக நதியில் நீராடி, நித்திய கடன்களை முடித்துக் கொண்டு, குமாரக் கடவுளின் பூஜைக்குரிய பொருள்களை எடுத்துக் கொண்டு சுற்றத்தாருடன் கோவிலுக்குப் போய்க் குழந்தை யைப் பார்த்தார். பிள்ளையின்உடல்முழுதும் மிகவும் நெருக்

கமாயிருந்த அம்மைப் புண்களெல்லாம் ஆறியிருந்தன். அவ்வாறு குழந்தை சௌக்கியமடைந்ததைக் கண்டவுடன் ஆசாரியார், "இது குமாரக்கடவுளின் கிருபையே!" என்று குமாரக் கடவுளைத் துதித்துக் குழந்தையை அன்புடன் எடுத்து மார்போடணைத்துக் கொண்டு பிள்ளையின் முகத்தைப் பார்த்தார். குழந்தைக்கு அம்மைப் புண்கள் ஆறியும் கண்களிரண்டும் பின்னப்பட்டிருந்தன. அவ்வாறு கண்கள் கெட்டிருந்ததை, ஆசாரியார் பார்த்தவுடன், "ஐயோ! குழந்தை சௌக்கியமடைந்தும் கண்ணிழந்தவனாயிருக்கின்றானே; கண்ணில்லாத இக்குழந்தையின் வாழ்க்கை உலகத்தில் எவ்வாறு இனிதாக நடைபெறும்?" என்று வருந்தினார். பின்னர், "அம்மைப்பிணியை நீக்கியருளிய முருகக் கடவுளே, கண்ணிழந்த இப்பிள்ளையைக் காப்பாற்றுவார்" என்று மனந்தேறிக் குமாரக் கடவுளுக்குப் பூசனை புரிந்து கோவிலை வலங்கொண்டு குழந்தையை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தார்.

அதுமுதல் மாம்பழம் நலத்துடன் வளர்ந்து வந்தார். இவருக்கு ஐந்துவயதடைந்தபோது, தந்தையார் கல்வி கற்பிக்கக் கருதி ஒரு நல்லநாளில், இவரை மடியிற் படுக்கவைத்துக்கொண்டு இவர் முதுகில் தமிழ் எழுத்துக்களை ஒவ்வொன்றாக எழுதி, 'இன்னது இன்ன எழுத்து' என்று இவருக்குத் தெரிவித்தார். அந்த ஒரு தினத்திலேயே இவர், உயிரெழுத்துக்களையும், மெய்யெழுத்துக்களையும் தெரிந்து கொண்டார்; பிறகு சிலதினங்களில் உயிர்மெய்யெழுத்துக்களையும், அவற்றின் பிறப்பு, பாகுபாடு முதலியவற்றையும் கற்றுக்கொண்டார்; அதன்மேல் எழுத்துக்களைக் கூட்டிப் பதங்களையும், வாக்கியத் தொடர்களையும் படிக்கக் கற்றுக்கொண்டு அவற்

றைக் கற்பலகையில் வரிகோணுமல் எழுதியும் தந்தைக்குக் காட்டினூர்.

இவ்வாறு மைந்தன், தனக்குக் கற்பிக்கும் பாடங்களை விரைந்து கற்றுக்கொள்ளும் சக்தி வாய்ந்திருப்பதைக்கண்டு, தந்தையார் மிகவும் மகிழ்ச்சியுற்று, "இப்பிள்ளை சிறந்த வித்வானுதல் கூடு"மென்று துணிந்து, ஓர் ஆசிரியரை வீட்டிற் கழைத்துவந்து இவருக்குக் கல்வி போதிக்கும்படி செய்தார். மாம்பழம் அந்த ஆசிரியரிடம் கல்வி கற்கத் தொடங்கிய சிலமாதங்களுக்குள்ளாகவே கணிதம்,இலக்கியம், இலக்கணம் முதலிய நூல்களையெல்லாம் கற்றுக்கொண்டார். அதன்மேல் இவருக்குப் பாடம் சொல்லப் பல ஆசிரியர் ஏற்பட்டார்கள்; பல நூல்களையும் கற்பித்தார்கள். அவர்கள் ஒவ்வொருமுறை பாடல்களைப் படித்துச் சொன்னவுடன் இவர் மனப்பாடம் செய்துகொள்ளும் சக்தியைப் பெற்றிருந்ததால், தம்முடைய இளமைப் பருவம் நீங்கு முன்னரே சில வருடங்களுக்குள் தொல்காப்பியம் முதலிய பெரிய இலக்கண நூல்களையும், உயர்ந்த இலக்கிய நூல்களையும், சமய நூல்களையும், வேதாந்த சித்தாந்த நூல்களையும், சோதிடம் சங்கீதம் முதலிய நூல்களையும் எளிதிற் கற்றுக்கொண்டதோடு,வடமொழியிலும் தேர்ச்சியடைந்தார்; உலகநடைகளையும் நன்குணர்ந்துகொண்டார்; விரைவில் கவிபாடுந் திறமையும் பெற்றூர்; கவிராயர் என்ற பட்டத்திற்கும் உரியவரானூர்.

இவ்வாறு பலநூல்களையும் கற்றுக் கவிபாடுந் திறமும், கவிராயர் என்ற பெயரும் பெற்றபின் இவர், முருகக் கடவுளின்மீது மிக்க பக்தியுடையவராய்ப் பழனிப்பதிகம், குமார குருப் பதிகம், செந்திற் பதிகம், சிவகிரிப் பதிகம் முதலிய நூல்களை இயற்றினூர். அதன்மேல் ஆசுகவித்திறமையும்,

சித்திரகவி இயற்றும் சாமார்த்தியமும், பிரசங்க வன்மையும், ஒருவர் ஒருகவியை ஒருமுறை சொன்னவுடன் ஞாபகப்படுத்திக்கொள்ளும் சக்தியும் பெற்றுப் பல்லக்கேறித் தாம் சொல்லும் கவிகளை எழுதும் கையேட்டுக்காரருடன், கல்வியருமை தெரிந்த பிரபுக்களிடம் சென்று தம் கவித்திறம் காட்டிச் சன்மானம் பெறும் வழக்கத்தை மேற்கொண்டார்.

அவ்வாறு பிரபுக்களிடம் சென்று புகழ் பெற்று வருங் காலத்தில், 'முகவை' என்னும் இராமநாதபுரத்தில் முத்து ராமலிங்க சேதுபதி அரசு செலுத்திவந்தார். அவரும், அவருடைய சகோதரராகிய பொன்னுச்சாமித் தேவரும் தமிழில் மிக்க பாண்டித்திய முடையவர்களாயும், தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பவர்களாயு மிருந்தார்கள். மாம்பழக் கவிராயர் அவர்கள் தமிழ் வளர்க்கும் இயல்பினை யுணர்ந்து அவர்களிடம் செல்ல விரும்பி ஒரு சமயம் இராமநாதபுரத்திற்குப் போனார். அங்குப்போய் ஒரு விடுதியில் தங்கியிருந்துகொண்டு மன்னர் பேட்டி காணும்பொருட்டு அவர்களுக்குச் சீட்டுக்கவியொன்றெழுதிக் கையேட்டுக்காரர்களிடம் கொடுத்தனுப்பினார்.

முத்துராமலிங்க சேதுபதியும், பொன்னுச்சாமித் தேவரும் அக்கவியைப் பார்த்தார்கள் அது மிகவும் கற்பனை நயங்கள், பொருந்தியதா யிருந்தது. அதையுணர்ந்து இருவரும் மகிழ்ந்தார்கள். எனினும், மாம்பழக்கவிராயர் கண்ணிழந்தவரென்பது அவர்களுக்குத் தெரியும். 'கண்ணில்லாதவரை அரசர் பார்ப்பது தகாது' என்னும் ஒரு கொள்கை அங்கே ஏற்பட்டிருந்தது. ஆதலால், அவ்விருவரும் கவிராயருக்குப் பேட்டி கொடுக்க இசையவில்லை. கையேட்டுக்காரர்கள் திரும்பிச் சென்று கவிராயரிடத்தில், சேதுபதிகளின் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். கவிராயர், "நான் அவர்க

ளேக்கண்டு அவர்களிடம் சன்மானம்பெற்ருலன்றி இவ்வூரை விட்டுப் போகேன்'' என்று அவ்விடத்திலேயே தங்கி யிருந்தார்.

அப்படி யிருக்கும்போது ஒருநாள் பொன்னுசாமித் தேவர், தம்முடைய சமஸ்தான வித்துவான்களிடத்தில் இலக்குமி தோத்திரமாகிய வடமொழிச் சுலோகமொன்றைக் கொடுத்து, "இதன் கருத்தைத் தமிழில் ஒரு வெண்பாவாக எவரேனும் இயற்றித்தரல் வேண்டும்'' என்று கூறினர். அவர்கள் அவ்வாறே முயன்று பார்த்தும், அவர்களால் அஃ தியலாமற் போயிற்று. மறுநாள் அப்புலவர்களில் ஒருவர், மாம்பழக் கவிராயரிடம்வந்து, அவருடைய கவித் திறத்தைப் பரீட்சித் தறியும் பொருட்டு, அந்தச் சுலோகத்தைப் படித்து, "இதனை வெண்பாவாக இயற்றும் பார்ப்போம்'' என்று கூறினர். அதனைக் கேட்ட மாத்திரத்திலேயே கவி ராயர், வெண்பாவாக எழுதி அவரிடம் கொடுத்தார். அந் தப் புலவர் மிகவும் அதிசயமுற்று அவ் வெண்பாவைக் கொண்டுபோய்ப் பொன்னுச்சாமித் தேவரவர்களிடத்தும், முத்துராமலிங்கசேதுபதி யவர்களிடத்தும் காட்டி, மாம்பழக் கவிராயரின் கவி பாடுந் திறமையைக் கூறினர். அவர்கள் அவ் வெண்பாவின் நயத்தைப் பார்த்து மகிழ்ந்து, மாம்பழக் கவி ராயரைத் தம் சமுகத்திற்கு அழைத்து வரும்படி சிலரை அனுப்பினர்கள்.

மாம்பழக் கவிராயர் அவர்கள் முன் சென்று ஒவ்வொரு வர்மீதும் ஒவ்வொரு கவியைப் பாடி, அவர்களை நோக்கி, "இறைவர்களே! நான் தங்களுடைய பேட்டியைக் காண வந்தும் அது கிடைக்காததால் பல தினங்களாகக் காத்திருந் தேன்; இன்றுதான் உங்களுக்கு என்மீது கருணை வந்தது போலும்!'' என்று கூறினர். பின்னர் இருவரும் கவிராய

ருக்கு உபசார மொழிகள் கூறிப், பல செய்யுட்களுக்கு ஈற் றடிகள் அமைத்துச் சொல்லி, "இச் செய்யுட்களைப் பூர்த்தி செய்யவேண்டும்" என்றனர். கவிராயர் உடனே அவற்றைப் பாடி முடித்தனர். பின்னர் சேதுபதிகள், "அருணகிரியார் செய்த திருப்புகழில், 'முத்தைத்தரு' என்னும் செய்யுளின் முதலடி முழுவதையும் ஒரு வெண்பாவில் அடக்கிப் பாட வேண்டும்" என்றனர். கவிராயர் அவ்வாறே அதனையும் இயற்றினார். அதன்மேல் சேதுபதிகள் எலிக்கும் புலிக்கும் சிலேடை அமைத்து ஒரு வெண்பாவும், நான்கு காசி வர ஒரு வெண்பாவும், ஆறு காசி வர ஒரு வெண்பாவும், பத்துக் காசி வர ஒரு வெண்பாவும், பதினான்கு காசி வர ஒரு வெண்பா வும் இயற்றுமாறு கூறினர். கவிராயர் அவ்வாறே அவற்றை யும் விரைந்து பாடி முடித்தனர். மேலும் அவர்கள் விருப்பப் படி பிறரால் இயற்ற முடியாத சித்திர கவிகளையும், தனிக் கவிகள் பலவற்றையும் இயற்றி அவர்களை மகிழ்வித்தனர். சேது மன்னர் அவற்றைக் கேட்டுப் பேரானந்தமுற்றுக் கவி ராயருக்குப் பொற் சிவிகையும், பொன்னாபரணங்களும், பட் டுப் பீதாம்பரங்களும், செம் பொன்னும் பரிசளித்து, 'கவிச் சிங்கம்' என்னும் பட்டமுங் கொடுத்தார்கள். பொன்னுச் சாமித் தேவர், மாம்பழக் கவிச்சிங்க நாவலர் குமாரக்கடவுள் மீது இயற்றியிருந்த பிரபந்தங்களைக் கேட்டு மகிழ்ந்து அவற் றிற்குச் சாற்றுக்கவி யொன்றும் எழுதிக் கொடுத்தனர். இவ் வாறு அம் மன்னர்களால், கவிராயர் கொண்டாடப்பட்டு இராமநாதபுரத்திலேயே தங்கிக் கவித் திறங்களால் அவர்களை மகிழ்வித்து வந்தனர்.

இப்படியிருக்குங் காலத்தில், வடநாட்டு வாசியாகிய 'விசுவநாத பாரதியார்' என்ற தமிழ்ப் புலவர் ஒருவர் சேது பதி அவர்கள்மீது பிரபந்தமொன் றியற்றிக்கொண்டு அதனை

அரங்கேற்றும் பொருட்டு ஒருநாள் இராஜ சமுகத்திற்கு வந்தார். அவர் மாம்பழக் கவிராயருடைய கல்வித் திறமையைப்பற்றி முன்னரே கேள்விப்பட்டிருந்தார். அவர் வந்த சமயத்தில் மாம்பழக் கவிராயரும் இராஜசமுகத்திலிருந்தார். இவரைக் கண்டவுடன் பாரதியார் திடுக்கிட்டு, "இவர் இல்லாத சமயத்தில் நம் பிரபந்தத்தை அரங்கேற்றினுல் மாத்திரந்தான் அது மன்னரால் ஏற்றுக் கொள்ளப்படும்; அரங்கேற்றும்போது இவர் இருந்தால் ஏதேனும் குற்றங்கூறிப் பிரபந்தத்தை மன்னர் ஏற்றுக் கொள்ளாதபடி செய்து விடுவார்; ஆதலால், இவரை அகற்றிவிடுவதற்கு ஓர் உபாயஞ் செய்ய வேண்டும்" என்று தீர்மானித்து, "குருடராயிருக்கும் இவர் சபையிலிருப்பது அமங்கலமாகும்; சபை மங்கலமின்றியிருக்கும்போது நூல் அரங்கேற்றுதல் கூடாது" என்ற குறிப்பு விளங்கும்படி, சேதுபதி அவர்களிடம், "மன்னர் பெருமானே! நான் தங்கள்மீது நூறு செய்யுட்களால் ஒரு பிரபந்தம் இயற்றிக் கொண்டுவந்திருக்கின்றேன்; இதனை அரங்கேற்றவேண்டும்; அதற்குச் சபை மங்கலத்தோடு கூடியிருக்க வேண்டும்" என்று மெதுவாகக் கூறினர். சேதுபதி அக்கருத்தை யுணர்ந்து அவர் நோக்கப்படி கவிராயரை அகற்ற இசையாமல், "சபை என்றும் அமங்கலமாகத் தோற்றவில்லை. உம்முடைய பார்வைக்கு அப்படித் தோற்றுகிறது போலும்; நீர் உம்முடைய நூலை அரங்கேற்றலாம்" என்று கூறினர். இவர்கள் பேசிக்கொண்ட வார்த்தைகளின் கருத்தை மாம்பழக் கவிராயர் உணர்ந்து கொண்டார். அப்படி உணர்ந்தும் தெரிந்து கொள்ளாதவர்போல் நடித்து, "பாரதியாரின் கெட்ட எண்ணத்திற்கு ஏதேனுமொரு பரிகாரம் செய்து அவருக்குப் புத்தி புகட்ட வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டிருந்தார்.

பாரதியார், தாம் பாடிவந்த நூறு செய்யுட்களையும் எல்லோரும் கேட்கும்படி கூறி அரங்கேற்றினர். மாம்பழக் கவிராயர், பிறர் ஒருமுறை சொன்னதை மனப்பாடம் செய்து கொள்ளும் ஏக சந்தக் கிராகியாதலால், அந்த நூறு பாடல்களையும் பாடஞ் செய்துவிட்டார். பாரதியார் செய்யுட்களெல்லாவற்றையும் சொல்லி முடித்தவுடன், மாம்பழக் கவிராயர், பதற்றமுடையவர்போல நடித்து, "ஆ! ஆ!! இஃதென்ன அனியாயம்! நான் சில வருடங்களுக்கு முன் இந்தப் பிரபந்தத்தை ஒரு பிரபுவின்மேற் பாடி அவரிடம் சன்மானம் பெற்றிருக்கிறேன்; இவர் எப்படியோ இதைக் காப்பி செய்து பேர்களை மாத்திரம் மாற்றிக்கொண்டு வந்திருக்கிறார்; இவரை எளிதில் விடலாகாது" என்றார். பாரதியார் திடுக்கிட்டுப் புலவர் முகத்தை நோக்கினர்; பொன்னுச்சாமித் தேவர், 'இதற்கென்ன சொல்கிறீர்?' என்று பாரதியாரைக் கேட்டார். பாரதியார், "இப்பிரபந்தம் இவர் இயற்றியதாயிருந்தால், இதன் செய்யுட்களிற் சிலவற்றைக் கூறட்டும்" என்றார். மாம்பழக் கவிராயர் ஒவ்வொரு கவியிலும் வேறு பெயர் வைத்து எல்லாக் கவிகளையும் சொல்லிவிட்டார். பாரதியார் ஒன்றும் பேச முடியாமல் விழித்தார். இதன் உண்மையைச் சேதுமன்னர் இருவரும் உணர்ந்துகொண்டு புன் சிரிப்புடன் பேசாமல் இருந்தனர். அதன்மேல் மாம்பழக்கவிராயர், தாம் அவ்வாறு செய்ததற்குக் காரணத்தைக் கூறியதோடு, பாரதியாரே அந்நூலை இயற்றியவர் என்ற உண்மையையும் கூறினர். பின்னர், மன்னர் இருவரும் புலவர் இருவருக்கும் சன்மானஞ் செய்தனர்.

அதன்பிறகு மாம்பழக் கவிச்சிங்க நாவலர், சிலமாதங்கள் வரை இராமநாதபுரத்திலிருந்து, தமக்குப் படி சரிவரச் செல்லாததைப் பற்றியும், பாராச் சேவகன் தம்மை ஒரு சமயம்

தடுத்ததைப் பற்றியும், தம்முடைய சமையல் கறிவகைகளைப் பற்றியும் விநோதமாகவும், சிலேடையாகவும் சில கவிகளைப் பாடிச் சேதுமன்னர்களை மகிழ்வித்ததோடு, சிவகெங்கை, தேவ கோட்டை முதலான விடங்கட்குச் சென்று திரும்பி வந்து, அப்போது தமக்குச் சுரநோய் உண்டாகித் தீர்ந்ததைப்பற்றியும் இரண்டு கவிகளைப்பாடி அவர்களால் கொண்டாடப் பட்டனர். பின்னர் ஒரு சமயம் சேதுபதி நாவலரின் பொடி டப்பியை எடுத்து மறைத்து வைத்துக்கொள்ள, நாவலர் அதைப்பற்றி அம்மன்னர் கேட்டுக்கொண்டபடி ஐந்துபொடி வருமாறு ஒரு வெண்பாப் பாடி அவரிடம் இரத்தினப் பொடி டப்பி பரிசு பெற்றனர். மேலும் சிற்சில சமயங்களில் சிற்சில விஷயங்களைக் குறித்து அருமையான கவிகளை இயற்றி அம்மன்னரால் புகழப் பெற்றனர்.

பிறகு, மாம்பழக் கவிச்சிங்கம், சேதுமன்னரிடம் விடை பெற்றுக்கொண்டு, சென்னை, தஞ்சை, சேலம், கோயமுத்தூர் மதுரை, திருநெல்வேலி முதலிய பலநகரங்களுக்கும் சென்று, ஆங்காங்குள்ள பிரபுக்கள்மீது கவிகள் இயற்றி அவர்களிடம் நற்பரிசுகள் பெற்றனர்; பல இசைத்தமிழ்ச் சிங்கார நூல்களையும் இயற்றினர். அக்காலத்தில் சேலம் ஜில்லாவைச் சார்ந்த வேளுக்குறிச்சி மிட்டாதாராகிய வேலப்பக் கவண்டரிடம் சென்று, சதுரங்கபந்தம், அஷ்டநாகபந்தம், இரட்டைநாக பந்தம் முதலிய அருமையான சித்திர கவிகளை இயற்றியதோடு, ‘சந்திர விலாசம்’ என்னும் நூலையும் அவர்மீது இயற்றி அவரிடம் சன்மானம் பெற்றார்; சேலத்திலுள்ள சில அறிஞர் விரும்பியபடி வடமொழியிலிருந்த சிங்காரரச மஞ்சரியை மொழி பெயர்த்துத் தமிழ்க் கவிகளால் செய்தார். இன்னும் இவர் இயற்றிய அற்புதச் செயல்கள் பல.

இவ்வாறு புகழை வளர்த்துவந்த இக்கவிராயர், இருபத்தேழாம் வயதில் திருமணம் புரிந்து இல்லறம் நடத்திச் சௌக்கியத்தை அடைந்தார். அக்காலத்தில் குமாரக் கடவுளின் மீது பழனி நான்மணிமாலை, திருப்பழனி வெண்பா, குமரன் அந்தாதி, சிவகிரியமகவந்தாதி முதலிய நூல்களை இயற்றினார். முடிவில் இவருக்கு மேகநோய் உண்டாயிற்று; அந்நோய் தீரும்பொருட்டு இவர் முருகக்கடவுளை வணங்கிப் பழனி வெண்பா அந்தாதி, பழனிபுரிமாலை, பழனிக் கோயில் விண்ணப்பம், கீதாமிர்தசாரம் என்னும் நூல்களை இயற்றினார். அப்பிணி நீங்கிற்று. சிறிது காலம் இவர் சுகமுற்றிருந்தார். பின்னர், 1884-ம் ஆண்டில் நாற்பத்தெட்டாம் வயதில்,

“என்னபிழை யான்செய் திருந்தாலு மெண்ணாமல்
அன்னபிழை யெல்லா மகற்றியின்னே—நின்னுபய
பாதநிழல் நல்கியெனைப் பாலித்துக் கொள்சமயம்
நீதருக னேநம்பி னேன்”

என்ற வெண்பாவைக் குமாரக் கடவுள்மீது பாடித் துதித்துவிட்டு இவ்வுலகைவிட்டுச் சென்றனர்.

---

5. சாரணர் இயக்கம்.

மாணவர்களே! பெரிய நகரங்களில் திருவிழா நடக்குங் காலத்திலும், வேறு வேடிக்கைகள் நடக்குங் காலத்திலும், பொதுக் கூட்டங்கள் நடக்கும்போதும் மனிதர் கூட்டங்களில் ஒரேமாதிரியான உடைகளை அணிந்து கையில் மூங்கில் தடியைப் பிடித்துக்கொண்டு கூட்டங் கூட்டமாகத் திரியும் வாலிபர்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இவர்கள் தாம் சாரணர் என்பவர்கள்.



இவர்கள், ஒற்றர், வேவுகாரர் என்னும் பெயர்களையும் உடையவர்கள் ஆவார்கள். இந்த இரண்டு பெயர்களுக்கும், 'உளவறிவோர்' என்று பொருளாம். 'சாரணர்' என்ற பெயர், 'பல இடங்களுக்கும் செல்வோர், உளவறிவோர்' என இருவகைப் பொருள் தரும். ஆகவே, இந்த மூன்று பெயர்களையும் பெற்ற இவர்கள், 'பல இடங்களுக்கும் சென்று உளவறிவோர்' என்று சொல்லப்படுவார்கள். 'உளவு' என்பது கூட்டங்களில் நடப்பதாய் உள்ளகாரியம்; 'இரகசியமானகாரியம்' என்றும் சொல்லப்படும். மனிதர் கூட்டங்களுக்குள் நடக்கும் சண்டை, ஆபத்து, களவு, சூது, சதியாலோசனை முதலியவைகளெல்லாம் இதில் அடங்கும். இந்தச் சாரணச் சிறுவர்கள் ஊரூராகச் சென்று ஆங்காங்கே மனிதர் கூட்டங்களில் நடக்கும் கலகங்களை அடக்குவார்கள்; ஆபத்துக்களை நீக்குவார்கள்; களவு, சூது, சதியாலோசனை முதலியன செய்வோரைக் கண்டுபிடித்துப் போலீஸாரிடம் சேர்ப்பார்கள்; தவறிய குழந்தைகளைக்கண்டுபிடித்து, அக்குழந்தைகளுக் குரியாரிடத்திலாவது, போலீஸாரிடமாவது சேர்ப்பார்கள்; இன்னும், ஊர்களில் நெருப்பாலும், வெள்ளத்தாலும், காற்றாலும், பிறவற்றாலும் அபாயம் நேர்ந்தால், அதை நீக்க முயற்சியெடுப்பார்கள். இவ்வாறு நன்மையான பல காரியங்களைச்செய்து தேசத்துக்கும், அரசருக்கும் உதவி செய்வார்கள். இக்காரணங்களா

லேயே இவர்கள், 'சாரணர்' என்னும் பெயர் பெற்றுர்கள். சாரணர் இயக்கம்—சாரணர் செய்கை.

வட அமெரிக்காவில் உள்ள, 'செவ்விந்தியர்' என்னும் வகுப்பார், இந்தச் சாரணத் தொழிலில் பெயர் பெற்றவர்கள். 'ஸ்கௌட்' என்னும் பெயர் அவர்களுக்கு வழங்கி வருகின்றது. இப்பெயர், அவர்களுடைய பாஷையில், 'ஓநாய்' என்னும் அர்த்தமுடையது. அந்தச் சாரணர்கள் ஓநாய்போல வேகமாகச் சென்று காரியங்களை நிறைவேற்றக் கூடியவர்களாயிருந்ததால், அவர்களுக்கு இந்தப் பெயர் ஏற்பட்டது. அதே பெயர், மற்ற தேசங்களில் உள்ள சாரணர்களுக்கும் ஆங்கிலத்தில் வழங்கி வருகின்றது.

இந்தச் சாரணர் இயக்கத்தில், பெரும்பான்மையும் பாடசாலை மாணவர்களும், சிறுபான்மை மற்ற வாலிபர்களும் சேர்ந்து வேலை செய்வார்கள். பொதுவாகச் சாரண வாலிபருக்கு ஏற்பட்ட சட்டமாவது:—

அவர், தம்முடைய நன்னடக்கையைப் பிறர் நம்பும்படி செய்ய வேண்டும்; இராஜ விசுவாசமுடையவரா யிருத்தல் வேண்டும்; பிறமனிதருக்குத் துணைபுரிந்து பலருக்கும் உபகாரிகளா யிருக்கவேண்டும்; எல்லாரிடத்தும் நேசம் வைக்க வேண்டும்; ஜாதி வேற்றுமை, மதவேற்றுமை பாராட்டலாகாது; பணக்காரரையும், ஏழைகளையும் ஒரே விதமாக மதிக்க வேண்டும்; எல்லோரிடத்தும் சகோதரத்தன்மை பாராட்ட வேண்டும்; மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும்; எல்லாப் பிராணிகளிடத்தும் அன்பு செலுத்தவேண்டும்; பெற்றோரிடத்தும், ஆசிரியரிடத்தும் விசுவாச முடையவராயிருத்தல் வேண்டும்; அவர் சொற்படி நடக்கவேண்டும்; சகிக்கமுடியாத

துன்பங்கள் நேர்ந்தபோதும் மனம்கலங்காமல் சீழ்க்கையடித்துக்கொண்டு புன் சிரிப்போடு கூடியிருக்கவேண்டும்; பொருளைச் செட்டாகச் செலவு செய்யவேண்டும்; பரிசுத்தமான மனதோடு கூடியிருக்கவேண்டும்; மெய்யே பேசவேண்டும்; கடுஞ்சொற் கூறலாகாது; உடம்பை எப்பொழுதும் பரிசுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்; சுத்தமான உடைகளை உடுத்த வேண்டும்.

இந்தச் சாரண வாலிபர் இயக்கம் முதன்முதலாக இங்கிலாந்தில், 1908-ஆம் ஆண்டில், ஆங்கில தளகர்த்தராகிய, 'ஸர் ராபர்ட் பேடன் பவல்' என்பவரால் அமைக்கப்பட்டது. இதற்கு அவரால், 'பாய்ஸ் ஸ்கௌட் மூவ்மென்ட்' என்ற பெயர் ஆங்கிலத்தில் வைக்கப்பட்டது. இதற்கு, 'வாலிப ஓநாய் இயக்கம்' என்று பொருள். இவர்கள் வாலிப ஓநாய்களைப் போன்று வேலைசெய்யக்கூடியவர்களாதலின், பாய்ஸ்ஸ்கௌட் என்னும் பெயர் பெற்றார்கள். இதன் கிளையாக மற்றொரு கூட்டமொன்றும் அவரால் ஏற்படுத்தப்பட்டது; அதற்கு, 'உல்ப் கப் மூவ்மென்ட்' என்று பெயர்; இதற்கு, 'ஓநாய்க்குட்டி இயக்கம்' என்று பொருள்; இதிற்சேர்வோர் பாலர்கள். இவர்கள், ஓநாய்க் குட்டிகளைப்போன்று வேலை செய்பவர்களாதலின், 'உல்ப்கப்' என்று பெயர் பெற்றார்கள். பாய்ஸ் ஸ்கௌட் மூவ்மென்டில் பதினொரு வயதிற்குமேல் பதினெட்டு வயதிற்குட்பட்டவர்கள் சேர்வார்கள்; உல்ப் கப் மூவ்மென்டில், ஏழு வயதிற்குமேல் பன்னிரண்டு வயதுக்குட்பட்டவர்கள் சேர்வார்கள்; இப்பாலர்கள் பன்னிரண்டு வயது வந்தபின், பாய்ஸ் ஸ்கௌட் மூவ்மென்டில் சேர்ந்து கொள்வார்கள்.

இவ்வாறு சேர்க்கப்பட்ட இந்த வாலிபச் சாரணர்களில் இளம்பாதர் வகுப்பு அல்லது மூன்றாம் வகுப்பு, இரண்டாம்

வகுப்பு, முதல் வகுப்பு, மன்னர்சாரணர் வகுப்பு என நான்கு வகுப்புக்களுண்டு.

அந்த வகுப்புக்களில் மூன்ரும் வகுப்பில் சேர்வோர், மேலே கூறிய சாரணர் பொதுச் சட்டதிட்டங்களையும், சாரணக் குறிகளையும், வந்தனம் செய்யும் முறைகளையும், ஐக்கியக் கொடியாகிய, 'யூனியன்ஜாக்' என்னும் பிரிட்டிஷ் கொடியின் வரலாற்றையும், கிரமப்படி அதனை ஏற்றிப் பறக்கச் செய்யும் விதத்தையும், காரியங்களுக்கு உபயோகப்படத்தக்க ஒரு நீளமான கயிற்றை, ஒவ்வொரு காரியத்திற்கும் வேண்டிய அளவுப்படி அறுக்காமல் குறுக்கிக்கொள்வதற்கு இடையர் முடிச்சுப் போடுவதையும், பருமனுகிய பல கயிறுகளை ஒன்ருகச் சேர்ப்பதற்குச் செம்படவர் முடிச்சுப் போடுவதையும், இன்னும் பலவித முடிச்சுக்கள் போடுவதையும் கற்று, அவற்றின் பரீக்ஷையில் தேர்ச்சி பெறல் வேண்டும். அதன்மேல், என்னுல் இயன்றவரை கடவுளிடத்தும், அரசரிடத்தும் செய்யத்தக்க கடமைகளை நான் செய்வேன்; எப்பொழுதும் பிறருக்குத் துணைபுரிவேன்; சாரணர்க்கேற்பட்ட சட்டதிட்டங்களுக்கு அடங்கி நடப்பேன்; இவற்றைச் செய்யத் தவறேன் என்று என் கௌரவமே சாட்சியாக வாக்குறுதி கூறுகின்றேன்'' என்று தலைவர்முன் சத்தியம் செய்யவேண்டும்; இந்தச் சத்தியத்திற்கு அறிகுறியாகத் தம்முடைய சுண்டுவிரலின் மேல் கட்டைவிரலைச் சேர்த்துக்கொண்டு மற்ற மூன்று விரல்களினுலும் பிறருக்கு வணக்கம்செய்யும் வழக்கத்தைக்கொண்டிருக்கவேண்டும். இவற்றைச் செய்து மூன்ரும் வகுப்பில் சேரவேண்டும்.

ஒருமாதம் வரை இந்த மூன்ரும் வகுப்பிலிருந்து, அதன்மேல், மனிதர்க்கு ஆபத்து நேரும்போது முதலில் உதவி

செய்யும் விதங்களையும், கொடிகளைக்கொண்டு குறி காட்டுவ தையும், பன்னிரண்டு நிமிஷ நேரத்தில் ஒருமைல் தூரம் ஓட்டமும் நடையுமாகச் செல்லுவதையும் கற்றுக்கொண்டு இவற்றின் பரீட்சையில் தேறவேண்டும். இவ்வாறு தேறியபின் இரண்டாம் வகுப்புச் சாரண வாலிபர் ஆகவேண்டும்.

பிறகு, நீரில் ஐம்பதுகஜ தூரம் நீந்தப் பழகவேண்டும்; சேவிங்கிஸ் பாங்கில் (தபாலாபீஸ் நிதியில்) ஒரு ரூபாய் கட்டி இருப்பு வைப்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்; தூரத்திலிருப்பவர்க்குக் குறிகாட்டுவதனால் ஒரு சமாசாரத்தை விரைவில் அறிவிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும். இவைகளைக் கற்று இவற்றின் பரீட்சையில் தேறவேண்டும்; அவ்வாறு தேறியபின் முதல் வகுப்பில் சேரவேண்டும்.

இவ்வாறு முதல் வகுப்பில் சேர்ந்த சாரண வாலிபர்கள், அதன்மேல், ஊர்களில் பெரிய ஆபத்து நேரும்போது முதலில் உதவி செய்வதையும், நெருப்பை அவிக்கும் யந்திரத்தை உபயோகிக்கும் விதத்தையும், துவிசக்கரவண்டியில் ஏறிச் செல்வதையும், தாமே வழி தெரிந்து ஓரிடத்திற்குப் போவதையும், ஏற்படுத்திய குறியைத் தப்பாமல் துப்பாக்கியால் சுடுவதையும், வீட்டில் நெருப்புப் பற்றிக்கொண்டபோது அதற்குள் அகப்பட்ட மனிதரை வெளியேற்றிக் காப்பாற்றும் விதத்தையும் கற்றுக்கொண்டு இவற்றின் பரீட்சையில் தேறவேண்டும். இவ்வாறு தேறியபின் மன்னர் சாரணர் வகுப்பிற் சேரவேண்டும்.

இந்த நான்கு வகுப்புச் சாரண வாலிபர்களில், மன்னர் சாரணர் வகுப்பைச் சார்ந்தவர்கள் அரசருக்கும், மற்றவர்களுக்கும் உதவி புரிவார்கள்; மற்ற மூன்று வகுப்புக்களில் உள்ளவர்களும் பொது மனிதர்க்குத் துணை புரிவார்கள்.

இந்தச் சாரண வாலிபர் இயக்கத்திற்கு, 'ஸர். ராபர்ட் பேடன் பவல்' என்னும் ஆங்கில தளகர்த்தரே தலைவர்; இவ வருக் குதவியாகக் காரிய நிர்வாக சபையோடு கூடிய பெரிய சபை யொன்று ஏற்பட்டிருக்கிறது. இதன் மூலம் கமிஷனர் கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள், தேச கமிஷனர், மாகாண கமிஷனர், ஜில்லா கமிஷனர் எனப் பல வகையின ராகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு சபை உண்டு. இந்த ஜில்லா சபையாலும், ஜில்லா கமிஷனராலும் பல சாரண வாலிபப் படைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன; இந்தப் படைகள் அந்த ஜில்லா கமிஷ னரின் ஆட்சிக்குட்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சாரணப் படையும் ஓர் அணியையாவது, பல அணிகளையாவது கொண் டிருக்கும். ஒவ்வொரு படைக்கும் ஒவ்வொரு சாரண ஆசிரி யரும் ஒவ்வொரு உதவிச் சாரண ஆசிரியரும் ஏற்பட் டிருக்கிறார்கள். ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு தலை வரும், ஒவ்வொரு துணைத் தலைவரும் ஏற்படுத்தப்பட்டிருக் கிறார்கள். ஒவ்வொரு அணியிலு மிருக்கும் வாலிபச் சாரணருக்கு ஒன்று முதலாக இலக்கங்கள் இடப்பட்டிருக் கின்றன. அந்த இலக்கங்களைக்கொண்டே அவர்கள், தலைவர் முதலியவர்களால் அழைக்கப்படுவார்கள். ஒவ்வொரு ஊரிலு மிருக்கும் சாரணப்படைக்கு அந்த அந்த ஊரின் பெயரே இடப்பட்டிருக்கிறது. அந்தப் படைகள் அவ்வூர்களின் பெயர்களைக்கொண்டே அழைக்கப்படும். ஒவ்வொரு படை யிலுமுள்ள அணிகளில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மிரு கத்தின் பெயரும், ஒவ்வொரு பறவையின் பெயரும் இடப் பட்டிருக்கின்றன. இந்தப் பெயர்களைக்கொண்டே அந்த அணிகள் அழைக்கப்படும். ஆசிரியர் எந்த அணியையாவது அழைத்தால் அதற்குரிய பெயராலேயே அழைப்பார்; அவ்

வாறு அழைக்கும்போது மிருகத்தின் பெயர் வைக்கப்பட்ட அணி அந்த மிருகத்தைப்போல சத்தமிட்டுக்கொண்டு வரும்; பறவையின் பெயர் வைக்கப்பட்ட அணி, அந்தப் பறவை யைப்போலவே கூவிக்கொண்டு வரும்.

இந்தச் சாரண வாலிபர்கள், இவ்வாறு இப்படைகளி லிருந்து மனிதர்க்கு உதவி செய்வதோடு பிற்காலத்தில் நாட் டிற்கு நன்மை செய்யக்கூடியவர்களா யிருக்கிறார்கள். அத னால் இவர்களுக்கு ஆசிரியர்களால், உடம்பில் வலிமையை உண்டாக்கும் தேகாப்பியாசமும், மனத்தை உறுதிப் படுத் தும் வகைகளும், காயமடைந்தவர்களுக்கு வைத்தியர் வரு முன் உதவி செய்யும் முறைமைகளும், தீப் பற்றிய வீட்டிற் குள் அகப்பட்ட மனிதரைக் காப்பாற்றும் வகைகளும், நெருப்பை அணைக்கும் யந்திரத்தை உபயோகிக்கும் விதங் களும், தண்ணீரில் வீழ்ந்து மூர்ச்சித்தவரைக் காப்பாற்றும் வகைகளும், எலும்பொடிந்தவர்க்கும், காயமடைந்தவர்க் கும் ஆரம்ப சிகிச்சை செய்வதும், பின் அவரை வைத்திய சாலையிற் சேர்ப்பிக்கும் வகைகளும், வைத்திய சாலைகள் இருக்கு மிடங்களும், வழியறியாமல் திகைப்போருக்கு வழி காட்டும் விதங்களும், தெருக்களின் விவரங்களும், தச்சு வேலை, கொல்வேலை முதலிய கைத்தொழில்களும், பொருள் சம்பாதித்து அதனை விருத்திசெய்யும் மார்க்கங்களும், துப் பாக்கிசுடும் விதங்களும், யுத்தஞ்செய்யு மிடங்களில் சஞ்சரிக் கும் வகைகளும், கூடாரம் அமைக்கும் விதங்களும், தமக் குரிய உணவு, படுக்கை முதலியவைகளைத் தாங்களே சம் பாதித்துக் கொள்ளும் மார்க்கங்களும் கற்றுக் கொடுக்கப்படு கின்றன. இன்னும் இவர்களுக்கு, "தயாராயிரு" என்னும் ஒரு வாக்கியம் மந்திரமாக ஆசிரியரால் உபதேசிக்கப்படு கிறது. "ஒவ்வொரு வாலிபரும் நாட்டிற்கு நன்மை

செய்ய ஆயத்தமா யிருக்க வேண்டும்'' என்பது இதன் கருத்தாம். இவர்கள் எப்பொழுதும் இந்த மந்திரத்தை மனத்தில் மறவாமல் நிலை நிறுத்தி, மேற்கூறிய பாடல்களையெல்லாம் படித்து, அவற்றின் பரீட்சையில் தேறி அடக்கம், தேச விசுவாசம், பரோபகாரம், புத்திக் கூர்மை, தேகதிடம், மன வுறுதி முதலியவற்றை அடைகிறார்கள்.

இவ்வாறு பலவகைகளிலும் சிறப்புற்ற இச் சாரண வாலிபர்கள், எல்லா இடங்களுக்கும் சென்று முன்னுரைத்த படி பலருக்கும் பலவகை உதவிகளைச்செய்து தங்கள் கடமைகளை நிறைவேற்றி வருகின்றார்கள். இவர்களால் தேசத்துக்கும், அரசாங்கத்துக்கும் பெரிய நன்மையுண்டு. இவர்களும் நன்மை அடைகிறார்கள். இவ்வாறு இந்த வாலிபச் சாரணர் இயக்கம் பல வகைகளிலும் உலகத்திற்குப் பெரிய நன்மை தரத்தக்கதா யிருப்பதனாலே, மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் அரசர் பெருமானும், உவேல்ஸ் அரசிளங் குமாரரும் இதனை ஆதரித்து வருகின்றார்கள். எல்லாப் பாடசாலைகளிலும் இது, விரும்பப்படுகிறது; பல மாணவர்களும் சாரணர்களாகி வருகிறார்கள்.

ஆதலின் கல்விகற்கும் மாணவர்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்து வேலை செய்து வருவது மிகுந்த நன்மையைத்தரும். பலரும் இதிற் சேர்வதால் நம் நாட்டிற்கு மிக்க மேன்மையுண்டாகும்; வகுப்பு வித்தியாசம், மத வேற்றுமை முதலியன ஒழியும்; விரோதப் பான்மை நீங்கி எங்கும் நேசப் பான்மை யுண்டாகும்.

---

6. நயாகரா நீர்வீழ்ச்சி.

பூமியிற் செல்லும் நதிகளோ, மலை அருவிகளோ வேகமாக ஓடிச் செங்குத்தான மலைச் சிகரங்களின் மீதிருந்தோ, வேறு உச்சமான இடத்திலிருந்தோ அந்தரங்கமாகக் கீழே யிறங்கிப் பூமியில் வீழ்வதற்கு, 'நீர்வீழ்ச்சி' என்று பெயர். இப்படிப்பட்ட நீர்வீழ்ச்சிகள், உலகத்தில் பல இருக்கின்றன. அவற்றுள் சிறிய நீர்வீழ்ச்சிகளும் உண்டு, பெரிய நீர்வீழ்ச்சிகளும் உண்டு.

உலகத்தில் இவ்வாறு காணப்படும் நீர்வீழ்ச்சிகளி லெல்லாம் நயாகரா நீர்வீழ்ச்சிதான் பெரிது; மிகவும் ஆச்சரியத்தை உண்டாக்குவது; பார்ப்பவர்களின் நெஞ்சு திடுக்கிடத்தக்கது உலகத்தின் பெரிய அதிசயக் காட்சிகளில் இதுவும் ஒன்றாகும். உலக விநோதங்களை ஆராயும் அறிஞர் பலர் இந்த நீர்வீழ்ச்சியைப் பார்ப்பதற்கு அடிக்கடி அங்கே சென்றுகொண்டிருப்பார்கள்.

இந்த அதிசயமான நயாகரா நீர்வீழ்ச்சியானது, அமெரிக்காவில் இருக்கிறது. அமெரிக்காவில், 'மிஸ்ஸிஸிபி' என்ற ஒரு நதி பாய்கிறது; உலகத்திலுள்ள நதிகளுக்கெல்லாம் மிகவும் பெரிய நதி இதுவே. இந் நதியும் உலகத்தின் பெரிய அதிசயக் காட்சிகளுள் ஒன்றாகும். இந்த நதியைப் பார்க்கப் போகவேண்டுமானால், முதலில் பல பெரிய ஏரிகளைத் தாண்டிச் செல்லவேண்டும்; அவ்வாறு செல்லும் வழியில்தான் மேற்கூறிய நயாகரா நீர் வீழ்ச்சி இருக்கின்றது. இந் நீர்வீழ்ச்சியானது, 1678 ம் ஆண்டில், "பியர் ஹென்பின்" என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டது.



இந்த நீர் வீழ்ச்சியிலிருந்து செல்லும் நதி, "நயாகரா" என்று சொல்லப்படுகின்றது. இந்த நயாகரா நதியானது. கனடாவிற்கும், 'யுனைட்டெட் ஸ்டேட்ஸ்' என்னும் நாடுகளுக்கும் இடையில் வடக்குநோக்கிச் செல்கின்றது. அவ்வாறு முப்பத்தெட்டு மைல்தூரம் சென்று சமுத்திரத்தில் கலக்கின்றது. இந்த நதிசெல்லும் முப்பத்தெட்டு மைல் தூரத்தில் பதினான்கு மைல்தூரம்தான் சமதரை; இருபத்துநான்கு மைல்தூரம் மலைகளும், உயர்ந்த மேட்டுப் பாங்கான நிலங்களுமாம். இந் நதி அந்த மலைகளிலும், மேடுகளிலும் ஏறிப் பாய்ந்து கீழிறங்கும் போது பெரிய அதிர்ச்சியும், முழக்கமும், பேரிரைச்சலுமுண்டாகும்.

நயாகரா நீர் வீழ்ச்சிக்கு மேலே நதியின் மத்தியில், "பெரிய தீவு" என்னும் ஒரு தீவிருக்கிறது; இந்தத் தீவைச் சுற்றிக்கொண்டு செல்லும் அந் நதி, போகப்போக மிகுந்த வேகத்தோடு செல்கின்றது; அவ்வாறு விரைந்து சென்று கொஞ்சதூரத்திற் கப்பால், "கோட்" என்னும் தீவை அடைகின்றது. அதன்மேல், அந்தத் தீவிலிருந்து கீழ் நோக்கிப் பாய்கின்றது. அவ்வாறு பாயும் அந்த வெள்ள நீரானது, ஆயிரக் கணக்கான குதிரைகளின் வேகங்கொண்டு வீழ்கின்றது.

இவ்வாறு, கோட் தீவிலிருந்து வேகமாகப் பாய்ந்து செல்லும் அந் நதியானது, இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து செல்கின்றது. அப் பிரிவுகளில் ஒன்று அமெரிக்காவின் பக்கத்தில் சென்று மிகவும் உயரமான பாகத்திலிருந்து கீழே இறங்குகின்றது; இப்படி இறங்கும் இந்த நீர் வீழ்ச்சி, "அமெரிக்கன் நீர் வீழ்ச்சி" என்று சொல்லப்படுகின்றது. இது, அமெரிக்காவுக்குப் பக்கத்தில் வீழ்வதால், அக் கா

ணத்தைக் கொண்டு இப்பெயர் பெற்றது. இந்த வீழ்ச்சி சுமார் ஆயிரம் அடி அகலமுள்ளது. மற்றொரு பிரிவு, கனடா வின் பக்கத்தில் சென்று உச்சமான இடத்திலிருந்து கீழே வேகமாகப் பாய்கின்றது; இந்த நீர் வீழ்ச்சியானது பார்வைக்குக் குதிரைக் குளம்பின் வடிவமுள்ளதாகக் காணப் படும். இவ்வாறு இவ்வீழ்ச்சி, கனடாவுக்குப் பக்கத்தில் வீழ்வதாலும், குதிரைக் குளம்பின் வடிவத்தைப் பெற்றிருப் பதாலும்,"குதிரைக்குளம்பு வீழ்ச்சி" எனப் பெயர்பெற்றிருக் கின்றது. மேற்கூறிய அமெரிக்கன் நீர் வீழ்ச்சி சுமார் நூற்றெண்பது அடி உயரமுள்ளது; குதிரைக் குளம்பு நீர் வீழ்ச்சியானது சுமார் நூற்றெழுபத்து மூன்று அடி உயர முள்ளது.

நயாகரா நதியின் வெள்ளம் அளவிட்டுச் சொல்ல முடியாத வேகங்கொண்டு பாய்வதிலிருந்து இவ்வாறு உண்டாகியிருக்கும நீர் வீழ்ச்சிகள், பார்ப்பவர்க்கு மிகுந்த அச்சத்தை உண்டாக்கும்; இவற்றில் எப்பொழுதும் ஓயாமல் வீழ்ந்து கொண்டிருக்கும் பிரவாகத்தின் ஓசையானது இடியோசையைக்காட்டினும் மிக்க அதிர்ச்சியுடையதாயிருக்கும். அங்கே சமீபத்தில் சென்று அக்காட்சிகளைப் பார்க்க நிற்பவர்களின் செவிகள் செவிடுபட்டுப்போம். வேகங்கொண்டு கீழே பாயும் தண்ணீரிலிருந்து கிளம்பும் நுரையானது ஆகாயத்தில் பால் புகைபோல நெடுந்தூரம் சிதறிப் பறந்துகொண் டிருக்கும்; அது, வெண்மையான மேகபடலத்தைப் போலக் காணப் படும். இன்னும் அந்த நீர் வீழ்ச்சிகளில் தெறித்து நாலா பக் கங்களிலும் சிதறும் நீர்த்துளிகள், பிரகாசமான பனிக்கட்டி களைப் போலவும், உயர்ந்த வைரக் கற்களைப் போலவும் விளங் கும். இவ்வாறு நுரை பறப்பதாலும், நீர்த்துளிகள் சிதறுவ

தாலும் அந் நீர் வீழ்ச்சிகளுக்குப் பக்கத்திலுள்ள பூமியெல்லாம் மழை பெய்யும் பூமியைப் போல எப்பொழுதும் ஈரமாகவேயிருக்கும்; அங்குச் செல்லும் மனிதரின் ஆடைகளும், உடம்பும் மழையில் நனைவதுபோல நனைந்து போம்.

இந்த நீர் வீழ்ச்சிகள் சமுத்திரத்தில் கலக்கு மிடங்கள் மிகப் பயங்கரமா யிருக்கும்; வெள்ளம் பாயும் வேகத்தால் சமுத்திர ஜலம் நெடுந்தூரம்வரை கொந்தளித்துக் கொண்டிருக்கும்; தண்ணீர் திரண்டு திரண்டு அங்கு மிங்கும் மோதி வைர மலைகளைப்போல் மேலெழுந்து சிதறிப் பாயும்; சுழன்றும், மடங்கியும் செல்லும். இக்காட்சிகள் மிக்க விநோதத்தையும், அச்சத்தையும் உண்டாக்குவனவாம். இந்த இடங்களில் கப்பலோ, ஓடங்களோ நெருங்குவது முடியாது; மனிதர் எந்தச் சகாயத்தைக் கொண்டும் ஊடே செல்லுதல் முடியாது. தண்ணீரின் முழுச் சொரூபத்தையும், வல்லமையையும் இந்த நீர் வீழ்ச்சிகளையும், பெரிய நதிகளையும் பார்ப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

---

7. அற்புத வடிவம் பெற்ற தாவரங்கள்

உலகத்தில் தோன்றிய ஒவ்வொரு தோற்றமும் ஒவ்வொரு வடிவமுடையதாகக் கடவுளால் படைக்கப்பட்டிருக்கின்றது: மனிதருக்கு ஒருவிதமான வடிவமும், மிருகங்களுக்கு ஒருவிதமான வடிவமும் பறவைகளுக்கு வேறுவிதமான வடிவமும், தாவரங்களுக்கு மற்றொரு வகையான வடிவமும் பொதுவாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வகையிலுமுள்ள உட்பிரிவுகளுக்கும் வெவ்

வேறுவிதமான வடிவங்கள் எற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தோற்றமும் அது அதற்குரிய வடிவத்தோ டிருப்பதுதான் இயற்கை.

ஆயினும், சில சந்தர்ப்பங்களில் இந்த இயற்கைக்கு விரோதமாக, ஒன்று மற்ருென்றின் வடிவத்தைப் பெற்று உற்பத்தியாகின்றது: மனிதரிற் சிலர், சில சமயங்களில் மிருகங்களின் வடிவத்தையோ, பக்ஷிகளின் வடிவத்தையோ பெற்றுப் பிறக்கின்ருர்கள்; அவ்வாறே சில மிருகங்களும், பறவைகளும், நீர்வாழ் ஜந்துக்களும், மரம் செடி கொடி முதலிய தாவரங்களும் மனிதர் வடிவத்துடன் உற்பத்தியாகின்றன; இவையெல்லாம் கடவுளின் திருவிளையாட்டுக்களே. இவ்வாறு உண்டாகும் விநோதப் பிறப்புக்களை நாம் புத்தகங்களிற் படித்திருக்கிறேம்; ஆனுல், அவையெல்லாம் கட்டுக் கதைகளெனப் பலரால் எண்ணப்பட்டு வந்தன. இக்காலத்தில் அவை மெய்யென்றே நம்பும்படி, இயற்கைப் பொருள் ஆராய்ச்சிக்காரரால் சில விநோதத்தோற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.



இஃது ஒருவகைக் கிழங்கு; மனித வடிவம் பெற்றது. இதன் மேலுள்ள இலைகள், மேல்நாட்டுச் சீமான்களும், சீமாட்டிகளும் மகுடங்களிற் சூடிக்கொள்ளும் விலையேறப்பெற்ற ஒருவகைப் பறவையின் சிறகுகளைப் போன்றிருக்கின்றன; அதற் கடியிலுள்ள கிழங்கின் வடிவம் மனிதன் தலையைப்போன்றிருக்கின்றது; அதில் இரண்டு கண்களும், புருவங்களும்,


நெற்றியும், மூக்கும், வாயும், செவிகளும் மிகவும் அழகாக அமைந்திருக்கின்றன; அந்தத் தலை வடிவத்திற்குக் கீழே உள்ள கிழங்கின் பாகமும், வேர்களும், கழுத்தும், தோள்களும், மார்பும், கைகளும், இடுப்பும், கால்களுமாய் மனிதனுடைய அவயவங்களைப் போலவே விளக்கமாகத் தோன்றுகின்றன.

இவ்வகைக் கிழங்குள்ள செடி, ஜெர்மனி தேசத்தில், 'பான்' என்னும் ஊருக்கும், 'ஜூலியர்ஸ்' என்னும் ஊருக்கும் மத்தியிலுள்ள, 'வெய்டன்' என்னும் சிறிய கிராமத்தில், ஒரு தோட்டத்தில் உற்பத்தியாகி வளர்ந்தது; இது சிலரால் கண்டுபிடிக்கப்பட்டுப் புகைப்படம் பிடித்து வெளிப்படுத்தலாயிற்று.



இதுவும் ஒருவகைக் கிழங்கே. இதன் இலைகள் மேற்பாகத்தில் அழகாகச் செழித்திருக்கின்றன. இலைகளுக்குக் கீழே உள்ள கிழங்கின் பாகம் மனிதனுடைய கையைப்போல அமைந்திருக்கின்றது; அதில் சுண்டு விரல், மோதிர விரல், நடுவிரல், ஆள்காட்டி விரல், பெரு விரல் ஆகிய ஐந்து விரல்களும இருக்கவேண்டிய அளவுப்படி தோன்றுகின்றன; நகங்களும், உள்ளங்கையும், இரேகைகளும். சுருங்கல்களும் மிகவும் துலக்கமாகக் காணப்படுகின்றன.

இது, 'ஹார்லெம்' என்னும் ஊரில் சில தோட்டக்கார ரால் பயிரிடப்பட்டு வந்தது. இதன் அதிசய வடிவம், சில அறிஞரால் புகைப்படம் பிடித்து வெளியிடப்பட்டது.



இதுவும் ஒருவகைக் கிழங்குதான்; 'பீட்ரூட்' என்னும் கிழங்கைப் போன்றது; 'பார்ஸ்னிப்' என்று இதற்குப் பெயர் வழங்கி வருகின்றது. இதன் வடிவம், மனிதனுடைய கை, ஒரு பொருளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பதுபோலத் தோன்றுகின்றது. கை வடிவம்பெற்ற கிழங்கின் பாகத்திற்கும், மனிதனுடைய கைக்கும் வித்தியாசமே தோன்ருது.

இந்தக் கிழங்கை, முதன் முதலாக ஒரு பெண் ஒரு சந்தையில் விற்பனை செய்யும் பொருட்டு வைத்துக்கொண் டிருந்தாள்; இதன் ஆச்சரியமான உருவத்தைப் பலரும் பார்த்து வியந்துகொண் டிருந்தார்கள்; அப்போது ஒரு சித்திரக்காரன் இதைப் பார்த்து, இதன் வடிவத்தைச் சித்திரத்தில் எழுதி வெளியிட்டான்.

இந்த, 'பார்ஸ்னிப்' என்னும் மற்ருெரு கிழங்கும் இவ்வாறு மனித வடிவம் பெற்றிருந்து சிலரால் கண்டு பிடிக்கப் பட்டதாக ஒருவர் சொல்லுகிருர். ஆனல், அதன் உருவப் படம் இதுவரை எங்கும் காணப்படவில்லை.

இன்னும், தாவரங்களில் இவற்றைப்போல விநோத வடிவம் பெற்றவை பல, மனிதரால் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்

றன. மீன்களில் பாதி உடம்புவரை மனிதவடிவம் பெற்ற சிலமீன்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன; சிப்பி முத்துக் களில் மனித அவயவ உருவம் பெற்ற முத்தொன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது; அது சென்னைப் பொருட் காட்சி சாலையில், சமுத்திரப் பொருள்கள் வைக்கப் பட்டிருக்குமிடத் தில் இருக்கின்றது; இதன் உருவம் மனிதருடைய முகத்தைப் போன்றிருக்கின்றது; இதில், கண்கள், புருவங்கள், நெற்றி, மூக்கு, வாய், கன்னங்கள் முதலியவைகளெல்லாம் மனிதரு டைய அவயவங்களைப் போலவே சிறிதும் வேற்றுமையின் றிக் காணப்படுகின்றன. சென்னைப் பொருட்காட்சிச் சாலைக் குச் சென்றால் இதனைப் பார்க்கலாம்.

இவ்வகை இயற்கை அற்புதங்களைப் பார்த்து ஆராய்ச்சி செய்வதால், உலக ஞானம் விருத்தியடையும்; கடவுளின் படைப்பு விநோதங்களையும், மகிமைச் செயல்களையும் ஐய மறத் தெரிந்துகொள்ளலாம்.

——:():——

8 'ஐ-ஐ' என்னும் அதிசயப்பிராணி

மிக்க வெப்பமுள்ள ஆப்பிரிக்காவைப் போன்ற சில இடங்களில் அதிசயத்தை உண்டாக்கத்தக்க பலவகைப் பிரா ணிகள் இருக்கின்றன; அவற்றுள், 'ஐ-ஐ' என்னும் பிராணி அற்புதச் செயல்களும், புத்தி நுட்பமும் உடையது; இதுமேற் குறித்த உஷ்ணப் பிரதேசங்களில்கூட மிகவும் அருமையா கவே காணப்படுகின்றது.



இந்தப் பிராணி அணிலைப்போன்ற வடிவமுடையது; இதற்கு உரோமமுண்டு; அந்த உரோமம் அணிலின் உரோமத்தைக் காட்டினும் சற்று நீண்டிருக்கும்; இதன் உடம்பு முழுவதிலும் உரோமம் அடர்ந்திருக்கும்; இதற்கு வால் உண்டு; அஃது அணிலின் வாலைப்போன்று நீண்டதா யிருக்கும். இந்த, ஐ-ஐ யின் தலை ஓடு மிகவும் உறுதியாயிருக்கும்; தலையில் மூளை அதிகமாயிருக்கும்; தலையின் உச்சியில் இரண்டு கொண்டைகள் அமைந்திருக்கும்; இதன் கால்கள் மிக்க விநோதமாயிருக்கும்; காலிலுள்ள விரல்கள் அளவுக்கு மிஞ்சி நீட்சி பெற்றிருக்கும்; அவ்விரல்களுள் நடுவிரல் மற்றவைகளைக் காட்டினும் நீண்டிருக்கும்.

இது, மிகவும் சுறுசுறுப்புடையதா யிருக்கும். 'லெமூர்' என்னும் குரங்கின் குணங்களே இந்த, ஐ-ஐ யினிடத்தில் அமைந்திருக்கின்றன. இது, மரங்களிலேயே வாசம் செய்யும், ஒரு, ஐ-ஐ, தனித்தும் வசிப்பதுண்டு; பல 'ஐ-ஐ' கள் ஒன்று சேர்ந்து கூட்டங்கூட்டமாக வசிப்பதுமுண்டு. இந்த, 'ஐ-ஐ' க்

கூட்டங்கள் இராக்காலத்தில் படுத்து நித்திரை செய்வதைப் பார்த்தால், அக்காட்சி மிகவும் அற்புதமாயிருக்கும்; ஒவ்வொன்றும் முன்னங்கால்களை விறைக்க நீட்டி, அந்தக் கால்களுக்குநடுவில் தலையைவைத்துக்கொண்டு, சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதுபோன்ற காட்சியுடையதாய்ப் படுத்திருக்கும்.

'ஐ-ஐ' என்னும் இந்தப் பிராணி, தானியவகைகளையும், கனிவர்க்கங்களையுமே தின்னும். இன்னும் மரந்துளைக்கும் ஒருவித வண்டுகளையும் பிடித்துத் தின்பதுண்டு; வேறு சில புழுக்களையும் தின்னும்.

இதற்கு, மற்ற விலங்குகளின் அறிவைக் காட்டினும் நுண்ணிதாகிய அறிவுண்டு; தூரதிருஷ்டியுண்டு; நுட்பமாகிய செவிப்புலன் உண்டு; இதன் செவியில் நுண்ணிய கருவிகள் அமைந்துள்ளன; வெளியில் உண்டாகும் ஒலியை இழுத்து மூளைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் நரம்பு மிக்க வலிமையுடையதாகவும், பெரிதாகவும் அமைந்திருக்கின்றது. இன்னும், இதற்குத் தெளிவான கண் பார்வையுமுண்டு. மேலும் பல நற்குணங்களும் இயற்கையில் அமைந்திருக்கின்றன. இவ்வாறு இதனிடத்துப் பல செயல்களும், குணங்களும், அறிவும், உட்கருவிகளும் உண்டென்பதை இக்காலத்திலுள்ள ஆராய்ச்சிக்காரர்கள், இதன் அவயவங்களைப் பரிசோதித்துப் பார்த்துக் கண்டுபிடித்து வெளிப்படுத்தி யிருக்கின்றனர்.

இது, தூரதிருஷ்டியும், கூர்மையான கண் பார்வையும் பெற்றிருப்பதால், இதன் கண்களுக்குத் தூரத்திலுள்ள நுட்பமான பொருள்களும் தெளிவாகத் தெரியும்; அதனால், இப்பிராணி, மிகச் சிறிய உணவுப் பொருள்களையும், சிறு புழுக்களையும் இருட்டுக் காலத்திலும் எளிதில் உணர்ந்து தின்னும்.

இதன் செவிகள், வெளியிலுண்டாகும் தொனியை எளிதில் கவர்ந்து மூளைக்குச் செலுத்தும் நுட்பமான கருவியைப்பெற்றிருப்பதால், இது மரத்தின் உட்புறத்தில் வண்டுகள் துளைக்கும்போது அந்தச் சத்தத்தைக்கேட்டு அவற்றைப் பிடித்துத் தின்னும்.

இவ்வகைப் பிராணி நம் நாட்டில் இல்லை. ஆதலால், இதைப் பார்க்கும் நம்நாட்டு மனிதர் மிகவும் ஆச்சரியமடைவர்.

'சானர்ரெட்' என்னும் மேல் நாட்டு யாத்திரைக்காரர் ஒருவர்; 18-ஆம் நூற்றுண்டின் இறுதியில், 'மடகாஸ்கர்' என்னும் தீவில் யாத்திரை செய்யும்போது முதன் முதலாக இந்த அதிசயப் பிராணியைக் கண்டுபிடித்தார். இஃதவரைக் கண்டதும் பயந்து ஓட்டம் பிடித்ததாம். அவ்வாறு ஓடியும் அவர், மிக்க தந்திரமாகப் பொறிவைத்து அதன்மூலம் இதனை எளிதாகப் பிடித்தாராம்; அவ்வாறு பிடித்த பிறகு இதனை அங்கிருந்த மனிதர்க்குக் காட்டினாராம்; அந்த மனிதர்கள், அதற்குமுன் இந்தப் பிராணியைப் பார்க்காதவர்களாதலின், இதைப் பார்த்தவுடன் அதிசயித்து, "ஐ-ஐ!" என்று கூச்சலிட்டார்களாம்; அக்காரணத்தைக் கொண்டே, 'சானர்ரெட்' என்பவர், இதற்கு, 'ஐ-ஐ' எனப் பெயரிட்டாராம். அதுமுதலாக இப்பிராணிக்கு இப்பெயரே வழங்கி வருகின்றதாம். 'சானர்ரெட்' என்பவர் பிடித்த, 'ஐ-ஐ' அரிசியைத் தின்றுகொண்டே இரண்டு மாதங்கள்வரை பிழைத்திருந்ததாம்.

9. இராஜாராம் மோகன்ராய்

இந்திய தேசத்தில் தோன்றிய பெரியார்களில், இராஜா ராம் மோகன்ராய் மிகச் சிறந்தவர்; உலக நன்மைக்காகப் பெரிதும் உழைத்தவர்; இந்திய மக்களின் சீர் திருத்தங்களில் மிகச் சிரத்தையுடையவர்; இவர், 155 வருடங்களுக்கு முன் பெங்கால் மாகாணத்தில், பர்ட்வான் ஜில்லாவைச் சார்ந்த ஒரு சிறு கிராமத்தில் பிறந்தவர். இவருடைய தாய்



தந்தையர் வைதீக பிராமண வகுப்பைச் சார்ந்தவர்; தகப்பனார் வைதீகப் பிராமணரில், கொலின்ஸ் பரம்பரையைச் சார்ந்தவர்; தாயார், ஷக்தாஸ் பரம்பரையைச் சார்ந்தவள். இவ்விருவரும், மதக் கொள்கைகளில், ஜனங்கள் அறியாமை

யால் ஏற்படுத்திக்கொண்ட பழைய மூடப் பழக்க வழக்கங்களில் மிகவும் நம்பிக்கை யுடையவர்கள். இவர்கள் காலத்தில் கணவர் இறந்தபோது பெண்களை உறவினர் முதலியோர் கட்டாயப்படுத்தி, இறந்த கணவருடன் உடன் கட்டை ஏற்றுவித்தல், ஆண் மக்களுக்கும் பெண் மக்களுக்கும் சிறு வயதிலேயே கலியாணம் செய்தலாகிய பாலிய விவாகம் முதலிய கெட்ட வழக்கங்கள் அதிகரித்திருந்தன. இவற்றால், மனித வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்கள் எண்ணிறந்தவை.

இராஜாராம் மோகன்ராய் சிறு பருவத்திலேயே சிறந்த அறிவும், சுயேச்சையான குணமும், பரந்த நோக்கமும், நல்லொழுக்கமும் பெற்றிருந்தார். இவருடைய தாய் தந்தையர், பழைய பேதைமையான வைதீகக் கொள்கைகளில் நம்பிக்கை வைத்திருந்தவர்களாதலால் தம் கொள்கைகளின்படி இவருக்குப் பன்னிரண்டு வயதிற்குள் ஒரு பெண்ணை மணஞ் செய்து வைத்தார்கள்; அப் பெண் அறியாப் பருவத்திலேயே இறந்துபோயினள். அதன்பின், இவ்வாறே அவருக்கு இரண்டு விவாகங்கள் நடந்தன. அவற்றால் அவருக்குத் துக்கங்கள் அதிகரித்தனவேயன்றி மகிழ்ச்சி யொன்றும் ஏற்படவில்லை. அதனால் இவர் பாலிய விவாகத்தின் கெடுதியை உணர்ந்தார்; அதனை மிகவும் வெறுத்தார். மற்ற அனுசாரக் கொள்கைகளிலும் வெறுப்புற்றார். அவ் வெறுப்பினால், வைதீகக் கொள்கையுடைய தம் இனத்தவரோடு பழக விருப்பமில்லாமல் மரங்கள் அடர்ந்த சோலைகளிலும், வனங்களிலும், வெட்ட வெளிகளிலும் தனியே போயிருந்து அங்கங்கேயுள்ள இயற்கை விநோதங்களைக் கவனிப்பார்; மிருகங்கள், பறவைகள், மரம் செடி கொடிகள் முதலியவற்றின் சுயேச்சையான வாழ்க்கையையும், அவ் வாழ்க்கையால் அவை அடையும் மகிழ்ச்சியையும் ஆராய்வார். அந்த ஆராய்ச்சியால், "மனிதர்க்கும் இவ்வித

சுயேச்சையான வாழ்க்கையும், ஆனந்தமும் இருத்தல் அவ சியமாம்; அவர்கள், சில பழைய மூடக் கொள்கைகளில் கட் டுப்பட்டுத் தங்கள் சுகமான வாழ்க்கையைத் துக்கமான வாழ்க்கையாக்கிக் கொள்வது பேதைமை; இந்தப் பேதைமை யான கட்டுப்பாடுகளை நீக்கினால் மாத்திரம் நம் நாட்டு மக்கள் நன்மை யடைவார்கள்'' என்ற சீர் திருத்த எண்ணங்கள் அவர் மனத்தில் உதித்தன; அவை நாளடைவில் விருத்தி யாகிக்கொண்டே வந்தன.

இப்படிப்பட்ட நல்ல எண்ணங்களோடு கூடியிருந்த இராஜாராம் மோஹன்ராயிக்கு, அவர் தந்தையே ஆரம்பக் கல்வி கற்பித்தார். பின்னர் அவர் கல்வி கற்கும் பொருட்டுத் தந்தையால், பாட்னாவிற் கனுப்பப்பட்டார். அக் காலத்தில் முகம்மதிய இராஜ்ஜியம் ஓங்கியிருந்தபடியால் கல்விச் சாலை களில், பெர்ஷியன், அராபிக் முதலிய பாஷைகளிலே கல்வி கற்பிக்கும் முறை ஏற்பட்டிருந்தது; அவ் வகைக் கல்வியே இராஜாங்கக் கல்வியாகவும் அமைந்திருந்தது; உத்தியோகம் முதலிய பெரிய பதவிகளைப் பெறுவதற்கும் அக் கல்வியே அனுகூலமா யிருந்தது. ஆதலால், இராஜாராம் மோஹன் ராய் பாட்னாவிற்குப் போய் மேற்கூறிய பாஷைகளிலேயே கல்வியைக் கற்றார். குர்ஆனையும், மற்ற இஸ்லாமிய நூல் களையும், ஷாபி முகம்மதிய நூல்களையும் நன்கு கற்று அவற் றின் உட்பொருள்களைத் தெளிவாக உணர்ந்து கொண்டார்; குர்ஆனில் சொல்லிய நீதிகளைப் பொன்னேபோல் போற்றி மனத்தில் நிலைபெறச் செய்துகொண்டார். இவ்வாறு அவர் இராஜாங்கக் கல்வியில் தேர்ச்சியடைந்தது பின்னால் உயர்ந்த பதவிகளை அடைவதற்கு ஏதுவாயிருந்தது.

அவருடைய பதினாறுவது வயதில், முன் அவருக்கேற் பட்டிருந்த உலக சீர்திருத்த எண்ணங்கள் அதிகரித்தன;

பொது நன்மைக்குப் பாடுபடவேண்டுமென்னும் விருப்பமுண்டாயிற்று. அந்த விருப்பத்தோடு அவர், பாட்ணுவைவிட்டு ஊருக்குத் திரும்பி வந்தார். வந்தபின் இந்துமதக் கொள்கைகளிற் காணப்படும் மூடப் பழக்க வழக்கங்களைக் கண்டிக்கத் தலைப்பட்டார்; ஆத்ம சக்தியை நன்குணர்ந்து, அது சாந்தியடையத்தக்க மார்க்கங்களைக் கண்டுபிடித்தார். வைதீகக் கொள்கைகளிலுள்ள பேதைமையான பழக்க முடையவர்களோடு எதிர்த்து, அவர் கொள்கைகளைக் கண்டித்துப் பிரசங்கித்தும், எழுதியும் வந்தார். அவ்வாறு எழுதப்பட்ட சில வியாசங்கள் அவருடைய மேஜையிலிருந்தன. அவருடைய தந்தை ஒருநாள், காகிதம் எடுத்தற்பொருட்டு அந்த மேஜையைத் திறந்து பார்த்தார். அப்போது மேற்கூறிய வியாசங்கள் அவர் பார்வைக்கு அகப்பட்டன. அவற்றை அவர் பார்த்தவுடன், அவை யாவும் தம்முடைய வைதீகக் கொள்கைகளைக் கண்டித்து எழுதப்பட்டவைகளா யிருந்தபடியால், தம் புத்திரராகிய இராஜாராம்மோகன்ராயின் மீது மிகவும் வெறுப்பும், விரோதமுங் கொண்டார். இராஜாராம்மோஹன்ராயின் தாயாரும் அவர் செய்கையை உணர்ந்து அவர் மேல் சினங்கொண்டாள். உடனே அவருடைய தந்தை, தமக்கேற்பட்ட வெறுப்பால், வீட்டை விட்டு வெளியேறிப் போய்விடும்படி அவரைக் கடிந்துபேசினர். இராஜாராம்மோஹன்ராய், மறுவார்த்தை யொன்றும் பேசாமல் வெளியேறிப் போய்விட்டார். அப்போது தாய் தந்தையர் இருவரும் அவர் சென்றதைப்பற்றி வருந்தவில்லை. ஆனல், அவர் கண்ணுக்குக் காணுமல் மறைந்தபின் புத்திரவாஞ்சையால் மிகவும் வருந்தினர்கள்.

வீட்டைவிட்டு வெளியேறிய மோஹன்ராய், அவ்வூரில் கொஞ்ச நேரமும் தங்காமல் புறப்பட்டுத் தனியே பிரயாணம்

செய்து ஆயிரம் மைல் சென்று, ஹிமயமலையைக் கடந்து, டிபெட்டை அடைந்தார். அங்குப் போய்ச் சேர்ந்து, புத்த மதக் கொள்கைகளைக் கற்றுக்கொண்டார். பிறகு, அங்கிருந்த சில மதக்காரர்களோடு எதிர்த்து அவர் மதக்கொள்கைகளில், மனித இயற்கைக்குப் பொருந்தாதனவாயிருந்த கொள்கை களைக் கண்டித்துப் பேசினர். அதனல், 'லாமா-வொர்ஷிப்பர்' (லாமா வணக்கம் செய்பவர்) களால் துன்புறுத்தப் பட்டார்; அவர்கள், மோஹன்ராயைக் கொலை செய்யவும் முயன்றனர். ஆனல், அவர் தெய்வச் செயலாக அக் கொலையி னின்றும் தப்பினர்.

பின், இருபதாவது வயதில், மோஹன்ராய் ஊருக்குத் திரும்பி வந்தார். அப்போது, அவருடைய தந்தையாரும், தாயாரும் அன்புடன் அவரைச் சேர்த்துக் கொண்டார்கள். ஆனல், மோஹன்ராய் தம்முடைய சீர்திருத்தக் கொள்கை களைமட்டும் விட்டுவிடவில்லை; முன்னைக் காட்டிலும் அதிக மாகவே அவற்றில் தீவிர முயற்சி செய்து வந்தார். அவர் மூடக்கொள்கைகள் பலவற்றைக்கண்டித்ததில் உடன்கட்டை யேறும் கொடிய பழக்கத்தையே அதிகமாகக் கண்டித்து வந் தார். அதனல் தாய்தந்தையர் மீண்டும் அவர்மீது வெறுப் புற்றனர். தந்தை அவருக்குச் செலவுக்குப் பணம் கொடா மல், "நீ நம் வைதீகமதக் கொள்கைகளைக் கண்டிப்பதை விட் டால் மாத்திரமே உனக்கு நான் பணம் கொடுப்பேன்" என்று அவரைப் பயமுறுத்துவார்; அவ்வாறு பயமுறுத்தினலும் சில சமயங்களில் புத்திர வாஞ்சையால் இரகசியமாக அவருக்குப் பணம் கொடுப்பார். தந்தை என்ன செய்தாலும் அவர் தாம் கொண்ட கொள்கையை விடுவதில்லை. அவ்வாறு கொண்ட பிடிவாதத்துக்காக அவரைப் பலரும் கொண்டாடி வந்தார்கள்.

பிறகு மோஹன்ராய் இருபத்திரண்டாவது வயதில் ஆங்கிலம் கற்க ஆரம்பித்தார். வெகு சீக்கிரத்தில் ஆங்கிலம் கற்றுக்கொண்டதோடு கிரீக், ஹீப்ரு, லத்தீன் முதலிய பாஷைகளிலும் தேர்ச்சி அடைந்தார். அவர் மேற்கூறிய கல்விகளைப் படிக்குங் காலத்திலும், ஒழிந்த நேரங்களில் சமூக சீர்திருத்த காரியங்களில் உழைத்து ஜனங்களுக்கு ஏற்பட்டிருந்த வைதீக மதக் கொள்கைகளின் குருட்டு நம்பிக்கைகளை ஒழிக்க முயன்று வந்தார். அதனால் அவருடைய தாயார் அவர்மீது முன்னிலும் அதிகமான வெறுப்படைந்துவந்தாள். அக்காலத்தில் அவருடைய தந்தை இறந்து விட்டார்; பிறகு அவருடன் பிறந்திருந்த இரண்டு சகோதரர்களும் இறந்துவிட்டார்கள்; குடும்ப சொத்துக்களுக்கு அவர் ஒருவரே உரியவரானார். அப்படியிருந்தும் அவருடைய தாயார் தனக்கு அவர்மீ தேற்பட்டிருந்தவெறுப்பினால், "இராஜாராம்மோஹன்ராய் எங்கள் மதக் கொள்கைகளுக்கு விரோதமா யிருப்பதால் குடும்ப சொத்தின் உரிமை அவனுக்கில்லை" என்று சொத்துக்களை அவர் வசமாக்க மறுத்தாள். இதைப்பற்றி நீதிஸ்தலத்தில் வழக்கு நடந்தது; அதில் மோஹன்ராயே ஜெயம்பெற்றார்; சொத்துக்கள் அவருக்குக் கிடைத்தன.

பின்னர் அவருடைய தாயார் அவருக்குச் செய்த கொடுமைகளைப்பற்றி வருந்தினாள்; தான் செய்தது தவறு என்பதை உணர்ந்தாள். உணர்ந்தபின், பிள்ளையின்மீது அன்பு செலுத்தினாள்; முடிவில் அவள், ஜகந்நாதம் போகப் புறப்பட்டாள். அவ்வாறு புறப்படும் போது இராஜாராம் மோஹன்ராயிடத்தில், "குழந்தாய்! நீ இந்து மதக் கொள்கைகளில் சிலவற்றைக் கண்டித்துப் பேசுவது சரியாயிருக்கலாம்; ஆனால், அந்தப் பழக்கங்கள் நீடித்து

வந்தவைகளா யிருப்பதால் அவற்றை விட்டொழிப்பது என்னால் முடியவில்லை'' என்று அவருக்குச் சமாதானம் சொல்லி விட்டுச் சென்றாள். சென்று ஒரு வருஷத்துக்குப்பின் ஜெகந்நாதத்திலேயே இறந்துபோய் விட்டாள்.

மோஹன்ராய் ஆங்கிலம் முதலிய பல பாஷைகளில் தேர்ச்சி அடைந்தபடியால், அவற்றைக் கற்றுத் தேர்ந்தபின் அவருக்குக் கிழக்கு இந்தியா கம்பெனியில் திவான் (கலெக்டர்) உத்தியோகம் கிடைத்தது. அந்த உத்தியோகம் கிடைத்தபின் அவர், ரெவினியூ டிபார்ட்மெண்டில் கஷ்டப்பட்டு வேலை செய்துவந்தார். அந்த உத்தியோகத்தி லிருக்கும் போதே, பகலெல்லாம் வேலை செய்து விட்டு மாலை நேரங்களில், ஹிந்துக்கள், முகம்மதியர், ஜைனர் முதலிய பல மதஸ்தர்களோடு சம்பாஷித்து அந்த அந்த மதக் கொள்கைகளில் உள்ள நன்மை தீமைகளை எடுத்துக்காட்டித் தீய பழக்கங்களை ஒழிக்க வேண்டுமென்று தர்க்கம் செய்து வந்தார்.

பிறகு, அவருடைய உத்தியோகம், அவர் செய்யவேண்டியிருந்த உலக சீர் திருத்த விஷயங்களுக்கும், பொது நன்மையான காரியங்களுக்கும் இடையூறாயிருந்த படியால், அவர் நாற்பதாவது வயதில், அந்த உத்தியோகத்திலிருந்து நீங்கிவிட்டார். அவ்வாறு நீங்கியபின், ஆத்மீய சபை யொன்றை ஏற்படுத்தினார்; தம்மோடொத்த வயதுள்ள நண்பர்களை அதில் மெம்பராகச் சேர்த்தார். அந்தச் சபையில் செய்த நூலாராய்ச்சிகளாலும், சம்பாஷணைகளாலும் கடவுளின் உண்மைத் தத்துவத்தை நன்குணர்ந்து கொண்டார். அந்தச் சபையை ஏற்படுத்திய ஐந்து வருடங்களுக்குப் பிறகு, உலகத்தார்க்கு நன்மை பயக்கத்தக்க பல நூல்களை வெளியிட்டுப் பலருக்கும்

இலவசமாகவே கொடுத்துவந்தார்; தம்முடைய பொருளிற் பெரும்பாகத்தை அவற்றிற்கே செலவிட்டார்; இன்னும் உபநிஷத்துக்களையும், வேதத்தின் சார்பான வேறு சில நூல்களையும் மொழி பெயர்த்தார். அவற்றை அவர் ஆராய்ந்து பார்த்தபோது, அக்காலத்தில் வைதீக மதத்தினர் அனுஷ்டித்து வந்த உடன்கட்டை யேறுதல் முதலிய மூடக் கொள்கைகள் அவற்றில் காணப்படவில்லை. அதனால் அவர், இந்தக் கெட்ட கொள்கைகள் பிற்காலத்தில் ஜனங்கள் தங்களுடைய அறியாமையினால் ஏற்படுத்திக் கொண்டனவென்று தீர்மானித்து அதிசயமுற்றார்;அதன்மேல் அவற்றைக் கண்டிப்பதற்கு முன்னைக் காட்டிலும் அதிகமான ஊக்கங்கொண்டார். அப்போது அவருக்கு எதிர்ப்புக்கள் பலமாக ஏற்பட்டன; பலர் அளவு கடந்து அவரைத்தூஷித்தனர். அவற்றிற்கெல்லாம் அவர் சிறிதும் கோபங்கொள்ளாமலும், மனந்தளராமலும் சாந்தமாகவே யிருந்து சீர்திருத்த முயற்சிகளைச் செய்துவந்தார். இன்னும் அவர் செய்த பொது நன்மையான காரியங்கள் பல வுண்டு; அவை என்றும், எவராலும் பாராட்டக் கூடியவை.

மோஹன்ராய் பின்னும் ஆங்கிலக் கல்வி விருத்திக்கு மிகவும் உதவி புரிந்தார்: ஸ்காட்டிஷ் மிஷனரியாகிய, 'அலெக்சாண்டர் டப்' என்னும் கிரிஸ்துமத ஆசிரியருக்கு உதவியாயிருந்து கல்கத்தாவில் ஆங்கிலக் கல்விச்சாலை ஏற்படும்படி செய்தார்; தாமே கல்கத்தாவின் மற்றொரு பக்கத்தில், வேறொரு ஆங்கிலஸ்கூலை ஏற்படுத்தி நடத்தி வந்தார். அவர் பெர்ஷியன், சமஸ்கிருதம் முதலிய சுயதேச பாஷைகளில் மிக்க பாண்டித்தியம் பெற்றவரா யிருந்தும், ஆங்கிலம், பல தொழில்களிலும் ஜனங்கள் விருத்தியடைவதற்கு அனுகூலமான பாஷையாயிருந்தபடியால் அதனை விருத்தி செய்வதற்

கான முயற்சிகளை அதிகமாகச் செய்தார். பலவிதமாகிய நூதன தொழில்முறைகளைக் கற்பிக்கும் நூல்கள் நம் தேச பாஷைகளில் இல்லாதிருந்ததாலும், ஆங்கிலத்திலேயே இருந்ததாலும் அவற்றை யெல்லாம் நம் தேச பாஷைகளில் மொழி பெயர்த்து வெளியிடத்தக்க முயற்சிகளை மிகுதியாகச் செய்தார்; இந்திய தேச பாஷைகளில் இருந்த நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளிப்படுத்த வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தார். இவை யெல்லாம் இந்திய மக்களின் விருத்தியைக் கருதியே அவரால் செய்யப்பட்டன.

பிறகு, 54-வது வயதில், 'பிர்ம்ம சமாஜ்' என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார். 'உண்மைக் கடவுள் ஒருவரே' என்பது இச் சங்கத்தின் கொள்கையாகும்; இந்து மதக் கொள்கைகள் பல வகைகளிலும் சீர்கேடடைந்திருந்த அக்காலத்தில், அவற்றில் பல சீர்திருத்தங்களைச் செய்வதற்கு இந்தச் சங்கம் மிக்க உதவியாயிருந்தது. இராஜாராம் மோஹன்ராய், தம் ஆயுள்வரை இந்த பிர்ம்ம சமாஜத்துக்கே உழைத்துச் சமூக சீர்திருத்தங்களைச் செய்துவந்தார். எல்லோரும் தீய பழக்கவழக்கங்களை ஒழித்து ஒற்றுமையடைந்து சுய உரிமை பெற்று வாழ்வதற்கே பெரிதும் பாடுபட்டு வந்தார். முக்கியமாக அக்காலத்தில் இருந்தவர்கள் பெண்களைத் தாழ்மையாக நடத்தி, உடன் கட்டை யேறுதல் முதலிய கொடிய காரியங்களுக் குட்படுத்தி வந்ததைப் பற்றியும், அவர்கள், பிறர் செய்யும் கொடுஞ் செயல்களுக் கடங்கி யிருந்ததைப்பற்றியும் கூட்டங்களில் மனமுருகப் பேசிவந்தார்; பெண்களுக்கு ஆடவர்களைப் போலவே எல்லா வகையிலும் உரிமை கொடுத்துக் கல்வியும் போதிக்க வேண்டுமென்பதைப் பற்றிப் பலருக்கும் வற்புறுத்தி வந்தார்; பெண்கள் உடன்கட்டை யேறவேண்டுமென்ற விதி சாஸ்திரங்களில் இல்லையென்று பலருக்கும் பன்

னிப் பன்னிச் சொன்னூர். அவருடைய பேச்சு வல்லமை பலரையும் எளிதில் வசப்படுத்திவிடக்கூடியதாயிருந்தது. அப்படியிருந்தும் அவருடைய பேச்சை மதப்பற்றுள்ள வைதீகக் கூட்டத்தார் ஏற்றுக் கொள்ளவேயில்லை.

மோஹன்ராயின் 37-வது வயதில், அவருடைய சகோதரர் இறந்த காலத்தில் அவருடைய மனைவி முதலில் உடன் கட்டை யேறுவதற்கு இசைந்தாள். அவளைப் பந்துக்கள் காஷ்டத்தில்வைத்து எரிக்கும்போது, நெருப்பு நெருங்க ஆரம்பித்தவுடன் அவள் பயந்து வெளியேற முயன்றுள். ஐயோ! புரோகிதரும், சுற்றத்தார்களும் மூங்கில் தடிகளால் அழுத்தித் தடுத்து அவளை எரித்தேவிட்டார்கள். இந்தக்கொடுஞ்செயலை அப்போது மோஹன்ராய் பார்த்தார்; அவர் மனம் பதைத்தது; அதுமுதல்தான் அவர் இந்தப் பரிதாபச் செயலை ஒழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டார்.

அவர், மேற்கூறியபடி செய்துவந்த சீர்திருத்த முயற்சிகளை வைதீகர் ஏற்றுக்கொள்ளாதிருந்தும், தம் கொள்கைக்கு எதிர்ப்புக்கள் பலமாயிருந்தும் விடாமுயற்சியாக உடன் கட்டை யேறுதலை ஒழிப்பதற்கு 10-வருடங்கள்வரை பெருங் கிளர்ச்சி செய்து வந்தார். அக்கிளர்ச்சியின் பயனுக அப்போது கவர்னர் ஜெனரலாயிருந்த, ‘லார்டு வில்லியம் பெண்டிங்க்’ என்பவர், உடன்கட்டை யேறுதலை நிறுத்தி விடும்படி உத்தரவு பிறப்பித்தார். அதை ஒப்புக்கொள்ளாமல் வைதீகக் கொள்கை யுடையவர்கள், “எங்கள் மதத்தின் முக்கிய கொள்கையாகிய உடன்கட்டையேறுவதை நிறுத்தலாகாது” என்று பார்லிமெண்டுக்கு மனுச்செய்து கொண்டனர்.

அதன் பொருட்டு, இராஜாராம் மோஹன்ராய் 57-வது வயதில் இங்கிலாந்துக்குச் சென்றூர். இந்தியாவிலிருந்து

முதன்முதலாக ஐரோப்பா சென்றவர் இவர் ஒருவரே. இவர் அங்குச் சென்று பார்லிமெண்டில், உடன்கட்டை யேறும் வழக்கத்தை ஒழித்துவிடவே வேண்டுமென்று பல நியாயங்கள் காட்டி வாதாடினர். அதன்மேல், பார்லிமெண்டு சபையில் அதை ஒழித்துவிடும்படி கட்டளை பிறப்பிக்கப் பட்டது. அதுமுதல் அவ்வழக்கம் இந்தியாவில் அடியோடுதொலைந்தது. இவர் இங்கிலாந்துக்குச் சென்றபடியே இரண்டு வருடங்கள் வரை ஐரோப்பாவில் தங்கினர். அந்த இரண்டு வருடங்களிலும் பிரான்சு முதலிய இடங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள பல பெரியோர்களால் கொண்டாடப்பட்டார். அந்த இரண்டு வருடங்களில் அவருக்கு முன் எதிர்ப்புச் செய்தவர்களெல்லோரும் நல்வழிக்குத் திரும்பி அவர் கொள்கையை ஏற்றுக் கொண்டார்கள். அதனால் அவர் அந்த இரண்டுவருடகாலத்தில்தான் மன அமைதியோடிருந்தார். அவர் அங்கிருந்து மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பி வரவேயில்லை. சிறிது நோயுற்று, பிரிஸ்டல் நகரத்தில் உயிர் விட்டார். அவரிடம் விசுவாசம் வைத்திருந்தவர்களால் அவருடைய பிரேதம் கௌரவமாக அடக்கம் செய்யப்பட்டது.

---

10. கதைச் செய்யுட்கள்.

(பஞ்ச தந்திரம் ஆஷாடபூதி கதை)

பூர்வகா லத்தி லிந்தப் பூதலந் தன்னில் மிக்க
சீர்பெறு தவசி வேடந் தாங்கிய தேவ சர்மா [மேற்
ஊர்தொறு மிரந்து சேர்த்த வொண்பொருள் தன்னைத் தன்
போர்வையிற் பொதிந் தெவர்க்கும் புலப்படா வண்ணம்
[போர்த்தே. 1



திரிந்தனன் பிறரை மோசஞ் செய்திடுஞ் சூழ்ச்சி யெல்லாம்
தெரிந்த ஆஷாட பூதி தேவசர் மாவும் முன்னே [டால்
புரிந்ததந் திரத்தைக் கண்டு போர்வையைக் கவர்ந்து கொண்
விரிந்தநம் தரித்தி ரந்தான் விலகிடு மென்றே யெண்ணி. 2

அடுத்தனன் சன்னியாசிக் கடிமையாய் அவன்தொ ண்டாற்
[றத்
தொடுத்தனன் அவனைப் போற்றித் துதித்தனன் சுவாமி
[யென்னைக்
கெடுத்ததீ வினையைப் போக்கு மென்றுமே கெஞ்சிப் போர்வை
எடுத்திடுஞ் சமயம் பார்த்தே யிருந்தனன் இருக்கும்போது. 3

இவர்களுக் கொருவர் ஓர்நாள் இன்பமாம் விருந்து செய்ய
அவரிட்ட உணவை மிக்க அவாவுடன் இவர்கள் உண்டார்
சிவசிவ வென்றே சொல்லித் தெருவினில் மீண்டு வந்தார்
அவனியில் மோசக் கார னைஆ ஷாட பூதி. 4

ஒருசிறு துரும் பெடுத்தே உத்தமன் போல வேதன்
குருவறி யாத வண்ணம் குடுமிமேற் போட்டுக் கொண்டு
அருமையாங் குருவே அன்னம் அன்புடன் நமக் களித்த
தருமவான் வீட்டுக் கூரை தனிலுறு சிறு துரும்பு. 5

மைந்தனென் தலையி லொட்டிக் கொண்டிங்கு வந்த தந்தோ
இந்தமா பாத கத்தால் ஏழைநான் நரகிற் சேர்வேன்
அந்தநல் அன்ன தாதா வீட்டினை அடுத்தென் னோடு
வந்தஇத் துரும்பை அங்கே வைத்துடன் திரும்பி இங்கே. 6

வருகுவே னென்றே ஓடி வளர்ந்தஓர் செடிக்கப் பாற்போய்
அருகினில் மறைந் திருந்தே அத்துரும் பெடுத் தெறிந்து
குருவினின் பக்கல் வந்தான் கோதிலாக் குணத்தா னென்றே
பெருமையா அவனை அந்தப் பேதையும் நம்பினானே. 7

அந்தநம் பிக்கை யாலே அடுத்தநாள் சன்னி யாசி
கந்தையை அவிழ்த்தா ஷாட பூதியின் கைக் கொடுத்து
முந்துகா லைக்க டன்தான் முடித்திடச் சென்றா னங்கே
வந்தஆட் டுக்க டாக்கள் இரண்டுமா வயிரங் கொண்டே 8

ஒன்றினோ டொன்று முட்டி உறுசண்டை யிட அவற்றின்
மண்டையி லிருந்து கீழே வடியுமி ரத்தந் தன்னை
நின்றுமத் தியிற் குடிக்க நினைத்தவற் றிடையில் அந்தோ!
சென்றஓர் நரியின் யூகச் செய்கைகண் டதிசயித்தே. 9

சற்றுதா மதித் திருக்கத் தருணமீ தென்று மோசங்
கற்றஆ ஷாட பூதி கந்தையைச் சுருட்டிக் காற்றாய்
உற்றுநல் வேகங் கொண்டங் கோடியே மறைந்து விட்டான்
பற்றுள சன்னி யாசி பண்புடன் திரும்பி வந்தே. 10

சீடனில் லாகி ருக்கத் திடுக்கிட்டே உலகில் மிக்க
கேடன்நான் ஆகிக் கையிற் கிடைத்ததை இழந்து விட்டேன்
மூடமா மதியி னாலே முற்றிலும் மோசம் போனேன்
ஆடவர் தம்மில்என்போல் அரும்பொருள் இழந்தார் யாரே11

என்றெண்ணிக் கவலை யாலே இறந்தனன் இவனைப் போல
நன்று செய் திடுவார் போல நானிலந் தனில்ஓர் பற்றும்
இன்றியே துறந்தோம் என்றிங் கிச்சையாய்ப் பொருளைச்
[சேர்ப்போர்
பொன்றிஅப் பொருள் இழந்து புவியைவிட் டொழிகுவாரே12

---

11. 'காண்டர்' என்னும் அதிசயப் பறவை.

கடவுளால் படைக்கப்பட்ட தோற்றங்களுள் தாவரங்கள், மிருகங்கள் முதலியவற்றில் சில ஆச்சரியமான பிறப்புக்கள் இருப்பதுபோலவே, பறவைகளிலும் சில அற்புதப் பிராணிகள் இருக்கின்றன. அவற்றுள், 'காண்டர்' என்னும் பறவையும் ஒன்று. இது, தன்னைப் பார்ப்பவர்க்கு மிக்க அதிசயத்தை உண்டாக்கக் கூடியது. நம் நாட்டில் இந்தப் பறவையை நேரில் பார்ப்பது மிகவும் அருமையாகும்; படத்தில் தான் பார்க்கலாம். இது கழுகின் இனத்தைச் சார்ந்தது.

இந்தக் காண்டர்ப் பறவைகள், தென் அமெரிக்கா தேசத்தைச்சார்ந்த, 'பாம்பாஸ்' என்னு மிடத்தில் இருக்கின்றன. இவை, மலைச் சார்பான இடங்களிலேயே மிகுதியாக வாசஞ் செய்கின்றன. இவற்றைப்பற்றி ஆச்சரியமான வரலாறுகள்



பலரால் கூறப்படுகின்றன. இவற்றிற்கு மிகுந்த உடல் வலிமை உண்டு; இவற்றின் சிறகுகள் மிகவும் உறுதியானவை. இந்தப் பக்ஷிகள் வசிக்கு மிடங்களுக்குச் சென்ற யாத்திரைக் காரர்கள், இவற்றின் வல்லமைகளை நேரில் பார்த்துவந்து பலருக்குச் சொல்லி யிருக்கின்றார்கள். இப் பறவைகள் பார்வைக்கு மிக்க விநோதமான தோற்றமுடையவகளா யிருக்கும்.

இவை மிகுந்த உடல் வலிமை பெற்றவைகளா யிருப்பதால் மனிதராலோ, பிற பிராணிகளாலோ இவற்றைக் கொல்வது எளிதாக முடியாது; இவற்றின் இறகுகள் உறுதியும் நெருக்கமும் உள்ளவைகளா யிருப்பதால் சிறு ஆயுதங்களாவது, சிறு துப்பாக்கிக் குண்டுகளாவது அவற்றை ஊடுருவிச் செல்வது முடியாது. ஆதலால், அந்தத்தேசத்தி லுள்ளவர்கள் இவற்றைச் சிறு குண்டுத் துப்பாக்கியால் சுட்டோ, சிறு கத்தி முதலிய ஆயுதங்களால் குத்தியோ, வெட்டியோ கொல்வதற்குப் பெரும்பாலும் முயல்வதில்லை; அவசியம் நேர்ந்த போது பலங்கொண்டு பாயும் கவண்கற்களாலும், பெரிய துப்பாக்கிக் குண்டுகளாலும் இவற்றைக் கொல்வார்கள்; வலை கட்டியும், கயிற்றால் இவற்றின் காலில் சுருக்கிட்டும், அவற்றின்மூலம் இவற்றை மிக்க தந்திரமாக உயிருடனும் பிடிப்பார்கள்.

இந்தப் பக்ஷிகள் நுனி மூக்கிலிருந்து அடி வால் வரை சுமார் நான்கைந்தடி நீள முள்ளவைகளா யிருக்கின்றன; இவற்றின் இரண்டு சிறகுகளுக்கு இடையிலுள்ள உடம்பின் குறுக்களவு—அகலம்—பன்னிரண்டு அடி முதல் பதினான்கு அடி வரையிலும் இருக்கின்றது.

இவற்றைப் பிடிக்க விரும்புவோர், சில சூழ்ச்சிகளைச் செய்கின்றனர்: கொஞ்சம் மாமிசத்தோடு சேர்ந்திருக்கின்ற-புதிய-பசுமாட்டுத் தோல்களை, இப்பறவைகள் இரை தேட வந்திறங்கும் உயரமான இடங்களில் சரிவாகப் பரப்புவார்கள். ஒருவன், இவற்றின் காலில் சுருக்கிட்டு இவற்றைப் பிடிக்கத் தக்க கயிற்றுடன், அங்கே அருகில் மறைவான இடத்தில் மறைந்துகொண்டிருப்பான்; அவனுக்குச் சமயத்தில் உதவி செய்யும்பொருட்டுப் பக்கங்களில் அநேகர் மறைந்துகொண்

டிருப்பார்கள். இந்தப் பறவைகள் நெடுந்தூரத்திலிருந்தாலும், அங்குப் பரப்பப்பட்ட மாமிசத்தோடு கூடிய தோல்களின் வாசனையை உணர்ந்து, அவற்றைத் தின்பதற்கு உடனே பறந்து வந்து இறங்கும். அவ்வாறு இறங்கியவுடன், பக்கத்தில் கயிற்றுடன் மறைந்திருந்த மனிதன், மறைந்தபடியே விரைவாக அந்தக் கயிற்றினால், சமீபத்தில் எந்தப் பறவை யிருக்கிறதோ, அந்தப் பறவையின் கால்களில் சுருக்கிட்டுக் கட்டிவிட்டு, உடம்பையும் பலமாகக் கட்டிவிடுவான். அவ்வாறு கட்டுப்பட்டவுடன், அது பறக்க முடியாமல் அடங்கி நின்றுவிடும்.

பிறகு, இந்தப் பறவைகளின் வேட்டைக்குச் சென்ற மனிதர்கள், இவ்வாறு அகப்பட்ட பறவைகளைப் பக்கத்திலுள்ள கிராமங்களுக்குக் கொண்டுபோய்க் கிராமவாசிகளிடம் விற்பனை செய்வார்கள். சிலி, பெரு முதலிய இடங்களில், இவ்வாறு வேட்டைக்காரரால் உயிருடன் பிடிக்கப்படும் பறவைகள், ஒன்றரைடாலர், ஆறு ஷில்லிங்குக்கு விற்பனை செய்யப் படுகின்றன.

இப்பேர்ப்பட்ட அதிசயமான பறவைகளும், பெரிய மிருகங்களும் சுயேச்சையாகச் சஞ்சரிக்கும், "பாம்பஸ்" என்னுமிடத்திற்கு மனிதர்கள் செல்வது முற்காலத்தில் மிகுந்த பிரயாசையாயிருக்கும்; பிரயாணம் செய்வதற்கு இருப்புப்பாதை முதலிய வசதிகள் ஏற்படாமலிருந்தன; இக் காலத்தில் புகைவண்டித்தொடர் செல்வதற்கு வசதி ஏற்பட்டிருக்கிறது; பலர், அவ்விடத்திற்குச்சென்று அங்குள்ள அதிசயங்களைப் பார்த்து மகிழ்ச்சி யடைந்து வருகின்றனர். இப்படிப்பட்ட ஆச்சரியப்பிறவிகளை மாணவர்கள், நேரில் பார்ப்பதும் புத்தகங்களைப் படிப்பதால் உணர்வதும் அறிவு விருத்தியடைவதற்கு ஏதுவாம்.

12 ஜீவகாருண்ய சம்பாஷணை.

முத்தும், மணியும்.

முத்து:—நண்பா "ஜீவகாருண்யம்! ஜீவகாருண்யம்!" என்று சில பெரியோர்கள் கூறி வருகின்றார்களே! ஜீவ காருண்யம் என்பது என்ன?

மணி:—முத்து! நீ இதுவரை இதைத் தெரிந்து கொள்ளாமலா இருக்கின்றாய்? ஜீவகாருண்ய மென்பது பிராணிகளிடத்து அன்பு செலுத்துவது.

முத்து:—அன்பு செலுத்துவது எப்படி?

மணி:—எந்தப் பிராணிக்கும் துன்பஞ் செய்வது கூடாது; பிராணிகள் துன்பப்படுவதைக் கண்டால் உடனே அத் துன்பத்தை நீக்க வேண்டும்; இரைதேட சக்தியின்றிப் பசியால் வருந்தும் பிராணிகளைக் கண்டால் அவற்றிற்கு இரை கொடுக்க வேண்டும்; கால் கை முதலிய அங்கங்கள் பின்னப்பட்டோ, நோய்கொண்டோ நடக்க முடியாமல் கஷ்டப்படும் பிராணிகளைக் கண்டால் அவற்றிற்கு இரை கொடுப்பதோடு நோய்கள் நீங்கத்தக்க பரிகாரம் செய்யவேண்டும்; அவை இடரின்றிக் குடியிருந்து வாழத்தக்க வசதிகளை அவற்றிற்கு ஏற்படுத்த வேண்டும்; வேறு எதனாலும் அவற்றிற்குத் துன்பம் நேராதபடி அவைகளைப் பாதுகாக்கவேண்டும்; இவ்வாறு பலவகைகளிலும் அவற்றின்மீது பக்ஷமாயிருப்பது தான் அன்பு செலுத்துவதாகும்.

முத்து:—பிராணிகள், கடவுளால் படைக்கப்பட்டுத் தங்கள் தங்கள் இஷ்டப்படி சுயேச்சையாக வாழக்கூடியவையா

யிருக்கின்றன; அப்படி யிருக்கும்போது மனிதர்கள் மாத்திரம் ஏன் அவற்றிற்கு உதவி செய்யவேண்டும்?

மணி:—மனிதர் பகுத்தறிவோடு கூடியவர்களா யிருக்கின்றார்கள்; மற்றப் பிராணிகளுக்குப் பகுத்தறிவில்லை; இக்காரணத்தினாலேயே மனிதப்பிறப்பு மற்றப் பிறப்புக்களைக் காட்டினும் உயர்ந்ததாகக் கொண்டாடப் படுகிறது; மனிதர் பகுத்தறிவுடையவர்களா யிருப்பதால், நன்மை தீமைகளையும் பாப புண்ணியங்களையும் பகுத்தறிந்து, தீயகாரியங்களை விலக்கி நல்ல காரியங்களைச் செய்யக்கூடியவர்களா யிருக்கின்றார்கள்; மற்றப் பிராணிகள் பகுத்தறிவில்லாதவைகளா யிருப்பதால், ஒன்றிற்கொன்று துன்பஞ் செய்யக்கூடியனவாயும் ஒன்றை ஒன்று பிடித்துச் சாப்பிடக்கூடியனவாயு மிருக்கின்றன; அதனால் அவற்றிற்கு எப்பொழுதும் பிராணபயம் அதிகரித்திருக்கின்றது; அந்த அச்சத்தால் அவை பகுத்தறிவுள்ள மனிதருடைய உதவியை நாடுகின்றன; மனிதருடைய சார்பில் அடுத்து வாசஞ் செய்தால், அவர்கள் தங்களுக்கு வரும் இடையூறுகளை நீக்குவார்களென்று நம்புகின்றன; இந்த நம்பிக்கையினாலேயே சிட்டுக்குருவி, எலி, வௌவால், பல்லி முதலியவைகள் மனிதர் குடியிருக்கும் வீடுகளிலேயே கூடு கட்டி வாழ்கின்றன; சர்ப்பம் முதலிய சில பாம்புகளும்கூட வீடுகளில் குடியிருந்து, 'மனைப் பாம்பு' என்று பெயர் பெற்றிருக்கின்றன; காகம், பருந்து முதலிய பறவைகள் மனிதர் குடியிருப்புக்குப் பக்கத்திலுள்ளமரங்களில் கூடுகட்டிக் குஞ்சு பொரித்து வாழ்கின்றன; வேறு சில கொக்கு, நாரை முதலிய பறவைகள் மனிதர் வசிக்கும் கிராமங்களுக்குப் பக்கத்திலுள்ள நீர்நிறைந்த குளங்கள், அல்லது ஏரிகளின் மத்தியிலுள்ள மரங்களில் கூட்டங் கூட்டமாகக் கூடுகள் கட்டி முட்டையிட்டுக் குஞ்சுகள் பொரித்து, அவற்றை வளர்த்து

வாழ்கின்றன; இப்படி அவைகள் மனிதருடைய உதவியையே பெரும்பாலும் நாடுவதால், மனிதர் அவற்றைப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்; இவ்வாறு செலுத்தும் ஜீவ காருண்யத்தால் அவர்களுக்கு மிகுந்த புண்ணியமுண்டு; அந்தப் புண்ணியத்தால் மனிதர்க்கு மிகுந்த நன்மையுண்டு.

முத்து:—அப்படியானால் எல்லாப் பிராணிகளும் மனிதருடைய உதவியை நாடவில்லையே; சிங்கம், கரடி, புலி, யானை முதலிய சில பிராணிகள் காடுகளிலும், மலைகளிலும் வாசஞ் செய்கின்றனவே; அதற்குக் காரணமென்ன?

மணி:—அந்தப் பிராணிகள், மற்ற பிராணிகளைக்காட்டிலும் பலமும், தைரியமும் பொருந்தியவைகளாயிருக்கின்றன; அதனால்,இதரபிராணிகளுக்கு அஞ்சுவதில்லை; மேலும், அவற்றை மனிதர் கண்டால், அவற்றால் தங்களுக்குத் துன்பம் விளையுமென்று அஞ்சித் துரத்துகின்றார்கள்; இக்காரணங்களினாலேயே அவை மலைகளிலும், குகைகளிலும் வாசம் செய்கின்றன; மனிதர் அவற்றின்மீதும் பக்ஷமுடையவர்களாயிருந்தால் அவைகளும் மனிதர் குடியிருப்புக்குப் பக்கங்களிலேயே வாசஞ் செய்யும்.

முத்து:—சிங்கம், புலி, சர்ப்பம் முதலியவைகள் மனிதரைக் கண்டவுடனே சீறிப்பாய்ந்து அவர்களைக் கடித்துக் கொல்லக் கூடியனவா யிருக்கின்றனவே; அவற்றின்மீது மனிதர் எவ்வாறு அன்பு செலுத்துவது? அவற்றைக் கண்ட மாத்திரத்தில் மனிதர், தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டுக் கொன்றுவிடுவது தானே நியாயமா யிருக்கின்றது?

மணி:—மனிதர்க்குத் துன்பஞ் செய்யவேண்டும் என்னும் எண்ணம் அவற்றிற்கு எப்பொழுதுமில்லை; மனிதர் அவற்றைக் கண்டமாத்திரத்திலேயே அவை துஷ்டப்பிராணிகள் என்னும் எண்ணத்தால் அவற்றிற்குத் துன்பஞ் செய்வது வழக்கமாகிவிட்டது; அத்துன்பத்திற் கஞ்சியே அவை மனிதரைக் கண்டவுடன் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு அவர்களுக் கிடையூறு செய்யத் துணிகின்றன; மனிதர், அவற்றிற்குத் துன்பஞ் செய்யாதிருந்தால் அவைகளும் மனிதர்க்குத் துன்பஞ் செய்யமாட்டா; துஷ்ட ஜந்துக்களிடத்திலும் மனிதர் அன்பு செலுத்தினுல் அவைகளும் மனிதர்மீது அன்புடையனவாயிருக்கும்; மேல்நாட்டுக்காரர் சிலரால் சில துஷ்ட ஜந்துக்கள் வளர்க்கப்பட்டு அவைகள், அவர்கள்மீது அன்புள்ளவைகளா யிருந்தன வென்று நாம் புத்தகங்களிலும், பத்திரிகைகளிலும் படித்திருக்கிறோம்; நம்முடைய தேசத்திலும் பிறஜீவன்களுக்குத் துன்பஞ் செய்யாத சாதுக்கள் வனங்களில் வசித்தபோது சிங்கம், புலி முதலிய துஷ்ட ஜந்துக்கள் அவர்களுக்குத் துன்பஞ் செய்யாமல் அவர்களுடைய ஆசிரமங்களுக்குப் பக்கங்களில் வசித்ததாகவும் புத்தகங்களில் படித்திருக்கிறோம்; ஆயினும், துஷ்ட மிருகங்கள், மனிதரைத் தங்கள் விரோதிகளாக பாவிக்கும் இயற்கை நெடுங்காலமாக வழக்கத்தில் வந்துவிட்டபடியால், அவைகளிடம் திடீரென்று நெருங்கிப்பழகுதல் கூடாது; அவ்வாறு பழகாவிடினும் அவற்றிற்குத் துன்பஞ் செய்யாதிருப்பது நல்லது.

முத்து:—மனிதருடைய உதவியைநாடும் மற்ற பிராணிகளும் அவர்களின் குடியிருப்புக்குப் பக்கத்தில் கூடு கட்டி வாழ்ந்தாலும், மனிதர் நெருங்கும்போது பயந்தோடுகின்றனவே; இதற்குக் காரணமென்ன?

மணி:—அவை மனிதருடைய உதவியை நாடியிருந்தாலும், நெஞ்சிரக்கமற்ற சிலமனிதர்கள் அவற்றைப் பிடித்துக் கூண்டுகளில் அடைத்து வேடிக்கையாக வளர்க்கத் தொடங்கித் துன்புறுத்துகின்ருர்கள்; சிலர் அவற்றைக் கொன்று தின்னுகின்ருர்கள்; இந்தக் காரணங்களிஞலேயே அவைகள் எந்த மனிதர், தம்மிடம் நெருங்கிஞலும் அஞ்சியோடுகின்றன; தம்மீது அன்பு செலுத்தும் மனிதரிடத்தும்கூட அவை சந்தேகங் கொள்கின்றன; இவ்வாறு அவைகள் ஒருவகையில் மனிதர்க்கஞ்சுவதாலும், மற்ருெரு வகையில் அவர்களுடைய உதவியை நாடுவதாலும், குளிர் காய்பவர், நெருப்பை விட்டு நீங்காமலும், அதிகமாக அதனிடம் நெருங்காமலும் இருப்பதுபோல், அவர்களிடம் அதிகமாக நெருங்காமல் அவர்களுக்குப் பக்கத்திலேயே குடியிருந்து வருகின்றன. மனிதர் எல்லோருமே அவற்றிற்குத் துன்பஞ் செய்யாதிருந்தால் அவைகள் மனிதரிடம் மிகவும் நெருங்கி உறவாடிக்கொண்டிருக்கும். பிராணிகளிடத்து அன்பு செலுத்தும் சிலரிடத்தில் சில பறவைகளும், மிருகங்களும் நெருங்கி உறவாடுவதை நாம் சில விடங்களில் பார்க்கலாம்.

முத்து:—பிராணிகளைப் பிடித்துக் கூண்டுகளில் அடைத்து வளர்ப்பதால் குற்றமென்ன? அவற்றிற்குத் துன்பஞ் செய்வதுதானே குற்றமாகும்; அவற்றை வளர்ப்பவர்கள், அவற்றிற்கு நல்ல ஆகாரங் கொடுத்துப் பிரியத்தோடுதானே காப்பாற்றி வருகின்ருர்கள்; இப்படி வளர்ப்பதால் அவற்றிற்குத் துன்பமென்ன?

மணி:—பிராணிகளை வதைப்பதைக் காட்டினும் கூண்டில் அடைத்துச் சிறைப்படுத்தி வைப்பதுதான் அவற்றிற்கு மிகுந்த துன்பத்தைத்தருவதாகும்; அவை, தம்இனங்களோடு

சேர்ந்து மகிழ்ந்து சுயேச்சையாய் இஷ்டமான விடங்களில் சஞ்சரிப்பதை விடுத்து ஒரு கூண்டில் ஆயுள்வரை தனித்து வாசஞ்செய்வதால் மிகுந்த துன்பத்தை அடைகின்றன; நம்மை ஒருவர், ஆயுள்வரை ஒரு சின்ன அறையில் அடைத்து வைத்தால் நம்மனம் என்ன பாடுபடும்? நமக்கு எவ்வகைக் கஷ்டமுண்டாகும்? நமக்குச் சிறைவாசத்தால் ஏற்படும் துன்பத்தைப் போலவேதான் அவற்றிற்குமுண்டாகும்; ஆதலால், பறவைகளை எக்காரணத்தைக்கொண்டும் கூண்டில் அடைத்து வைப்பது பாவச் செயலேயாம்.

முத்து:—சிலர், மாமிச உணவின் பொருட்டுத்தானே பிராணிகளை வதைக்கின்றார்கள்; அவர்கள் ஆகாரத்தின் பொருட்டுப் பிராணிகளை வதைக்கலா மென்றும், எல்லாப் பொருள்களும் மனிதனுடைய உபயோகத்துக்காகவே கடவுளால் படைக்கப்பட் டிருக்கின்றனவென்றும், மாமிச உணவு உண்பதனாலே தங்களுக்கு உடம்பில் வலிமையுண்டாகிற தென்றும், மாமிசமுண்ணாவிடில் நோயுண்டாகிற தென்றும், உணவின் பொருட்டோ வேறு காரியத்தின் பொருட்டோ அல்லாமல் வீணாகப் பிராணிகளைக் கொல்வதுதான் குற்ற மென்றும், இந்த விதிகள் சாஸ்திரங்களில் ஏற்பட்டிருக்கின்றன வென்றும் கூறுகின்றார்களே; அப்படியிருந்தால் அவர்கள், உணவு முதலியவற்றிற்காகப் பிராணிகளை வதைப்பதால் குற்றமென்ன?

மணி:—ஐயோ! முத்து! இவைகள் மிகவும் கெட்ட கொள்கைகள்; நெஞ்சிரக்க மற்றவர்களுடைய பேச்சுக்கள்; அருவருப்பான புலால்உணவை விரும்புவோர், தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள ஏற்படுத்திக்கொண்ட கற்பனைக் கதைகள்; பிராணிகள், மனிதருடைய உணவுக்காகக்

கடவுளால் படைக்கப்படவில்லை; வேறு காரியங்களுக்காக மனிதர் அவற்றைக் கொல்வதற்கும் படைக்கப்படவில்லை; இவற்றிற்காகப் பிராணிகள் படைக்கப்பட்டனவென்று சட்டம் கூறும் நூல்கள் அறிவுடையவர்களால் ஒப்புக்கொள்ளக் கூடியனவல்ல; நம்மைப்போலவே அவைகளும் சுயேச்சையாக வாழ்வதற்கே படைக்கப்பட்டிருக்கின்றன; அவற்றுட் சில பிராணிகள் மாத்திரம், மனிதர்க்கு விவசாயம், சவாரி முதலியவற்றில் உதவி செய்யப் படைக்கப்பட்டிருக்கின்றன; அவைகள் மனிதனுடைய ஆகாரத்திற்குப் படைக்கப்பட்டிருந்தால் மனிதனும் நரமாமிச பக்ஷணிகளாகிய இராக்ஷஸர்களுக்கும், நரி முதலிய மிருகங்களுக்கும், காக்கை முதலிய பறவைகளுக்கும் ஆகாரமாகப் படைக்கப் பட்டிருக்க வேண்டும்; மனிதன், தன்னை ஆகாரத்திற்காக ஒரு இராக்ஷஸனோ, மிருகமோ, பறவையோ பிடித்துக் கொல்லத் துணிந்தால் அப்போது அவன் எவ்வித வாதனையை அடைவான்? அதே விதமான வாதனைதான், மனிதர் உணவின் பொருட்டு மற்ற பிராணிகளை வதைக்கும் போதும் அவற்றிற் குண்டாகும்; இவற்றை ஆலோசித்தால் எவருமே எக்காரணத்தைக் கொண்டும் ஜீவராசிகளை வதைக்கமாட்டார்கள்; மாமிச உணவு இல்லாதிருப்பதால் மனிதனுக்குக் கெடுதியொன்றும் நேராது; நோயும் உண்டாகாது; மாமிசத்தை உண்பதால் உடம்பிற்கு பலம் ஏற்படுவதுமில்லை; மாமிசத்தைக் காட்டினும் இரத்த புஷ்டியையும், ஆரோக்கியத்தையும் உண்டாக்கத்தக்க எத்தனையோ காய் கனி கிழங்கு வகைகள் மனிதருடைய ஆகாரத்திற்காகப் படைக்கப்பட் டிருக்கின்றன; அவற்றை உண்பதால் நல்ல தேகபலம் பெற்று நீண்ட ஆயுளுடன் நோயற்ற வாழ்வைப் பெறலாம்; மாமிச உணவால் உடம்பிற்குக் கேடு விளைவதோடு பாவமும் சேரும்; இவ்விவரங்களைச் சில மேல் நாட்டு வைத்திய நிபுணர்கள், தங்கள் ஆராய்ச்சியால் கண்டு

பிடித்து வெளிப்படுத்தி யிருக்கின்றார்கள்; ஆதலால், பிராணி கள் மனிதருடைய உணவுக்காகப் படைக்கப்பட்டன வென் பது தப்பான அபிப்பிராயம்.

முத்து:—பிராணிகள் மனிதருக்கு வேலைகள் செய்வதற் காகவே படைக்கப்பட் டிருக்கின்றனவென்று சாஸ்திரங்கள் கூறுவதாகச் சிலர் சொல்லுகின்றார்களே; அப்படியிருக்கும் போது அவற்றை வேலைக்கு உபயோகப்படுத்திக் கஷ்டப் படுத்துவதால் குற்றமென்ன இருக்கின்றது?

மணி:—எல்லாப் பிராணிகளும் மனிதனுக்கு வேலை செய்வதற்காகப் படைக்கப்படவில்லை; ஆடு, மாடு, குதிரை, நாய், ஒட்டகம், யானை முதலிய சில பிராணிகளே மனிதர்க்கு விவசாயம் முதலிய சில தொழில்களில் உதவி செய்யும் படி படைக்கப்பட்டிருக்கின்றன; வேலை செய்ய ஏற்பட்ட அவற்றைத் துன்புறுத்தவேண்டிய அவசியம் என்ன இருக் கின்றது? அவற்றிற்கு நல்ல ஆகாரம் கொடுத்து, அவற்றை அன்புடன் வளர்த்து, அவற்றால் கஷ்டமின்றிச் செய்யத்தக்க வேலைகளை அவற்றினிடம் வாங்கவேண்டுமே தவிர, அவற் றைப் பட்டினிபோட்டுப் பலஹீனப்படச் செய்து, அவற்றால் செய்யமுடியாத வேலையைச் செய்யும்படி அடித்துத் துன்பப் படுத்தலாகாது; அவைகள் பாரத்தை இழுக்க முடியாமலும், ஒரு வேலையைச்செய்ய முடியாமலும் தயங்கும்போது அவற் றை மேலும் மேலும் அடித்துத் துன்புறுத்தலாகாது; அவற் றைச் சௌகரியமாகவைத்து அவற்றால் செய்யமுடிந்த வேலை களை மட்டும் அவற்றினிடம் வாங்குவதே கிரமம்; சில வண்டிக் காரர்களும், உழவர்களும் பாரத்தை இழுக்கமுடியாத குதிரை களையும், மாடுகளையும் ஓயாமல் அடித்தும், வாலை முறுக்கி ஒடித் தும், கண்களில் மிளகாயைத் தடவியும் துன்பப்படுத்துவார்

கள்; இச்செயல்கள் ஜீவகாருண்யமற்ற பாவச் செயல்களாம்; நாம் ஒருவரிடத்தில் வேலைக்கமர்ந்து, வேலைசெய்ய வலிமையின்றி இளைக்கும்போது அவர்கள் நம்மை அடித்து வருத்தினல் நம்முடைய மனம் எவ்வாறு பதைக்கும்? இதைப்போலவே பிராணிகளைத் துன்புறுத்துங் காலத்தில் அவற்றின் மனமும் பதைக்குமென்பதை ஒவ்வொருவரும் ஆலோசித்துப் பார்க்கவேண்டும்.



முத்து:—தேவதைகள், பிராணி பலிகளை விரும்புவதாகவும், அவற்றைப் பலியிடுவோருக்குப் பெரிய அனுகூலங்களைச் செய்வதாகவும் சிலர் சொல்லி, மாரியம்மனுக்கும், பத்திர காளிக்கும், முனியப்பசுவாமிக்கும், மாடனுக்கும், காட்டேறிக்கும் பல நூற்றுக்கணக்கான ஆடுகளையும், மாடுகளையும், கோழிகளையும், பன்றி முதலிய வேறு சில பிராணிகளையும் வதைத்துப் பலியிடுகின்றார்களே; தேவதைகளே இவ்வாறு

கொலையை ஏற்றுக்கொள்ளும்போது அவற்றைப் பலி யிடுவதால் என்ன தோஷம்?

மணி:—ஐயோ! மாமிச விருப்பமுடைய சில பூசாரிகளும், சுயநலங்கருதிய சிலரும் கூடி நெடுங்காலத்துக்கு முந்தியே செய்துவைத்த மோசச்செய்கை இது; தாங்கள் மாமிசத்தை எப்பொழுதும் தட்டில்லாமல் உண்ண விரும்பி, இவ்வாறு தேவதைகள் பிராணி வதையை விரும்புவதாகவும், அவ்விருப்பத்தை நிறைவேற்றி வைத்தவர்க்கு வரங்கொடுப்பதாகவும் கட்டுக்கதை கட்டி, அக் கதையில் பேதை ஜனங்களுக்கு நம்பிக்கையை உண்டாக்கி விட்டார்கள்; அந்த நம்பிக்கையாலேயே பாமர மனிதர்களால் தேவதைகளுக்குப் பிராணி பலி இடப்பட்டு வருகின்றது. இது மிகவும் அறியாமையாகும்; தேவதைகள் உயிர்ப் பலியை விரும்புவதுமில்லை, கேட்பதுமில்லை, ஏற்றுக் கொள்வதுமில்லை; எல்லோருக்கும் தந்தையாகிய கடவுள் ஜீவகோடிகளைப் படைத்துக் கருணையோடு காப்பாற்றி வருகிறார்; அப்படியிருக்க அவருடைய கிருபைச் செயலுக்கு விரோதமாக இவ்வாறு உயிர்க் கொலையை விரும்பும் தேவதைகள் ஏற்படுமா? அப்படி ஏற்பட்டிருந்தால் அவை தெய்வங்களாகமாட்டா; ஆதலின் தெய்வங்களின் பெயரைச் சொல்லிச் சிலர் பிராணிகளை வதைக்கும் கொடுஞ் செயலை அறவே ஒழிக்க வேண்டும்; இக்காலத்தில் பலவிடங்களில் ஜீவகாருண்ய சங்கங்கள் ஏற்பட்டு உயிர்க் கொலையைப் பெரும்பாலும் நிறுத்தி வருகின்றன; எல்லோரும் அந்தச் சங்கங்களுக்கு உதவி செய்ய வேண்டும்; ஜீவகாருண்ய முடையவர்களா யிருக்க வேண்டும்; இந்த ஜீவகாருண்யமானது எப்பொழுதும் மனிதர்க்கு நன்மையையே உண்டாக்கும்.

---

13. டாக்டர்-அன்னிபெஸன்ட் அம்மையார்.

இந்த அன்னிபெஸன்ட் அம்மையார், ஆண் மக்களைப் போலவே பெண் மக்களும் அறிவிலும், கல்வியிலும், மற்ற சாமர்த்தியமான செயல்களிலும், தேசத் தொண்டிலும் பொது நன்மையிலும் சிறந்தவராவர் என்பதை உலகத்தில் மெய்ப்பித்து எல்லோருக்கும் காட்ட அவதரித்தவர்; பலரும் போற்றத்தகுந்த ஞானமும், பெருமையும், புகழும் படைத்த வர்; இக்காலத்தில் உலக நன்மைக்காகப் பாடு பட்டுவரும் பேரறிவாளராகிய பெரியாருள் இவரு மொருவர்.



இந்த அம்மையார் 1847-ம் வருடம் அக்டோபர்மாதம் 7-ம் தேதியில் லண்டன்மா நகரில் பிறந்தவர்; இவருடைய

தந்தையார் தத்துவ சாஸ்திரத்தில் சிறந்தவர்; இலக்கியப் பயிற்சியிலும் தேர்ந்தவர்; வைத்தியத்திலும் நிபுணர்; தாயார் கல்வியறிவில்லாதவர்; எனினும் நற்குணங்கள் நிறைந்தவர். இவர்கள் குடும்பம் பொருளாதாரத்தில் குறைந்தது. ஆதலால், பெஸன்ட் அம்மையாருக்குப் பெரிய பள்ளிக்கூடங்களிற் சேர்ந்து கல்வி கற்கும் சௌகரியம் ஏற்படவில்லை. இவருக்கு முதலில், 'மிஸ். மேரியட்' என்பவர் ஆங்கிலம், பிரான்சு, ஜர்மனி ஆகிய மொழிகளைக் கற்றுக்கொடுத்தார்; அதன்மேல் பெஸன்ட் அம்மையார், மிஸ். மேரியட் அவர்களோடு பிரான்சு, ஜர்மனி ஆகிய நாடுகளுக்குச் சென்று ஆங்காங்குள்ள நகாக்காட்சிகளைப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்து, இரண்டு வருடங்கள்வரை தம்முடைய அன்னையாரோடு, லண்டன்மா நகரத்திலேயே வாசஞ்செய்துகொண் டிருந்தார்.

பிறகு, 1866-ம் வருடத்தில், ஒரு மிஷனரியைக் கலியாணம் செய்துகொண்டார். இவருக்கு 1869-ம் வருடத்தில் ஒரு புத்திரனும், அதற்கு அடுத்த வருடத்தில் ஒரு புத்திரியும் பிறந்தார்கள். ஆயினும், பெஸன்ட் அம்மையாருக்குக் குடும்ப வாழ்க்கையில் விருப்பின்றி வெறுப்பே உண்டாகிக் கொண்டு வந்தது. மதவிஷயத்தில் இவருக்கும், இவருடைய கணவருக்கும் மாறுபாடான எண்ணங்கள் தோன்றிக்கொண்டிருந்தன. அக்காலத்தில் இங்கிலாந்தில் விசேஷக் கல்விகற்ற வகுப்பாரில், "கடவுள் இல்லை; உலகம் கடவுள் படைப்பன்று" என்னும் நாஸ்திகமதம் எங்கும் பரவி வந்தது. பெஸன்ட் அம்மையாருக்கு இந்த மதம் சிறந்ததாகத் தோன்றிற்று; அதனால் இவர் நாஸ்திக மதத்தைக் கைக்கொண்டு, கிரிஸ்துமதக் கொள்கைகளை வெறுத்துப் பேசிவந்தார்; இவருடைய கணவர், கிரிஸ்து மதத்தில் மிக்க பற்றுள்ளவரும், கிரிஸ்துமதப் பிரசாரகருமாதலால், பெஸன்ட் அம்மையாரின்

அபிப்பிராயங்களைப்பற்றி வருத்தமுற்று, இவரைக் கோபித்தார்; இந்த மனஸ்தாபம் இருவருக்குள்ளும் வளர்ந்துவந்தது; முடிவில் இந்த விரோதத்தினாலேயே 1874-ம் வருடத்தில் இருவரும் விவாகரத்து செய்துகொண்டார்கள். அதன்மேல், பெஸன்ட் அம்மையார் தம் குழந்தைகளுடனும், தாயாருடனும், 'ஸிஸ்பீ' என்னும் ஊரில் வாசம் செய்துகொண்டிருந்தார்.

அப்படியிருக்கும்போது இவருக்குண்டாகியிருந்த நாஸ்திகமதப்பற்று அதிகரித்தது; அதனால், இவர் அம்மதத்தையே பற்பல விடங்களில் போதனை செய்து சங்கங்களின் மூலம் அதனைப் பரப்புதற்குப் பிரசாரமும் செய்து வந்தார். அப்போது, 'பிராட்லா' என்னும் ஆங்கில அறிஞர் ஒருவர், இவருக்குப் பலவகைகளிலும் உதவிபுரிந்து வந்தார்.

பெஸன்ட் அம்மையார், இவ்வாறு நாஸ்திகமதப் பிரசாரம் செய்து வந்ததோடு, சமூக சீர்திருத்தங்களிலும் முயற்சி செய்து வந்தார். 1877-ம் வருடத்தில் இவரும் பிராட்லாவும் கருப்பத் தடையைப்பற்றி ஒரு வியாசம் எழுதினார்கள்; அதனால் இவ்விருவரும் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்; பிறகு விசாரணையில் சிறை செய்யத்தக்க குற்றம் இவர்கள்மீது ஏற்படாததால் விடுதலையடைந்தனர். ஆயினும், "இந்தக் கொள்கையுடைய பெஸன்ட் அம்மையார் குழந்தைகளை வளர்க்கத் தகுதியுடையவராக மாட்டார்" என்று கோர்ட்டார் தீர்மானித்து இவரிடம் வளர்ந்துகொண்டிருந்த இவர் குழந்தைகளை இவரைவிட்டு நீக்கி, இவருடைய கணவரிடம் சேர்த்தார்கள்.

இன்னும், பெஸன்ட் அம்மையாருக்கு எப்பொழுதும் அரசியல் கிளர்ச்சிகளில் விருப்பம் அதிகமாகவுண்டு; அதனால்

இவர், பின்னர் அயர்லாந்து, பால்கன், எகிப்து முதலிய நாடு களின் சுதந்தரக் கிளர்ச்சிகளில் சேர்ந்து, அதைப்பற்றிப் பிரசங்கங்கள் செய்தும், வியாசங்கள் எழுதியும் வந்தார். அதன்மேல், 1875-ம் வருடத்தில், 'கார்ல் மார்க்கன்' என்னும் அறிவுடையார் ஆராய்ந்து வெளியிட்ட பொதுவுடைமையை ஆதரித்தார்; ஆங்கிலேயர் வாழ்க்கையில் பல ஒழுங்கீனங்கள் நிறைந்திருக்கின்றன வென்றும், அவர்களுடைய பொருளாதார நிலையே இப்பேர்ப்பட்ட அக்கிரமங்கள் தோன்றுவதற்குக் காரணமாயிருக்கிறதென்றும் இவற்றை ஆராய்ந்தறிந்து, இந்தக்குறைகளை நீக்க முயன்றார்; ஆங்கிலப் புலவர்களிற் சிறந்த, 'பெர்னார்ட்ஷா' முதலிய புத்திமான்களால் ஏற்படுத்தப்பட்ட, 'பேபியன் ஸொஸைட்டி' என்னும் சபையில் சேர்ந்து அச்சபையின் ஆதரவில் இங்கிலாந்து தேச முழுவதிலும் பொதுவுடைமைக் கொள்கைகளைப் பிரசங்கித்துப் பிரசாரம் செய்தார்.

பிறகு, 1889-ம் ஆண்டில், பெஸன்ட் அம்மையாரின் மனப்போக்கு மாறுதல் அடைந்தது: அப்போது பிரமஞான சமாஜத்தை ஏற்படுத்திய, 'மேடம் பிளாவெட்ஸ்கி' என்ற அம்மையாரை ஒரு சமயம் கண்டு அந்த சமாஜத்தின் கொள்கைகளை அவரிடம் கேட்டுணர்ந்து, ஆத்மதத்துவத்தை உணர்தற்கு அக்கொள்கைகள் அனுகூலமா யிருந்தபடியால் அவற்றை விரும்பி, அவருக்கு சிஷ்யை ஆகி அந்த சமாஜத்தில் சேர்ந்துவிட்டார். அவ்வாறு சேர்ந்தபின், இவர், "ஆத்ம தத்துவத்தை ஆராய்ந்துணர வேண்டும்; பொது உடைமைக் கொள்கைப் பிரசாரம் அதற்குத் தடையா யிருக்கின்றது; பொது உடைமைப் பிரசாரம் நிலையற்ற பொருளாதாரத்தைப் பற்றியது; பிரமஞான சமாஜத்தின் கொள்கைகளை ஆராய்வதால் ஆத்மஞானம் உண்டாகும்; ஆதலால், பொது உடை

மைப் பிரசாரத்தை விட்டுப் பிரமஞான சமாஜக் கொள்கை களை ஆராய்ச்சி செய்யவேண்டும்" என்று தீர்மானித்து, அது முதல் அந்த ஆராய்ச்சியிற் புகுந்து பிரமஞான சமாஜ விருத்திக்கு ஏதுவான வேலைகளைச் செய்து வரத் தலைப்பட்டார். இவ்வாறு பெஸன்ட் அம்மையார், பிரமஞான சங்கத்தில் சேர்ந்துவிடவே, இவரோடு நாஸ்திக மதப்பிரசாரம் செய்து வந்த, 'பிராட்லா' என்பவருக்கு இவர்மீது மிகுந்த கோபம் உண்டாயிற்று; அதனால் அவருக்குத் துன்பமும் அதிகரித்தது. பெஸன்ட் அம்மையாருக்கு மன சாந்தி உண்டாயிற்று.

அதன்மேல், பெஸன்ட் அம்மையார் இந்தியாவுக்கு வந்து சென்னையைச்சார்ந்த அடையாற்றில் தமக்கு வாசஸ்தானத்தை அமைத்துக்கொண்டு அதில் தங்கினார்; பிரமஞான சமாஜத்தை அங்கு ஏற்படுத்தி அதற்குத் தலைமை வகித்தார்; பிரமஞான சங்கக் கொள்கைகளை எங்கும் பிரசாரம் செய்து பரப்பினார்; வடமொழியில் உள்ள வேதங்கள், உப நிஷத்துக்கள், புராணங்கள் முதலியவற்றைப் படித்து அவற்றின் பொருள்களை மேல் நாட்டுத் தத்துவங்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தார்; பண்டைக்கால இந்தியரின் நாகரீகத்தை நூல்களின்மூலம் படித்துணர்ந்து, அதன்மீது மிகுந்த மதிப்புவைத்தார்; மிகவும் உயர்ந்த ஞானநூல்களை எழுதி வைத்த பெரியாரின் மரபில்தோன்றிய இந்தியர், இக்காலத்தில் மிகத் தாழ்ந்த நிலையிலிருப்பதைப்பற்றி மனம் வருந்தினார்; இந்தியர், தம்முடைய பழைய பெருமைகளை உணராமல் தாழ்ந்த வாழ்க்கையை நடத்தி வருவது பற்றிக் கவலைகொண்டார்; நம் நாட்டு வாலிபர்கள், தங்களுடைய பண்டைக்கால நல்லொழுக்கங்களைக் கைவிட்டுப் புதிய நாகரிக மயக்கத்தில் மூழ்கிக் கிடப்பதைப் பற்றிச் சிந்தனை செய்தார்; அவர்கள்

இந்நிலைமையை அடைந்ததற்குக் காரணம், இக்காலத்தில் ஏற்பட்டிருக்கும் கல்விமுறைதானென் றுணர்ந்தார். இவ்வாறு தெரிந்துகொண்டபின், இளைஞர் பண்டைய நல்லொழுக்கங்களை மேற்கொண்டு முன்னேற்றமடையும் பொருட்டு ஒரு தேசியக் கல்வித்திட்டம் தயார் செய்து, அவ்வாலிபருக்குத் தங்கள் நாட்டுச் சரித்திரங்களின்மீதும், இலக்கியங்களிலும், பண்டைக் கொள்கைகளிலும் விருப்பமும், மதிப்பும் உண்டாகும்படி செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார். அதன் பொருட்டுக் காசியில், "சென்ட்ரல் ஹிந்து காலேஜ்" என்ற பெயருள்ள ஒரு கலா சாலையை ஏற்படுத்தினர். இந்தக் கலாசாலை இப்போது இந்து சர்வ கலாசாலையாக மாறி இந்திய தேசியக் கல்வி விருத்தியில் சிறப்புற்று விளங்கி வருகின்றது.

பின்னர் பெஸன்ட் அம்மையார், "எவருக்கும் சுதந்தரம் வேண்டும்; சுதந்தரம் இல்லாதவர்களுக்குச் சௌக்கியமில்லை" என்பதை உணர்ந்து இந்திய மக்களின் சுதந்தரக் கோரிக்கைகளில் சிரத்தை கொண்டார்; 1914-ம் வருடம் முதல் பெஸன்ட் அம்மையாருக்கு இந்திய மக்களின் நன்மையில் நாட்டமுண்டாயிற்று; அந்த எண்ணத்தையும், இந்தியர்க்கு நன்மை யுண்டாகத்தக்க மார்க்கங்களையும் வெளிப்படுத்த, "காமன் வெல்த்" என்ற வாரப் பத்திரிகையையும், "நியூ இந்தியா" என்ற தினப் பத்திரிகையையும் வெளிப்படுத்தினர்; "ஹோம் ரூல்" என்னும் கொள்கையை எங்கும் போதித்தார்; மேலும் இந்திய மக்களின் நன்மைக்காகத் தைரியத்துடன் பிரசாரம் செய்து உதக மண்டலத்தில் சிறைப்பட்டார்; 1917-ம் வருடம் ஆகஸ்டு மாசம் விடுதலையடைந்தார். அவ்வருடம் டிசம்பர் மாசம் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மகா நாட்டுக் கூட்டத்திற்குத் தலைமை

வகித்தார். பிறகு, பன்முறைகள் இங்கிலாந்துக்குச் சென்று இந்தியரின் நன்மைக்காகப் பல முயற்சிகளைச் செய்தார்; பிரசங்கங்கள் செய்தார்; இப்பொழுதும் இந்திய தேசத்துக்காகவும், பிரம ஞான சமாஜத்திற்காகவும் மிகுந்த பாடுபட்டு வருகின்றார்; எங்கும் சுற்றுப்பிரயாணம் செய்து பிரசாரம் புரிந்து வருகின்றார். அடையாற்றில் தேசீயக் கல்வித்திட்ட முறையை அனுசரித்து ஒரு பள்ளிக்கூடத்தை நடத்தி வருகின்றார்.

பெஸன்ட் அம்மையார் இப்பொழுது மிகவும் கிழப்பருவத்தை அடைந்திருக்கின்றார்; இக்காலத்திலும் இவர் பொது நன்மைக்கு உழைத்து வருகின்றார். இவர் எப்பொழுதுமே தாம் நினைத்த காரியங்களை முடிப்பதில் மிகுந்த ஊக்கமுடையவர்; எவ்வளவு எதிர்ப்பு நேர்ந்தாலும் அதைச் சட்டை பண்ணமாட்டார்; காரியங்களை முடிப்பதில் ஏற்படும் துன்பங்களுக்கு அஞ்சமாட்டார்; எத்தனையோ அரும்பெருங் காரியங்களையெல்லாம் செய்து முடித்திருக்கின்றார்; அவற்றிற்காக எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களை அடைந்திருக்கின்றார்; இவருக்கு இப்பொழுது வயது எண்பதுக்குமேல் ஆகின்றது; இந்த விருத்தாப்பிய பருவத்திலும் இவர் உலக நன்மைக்குக் காட்டிவரும் உற்சாகத்திலும், ஊக்கத்திலும் சிறிதும் குறையவில்லை.


இவர் கொஞ்சகாலத்திற்குமுன் அமெரிக்கா முழுவதிலும் சுற்றுப்பிரயாணம் செய்து பல இடங்களில் பிரமஞான சங்கங்களை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்தார்; ஆங்காங்கே பல பிரசங்கங்களும் செய்தார்; இவருக்கு மிகுந்த புலமைத்திறமுண்டு; பிறர் மனதைக் கவரும் சொல்வன்மையுண்டு; மேல்நாட்டு மனோதத்துவ சாஸ்திரங்களில் மிகுந்த தேர்ச்சியுண்டு;

உலக சாஸ்திரத்திலும், தேசசரித்திரங்களிலும் மிக்க பாண்டித்தியமுண்டு; ஆங்கிலம், பிரன்சு முதலிய மொழிகளில் உள்ள பலநூல்களையும் இவர் நன்ருக ஆராய்ச்சி செய்திருக்கிருர்; வடமொழியும் கற்றிருக்கிருர்; பிரம ஞானத்தைப் பற்றியும், இந்தியர் நன்மையைப்பற்றியும் அநேகம் நூல்களை எழுதி வெளியிட்டிருக்கின்ருர்; இன்னும் எழுதிக்கொண்டுமிருக்கிருர்.

பெஸன்ட் அம்மையார் மனதில் சிறிதும் களங்கமில்லாதவர்; இடம்பமில்லாத வாழ்க்கையுடையவர்; ஜீவகாருண்யம் உள்ளவர்; உபகாரகுணமுடையவர்; இவர் ஏழை மாணவர் பலருக்கு உதவிபுரிந்து வருகின்ருர். இவருடைய புத்திக் கூர்மையும், விடாமுயற்சியும், பொதுநலத் தொண்டும் உலகத்தார் எல்லோரும் கொண்டாடத் தக்கனவாம்.

14. விரிந்து சுருங்கும் விநோத நட்சத்திரமீன்

சமுத்திரத்தில் உள்ள ஜந்துக்களில் விநோதமான பல ஜந்துக்கள் இருக்கின்றன; அவற்றுள், "நட்சத்திர மீன்" என்னும் ஒருவகை மீன் உண்டு; இது மற்ற விநோத ஜந்துக்களைக் காட்டினும் மிக்க அதிசயக் காட்சி யுடையது; விரிந்து சுருங்கும் இயற்கையுள்ளது; நட்சத்திரம் போன்ற பிரகாசமுள்ளது. இக் காரணத்தாலேயே இதற்கு, "நட்சத்திரமீன்" என்னும் பெயர் ஏற்பட்டிருக்கிறது.



இந்த அற்புதமீன் உடம்பை விரித்துக்கொண்டிருக்கும் போது பெண்மக்கள் அணியும் இரத்தின சடைபில்லை போன்று வட்ட வடிவமானதாகத்தோன்றும்; இதன் உடம்பின் அவயவங்களெல்லாம் இரத்தின சடை பில்லையில் பல வகை இரத்தினங்களைப்பதித்துச் செய்யப்பட்ட சித்திரவேலைகளைப்போல நடுவில் விசித்திரமான அமைப்புடன் விளங்கும்;

சுற்றிலும் பல வளைவுகளாகச் சுருண்டு சுருண்டு நீண்டிருக்கும் அங்கங்கள் மலர்க் கொடிகளைப்போன்று மிக்க அற்புதமாயிருக்கும்; மத்தியிலிருக்கும் இதன் வாயும், தலையும் இரத்தின சடைபில்லையின் நடுவில் பதிக்கப்பட்டிருக்கும் நடுநாயக இரத்தினங்களைப் போன்று பிரகாசிக்கும்.

இவ்வகையான அற்புத அவயவங்களை யுடைய இதன் உடம்பை இது விரிக்கவேண்டிய சமயத்தில் விரித்துக் கொள்ளும், சுருக்கவேண்டிய சமயத்தில் சுருக்கிக் கொள்ளும்; இது, உடம்பை விரிக்கும்போது, அவ் வுடம்பானது இடை யிடையே பல பிளவுகளுள்ள பல துண்டுகளாகப் பிரியும்; சுருங்கும்போது எல்லாம் திரண்டு ஒன்ருகிவிடும்; உடம்பின் சுற்றுப் பக்கங்களில் கொடிகளைப்போல சுருண்டு வளைந்து காணப்படும் அங்கங்களும் விரியும்போது நாலாபக்கங்களிலும் பரவியிருந்து சுருங்கும்போது உடம்போடு சேர்ந்து ஒன்ருகிவிடும். இதன் வாயைச் சுற்றிலும் பிளவுபட்ட பல துவாரங்கள் இருக்கின்றன; அத் துவாரங்களுக்குள் உறிஞ்சு குழாய்க ளிருக்கின்றன.

இந்த மீன் இரையைச் சேகரித்து உண்ணுதற்கு அனுகூலமாயிருக்கும் பொருட்டே இதற்கு இவ்வாறு விரிதலும், சுருங்குதலு முடைய விநோத உடம்பு அமைந்திருக்கின்றது. இது இரை தேடும்போது உடம்பை விரித்துக்கொண்டு திரியும்; அப்போது இதன் உடம்பில் விரிந்திருக்கும் கொடி போன்றபாகங்களுக்கும், துண்டுபட்ட பாகங்களுக்கும் இடையிலுள்ள பாகங்களிலும், வாயைச் சுற்றிலுமுள்ள துவாரங்களிலும் பல சிறு ஜந்துக்கள் போய்ச்சேரும்; அவ்வாறு சேர்ந்தவுடன் இந்த மீன் உடம்பைச் சுருக்கிக்கொள்ளும்; பிளப்புக்களிலும், துவாரங்களிலும் சேர்ந்த ஜந்துக்கள் உள்

ளே அகப்பட்டுக் கொள்ளும்; அவ்வாறு சிக்கிக்கொண்டவுடன் இந்த மீன் அவற்றை வாயில் சேர்த்துத் தின்றுவிடும்; வாயைச் சுற்றிலுமுள்ள துவாரங்களில் சேர்ந்த ஜந்துக்களை உறிஞ்சு குழாய்களினால் உள்ளேயிழுத்து விழுங்கி விடும்.

இன்னும் இதன் உடம்பு மிகவும் மிருதுவானது; பளபளப்புள்ளது; பலவகை நிறங்களை யுடையது; மிக்க அழகுடையது; ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு நிறம் அமைந்திருக்கும்; ஒருபக்கத்திலிருக்கும் வர்ணம் மற்றொரு பக்கத்திலிராது.

இதனிடத்து இன்னுமொரு விநோதசித்தும் காணப்படுகிறது: அதாவது, இதன் உடம்பை மனிதர் தொட்ட மாத்திரத்தில் அவ்வுடம்பு வெவ்வேறு துண்டுகளாகிச் சிறுசிறு அணுக்களாகப் பிரிந்துவிடும்; அவை மனிதர் கைக்கு அகப்படமாட்டா; கண்ணுக்கும் புலப்படமாட்டா; ஆதலின், இதன் இயற்கை அமைப்பையும், முழு உருவத்தையும், அழகையும், நிறங்களையும் மனிதர் சாமானியமாகப் பார்ப்பது பெரும் பான்மையும் முடியாது; வெகு தந்திரமாகவும், பிரயாசையுடனும்தான் இதைப் பிடித்து இதன் இயற்கை வடிவத்தைப் பார்க்க வேண்டும்.

இவ்வகை மீன்கள் இவ்வாறு மனிதர் கைப்பிடிக்கு அகப்படாதவைகளா யிருந்தாலும் அடிக்கடி செம்படவர்கள் சமுத்திரத்தில் வலைகட்டி மீன்பிடிக்கும்போது அவ்வலையில் ஏராளமாகச் சிக்கிக்கொள்வதுண்டு. ஆயினும் அவ்வாறு அகப்பட்டவுடன் இவற்றின் உடம்பு மேற்கூறியபடி வெகு சீக்கிரத்தில் சிறுசிறு பாகங்களாகப் பிரிந்து வலையின் பல பாகங்களில் சின்னபின்னமாகச் சுற்றிக்கொள்ளும்; அதனால் செம்படவர்கள் அவ்வாறு சிக்கிய இந்த மீன்களை முழு உரு

வத்துடன் எடுப்பது முடியாது; இவைகள் சின்னபின்ன மாக வலையில் சுற்றிக்கொண்டிருப்பதால், அது அவர்களு டைய மீன் வேட்டைக்கு இடையூருயிருக்கும்; ஆதலால் இவற்றைவலையைவிட்டு நீக்கும்பொருட்டு அவர்கள் பலமுறை வலையைத் தண்ணீரில் வீசியெறிவார்கள்; அவ்வாறு எறியும் போது அந்த மீன்கள் தாமே வெளிப்பட்டு ஓடிவிடும்.

இந்த நட்சத்திரமீனை முழு உருவத்துடன் பார்க்கவேண் டுமானுல் இது வலையிலோ, வேறு எதிலோ சிக்கியவுடன் சிறிதும் தாமதிக்காமல் இதை உப்பில்லாத நல்ல தண்ணீரில் போட்டுவிடவேண்டும்; அவ்வாறு போட்டவுடன் இம்மீன் இறந்துவிடும்; அப்போது இதன் முழு உடம்பும் சேர்க்கையா யிருக்கும்; அதன்மேல் இதன் இயற்கை அமைப்புக்களைப் பார் த்துக்கொள்ளலாம். இஃதுயிரோடிருந்தால் மாத்திரமே உடம் பைப்பிரித்து மனிதர் கண்ணுக்குப் புலப்படாமற் செய்யும்; இறந்து விட்டால் அத்தொழில் நடைபெருது; ஆதலால், இதன் உடம்பு அப்போது பார்வைக்குஅகப்படும். இது மனி தர் கையில் அகப்பட்ட அடுத்த நிமிஷத்திலேயே தன் உடம் பைப் பிரித்துக்கொள்ளும் இயற்கையுடையதாதலால் அவ் வாறு செய்யாதபடி முந்தியே நல்ல தண்ணீரை ஆயத்தமாக வைத்திருந்து இஃதகப்பட்ட அப்பொழுதே சிறிதும் தாம திக்காமல் அத்தண்ணீரில் இதனைப் போட்டுவிட வேண்டும்; இந்த உபாயத்தைச் செய்வோர்தாம் இதன் உருவத்தைப் பார்த்தல் முடியும்.

இவ்வகை ஜந்துக்களைப் படைத்து இவற்றின் வாழ்க் கைக்கு அனுகூலமாயிருக்கும்படி அற்புத அவயவங்களையும் இவைகளுக்கு உண்டாக்கிய கடவுளின் மகிமை மனிதரால் அளவிடற்கரியதாம்.

---

15. நீராவி

தண்ணீரானது சூட்டினால் காய்ந்து புகையாக மாறி எழும்புவதே நீராவியாம். இது, பார்வைக்குப் புகைபோன் றிருப்பினும் இதனிடத்தில் பெரிய சக்தி ஏற்பட்டிருக்கிறது. மனிதரால் செய்யமுடியாத பெரிய காரியங்களை யெல்லாம் இது செய்து முடிக்கும்; இக்காலத்தில் கப்பல், புகைவண்டி, வேறுபல யந்திரங்கள் முதலியவைகளெல்லாம் இந்த நீராவியி னாலேயே செல்கின்றன.

முற்காலத்திலிருந்த ஆராய்ச்சிக்காரர்கள் கண்டு பிடித்த கிரமங்களைக்கொண்டு இந்த நீராவி இன்னவிதமாக உண்டா கிறதென்பதைத் தெரிந்துகொள்ளலாம்: பாதிவரை தண்ணீ ருள்ள ஒரு பாத்திரத்தை அடுப்பேற்றி நெருப்பை மூட்டி யெரித்தால் தண்ணீர் காய்ந்து 100-ஸென்டிக்ரேட் டிகிரி, அல்லது 212-பாரன்ஹீட் டிகிரி சூடு உண்டானவுடன் ஆவி யாக மேலே எழும். அந்த ஆவி அத்தண்ணீர் நிறையைக் காட்டினும் மிகுந்த நிறையுடையதாகும். ஒரு சதுர அங்குல அளவு நீரில் இவ்வாறு உண்டாகும் ஆவி, 1,700. சதுர அங் குல அளவான இடமுழுவதிலும் பரவி விடும். இப்பேர்ப் பட்ட நீராவி சஞ்சரிப்பதற்குப் போதிய இடமின்றிக் குறைந்த இடமுள்ள ஒருபாத்திரத்தில் வியாபித்தால் அங்கு மிங்கும் முட்டி வெளியேற ஆரம்பிக்கும்; வெளிப்பட வழி யிருந்தால் வெளியிற் சென்று விடும்; வழியில்லா விட்டால் அவ்விடத்தில், ‘சுறுசுறு’ என்னும் சப்தத்துடன் அங்குமிங் கும் முட்டிக்கொண் டிருக்கும்; அதில் ஏதேனுமொரு பக்கத் தில் சிறு துவாரமிருந்தால் அந்த நீராவி சீறலுடன் அதன்

வழியாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். அந்தப் பாத்தி ரத்தின் வாய் மூடியால் அழுத்த மில்லாமல் மூடப்பட்டிருந் தால் நீராவி அந்த மூடியை அசைத்துத் தள்ளிச் சப்தத் துடன் வெளிவந்துகொண் டிருக்கும்; அப்பாத்திரத்தில் சிறி தும் வழியில்லாதிருந்தால் நீராவி வேகம் அதிகமாகி அப்பாத் திரத்தை உடைத்தோ, புரட்டியோ தள்ளிவிடும்.


மேல் நாட்டு அறிவாளிகளிற் சிலர் இப்பேர்ப்பட்ட நீராவியை உற்பத்திசெய்து கூட்டுவதும், குறைப்பதும், வெளி யில் விடுவதும், உள்ளே அடக்குவதுமாகிய செய்கைகளால் பற்பல தொழில்களைச் செய்யும் உபாயங்களைக் கண்டு பிடித்து உலகமெங்கும் பரவச் செய்திருக்கின்றார்கள்.



இந்த நீராவியைக் கொண்டு பெரிய தொழில்களைச்செய் யலா மென்பதை முதலாவதாகக் கண்டுபிடித்தவர், 'ஜேம்ஸ் வாட்' என்பவரே. இவர் சுமார் 170-வருடங்களுக்கு

முன்னே ஐரோப்பா கண்டத்தில் உள்ள ஸ்காட்லாண்டு தேசத்தின் மேற்றிசையில் இருக்கும், 'கிரீனுக்' என்னும் நகரத்தில் பிறந்தவர்; 1769-ஆம் வருடத்தில் இவர் வாலிபராயிருந்த காலத்தில் இதன் இரகசியத்தைக் கண்டு பிடித்தார். இவர் 12-வயதுடையவரா யிருக்கும்போதே தாம் காணும் ஒவ்வொருபொருளின் தன்மையையும் ஆராய்வது இவருடைய வழக்கமா யிருந்து வந்தது. அப்படி யிருக்கும்போது ஒருநாள் அந்திநேரத்தில் இவருடைய வீட்டில் வெந்நீர் அடுப்பில் தண்ணீர் நிரப்பப்பட்ட பாத்திரமொன்று காய்ந்து கொண்டிருந்தது. தண்ணீர் நன்றாய்க் காய்ந்து கொதிக்கும்போது அதிலிருந்து நீராவி கிளம்பி அப்பாத்திரத்திலிருந்த ஒருசிறு துவாரத்தின் வழியாகச் சப்தத்துடன் வெளிவந்துகொண்டிருந்தது. 'ஜேம்ஸ்வாட்' அதைப் பார்த்து ஆச்சரியத்துடன் ஆலோசித்துக்கொண் டிருந்தார். அவருடைய செய்கையைப் பார்த்து அவரின் அன்னையார் சிரித்தார். 'ஜேம்ஸ் வாட்' அதைச் சட்டை பண்ணுதவராய் நீராவியின் சக்தியை ஆராயத் தொடங்கி ஒரு சிறுதட்டினுல் அப்பாத்திரத்திலிருந்து நீராவி வெளிப்பட்ட துவாரத்தை மூடினுர். அந்த நீராவி அவ்வாறு மூடப்பட்ட தட்டை முட்டி அசைத்துத் தள்ளிற்று. தட்டு விலகும்போதெல்லாம் ஆவி, 'கப்! கப்!!' என்னும் ஒலியுடன் வெளியாகிக்கொண்டுமிருந்தது. அதனுல், 'ஜேம்ஸ் வாட்' என்பவர், 'நீராவிக்குப் பெரிய சக்தியிருக்கிறது' என்றும், 'அதைக்கொண்டு பெரிய வேலைகளைச் செய்தல் முடியும்' என்றும், 'காற்றின் சகாயமில்லாமலே கப்பல்களை ஓட்டலாம்' என்றும், 'வண்டித் தொடர்களைக் குதிரை மாடு முதலியவற்றின் உதவியில்லாமலே எங்கும் செலுத்தலாம்' என்றும் தீர்மானித்துக் கொண்டார்.

பின் இந்த, 'ஜேம்ஸ் வாட்' சிலமாதங்கள்வரை ஆராய்ச்சி செய்து நீராவியின் உதவியால் தொழில் செய்யக்கூடிய ஒரு நீராவி யந்திரத்தைச் செய்து முடித்தார். அதைப் பார்த்துப் பலரும் இவரைக் கொண்டாடினர்கள்.




பிறகு இந்த யந்திரத்தால் கப்பல் ஓட்டும் தொழில் முதலாவதாகச் சில புத்திமான்களால் கண்டு பிடிக்கப் பட்டது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் நீராவி யந்திரத்தால் கப்பல்கள் ஓடத்தொடங்கின. பின்னர் நாற்பது வருடங்களுக்குமேல் நீராவி யந்திரத்தால் இருப்புப் பாதையில் வண்டித் தொடர்களைச் செலுத்தும் தொழில் கண்டுபிடிக்கப்பட்டது. 'ஜார்ஜ் ஸ்டீவன்ஸன்' என்னும் புத்திமானே முதலில் இதைக் கண்டுபிடித்தவர். இவர் இங்கிலாந்தில், 'டைன் என்னும் நதிக்கரையில் உள்ள, 'நியூகாஸில்' என்னும் நகரத்

துக்கருகில் இருக்கும், 'ஓய்லம்' என்னும் ஓர் சிற்றூரில் 1781-ஆம்வரு ஜூன்மீ 9உ பிறந்தவர். இவர் மிகவும் ஏழை. ஆதலால் இளமையில் கல்வி கற்காமலே தந்தை வேலைக்குச் சென்றபோது அவருக்குச் சாப்பாடு எடுத்துச் செல்லுதல், வேற்றூரில் சென்று சம்பளத்திற்கு மாடு மேய்த்தல் முதலிய வேலைகளைச் செய்து வந்தார். அக்காலத்திலேயே மண்ணினால் புகைவண்டி முதலியவற்றைச் செய்து விளையாடிக் கொண்டு வந்தார்.

அதன் மேல் இவர், 'பிளாக் காலர்டன்' என்னும் ஊரில் நிலக்கரிச் சுரங்கத்தில் அமைக்கப் பெற்றிருந்த, 'ஜின்' என்னும் பெயருள்ள யந்திரத்தை இயக்கும் குதிரையை ஓட்டும் வேலையில் சேர்ந்தார். பிறகு 14-வது வயதில், 'ட்யூலிபான்' என்ற ஊரில் யந்திர சாலையில் வேலையாயிருந்த தம் தந்தைக்கு உதவி வேலைக்காரராய் அமர்ந்தார். 18-வது வயதில் யந்திர நூல்களைப் படிக்க விரும்பிக் கல்வி கற்கத் தொடங்கினார்; 19-வது வயதில் எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டு நீராவி யந்திரத்தின் முடிவை நன்றாக ஆராய்ந்து தம்மால் வளர்க்கப்பட்ட பறவைகளால் தமது யந்திரத்தை இயக்குவித்து விளையாடி வந்தார். பின்னர் 1801-ஆம் ஆண்டில், 'காலர்டன்' என்ற ஊரிலிருந்த நிலக்கரிச் சுரங்கத்தில் யந்திரம் ஓட்டும் வேலையில் இவர் சேர்ந்தார்; 1802-ஆம் ஆண்டில், 'ஹெண்டர்ஸன்' என்னும் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு, 'க்வே' என்னும் ஊரில் குடியேறி எப்போதும் சுற்றிக்கொண்டிருக்கும் ஒரு யந்திரத்தைச் செய்ய முயன்றார்; நீராவி யந்திரத்தால் தொட்டிலை ஆட்டுதல் முதலிய விநோதமான வேலைகளையும் செய்து வந்தார்; இன்னும் சில அற்புத வேலைகளும் செய்தார்.

பிறகு அங்கிருந்த யந்திரத் தொழிலாளருக்குத் தலைவரானார். அக்காலத்தில் சிலர் இருப்புப் பாதைகளை அமைத்து அவற்றின்மேல் வண்டிகளை ஓட்டும் தொழிலைச் செய்யத் தொடங்கினார்கள். முதல் முதல் நீராவியைக் கண்டு பிடித்த, 'ஜேம்ஸ் வாட்' என்பவரும் நீராவியினால் தாமே புகைவண்டியைச் செய்து நடத்த எண்ணி யிருந்தார்; இன்னும் பலர் வண்டியைக் குதிரை முதலியவற்றின் சகாயமின்றி நடத்துதற்கு வெவ்வேறு பல யந்திரங்களைச்செய்து பரிசோதித்துப்



பார்த்தார்கள். எவரும் வண்டியை இயக்கும் தொழிலைச் செய்து முடிக்கவில்லை. அதன்மேல், 'லார்டு ஓரவன் வொர்த்' என்னும் கனவான் ஜார்ஜ் ஸ்டீவன்ஸனுடைய யந்திர ஆராய்ச்சி நுட்பத்தைக் கண்டு வியப்புற்றுப் புகைவண்டி யந்திரமொன்றைச் செய்யும்படி இவரிடம் சொன்னார். இந்த ஜார்ஜ் ஸ்டீவன்ஸன் அவர் சொற்படியே புகைவண்டி யந்திரத்தோடு கூடிய, 'ராக்கர்ட்' என்ற ஒரு வண்டியைச் செய்து முடித்தார். 1841-ஆம் ஆண்டு ஜூலைமீ 25உ அவ்வண்டியானது இவரால் ஓர் இருப்புப் பாதையில் ஓட்டிப்

பரீக்ஷிக்கப்பட்டது. அவ் வண்டி 30 டன் பாரத்தை இழுத்துக்கொண்டு ஒரு மணி நேரத்தில் நாலுமைல்தூரம் செல்லும் சக்தியைப் பெற்றிருந்தது. பிறகு இவர் அந்த வண்டி மிகுந்த இரைச்சலில்லாமல் நீராவியை வெளியிற் செலுத்தவும், எளிதாகச் செல்லவும் தக்க உபாயங்களைத் தெரிந்து நூதன அமைப்புக்களோடு வேறொரு வண்டியைச் செய்து தம் பேருக்கு ரிஜிஸ்டர் செய்து கொண்டார்.

அதன்மேல், 'ஸடாக்டன்' என்னும் ஊரிலிருந்து, 'டார்னிங்டன்' என்னும் ஊருக்கு, இவர் நூதனமாகச் செய்த புகை வண்டியில் நிலக்கரி ஏற்றிக்கொண்டு வந்து சேர்க்கும் பொருட்டுக் கரிக்கனிச் சங்கத்தார் இருப்புப்பாதை ஒன்றை அமைத்தார்கள். ஜார்ஜ் ஸ்டீவன்ஸன், தம்மால் செய்யப்பட்ட அவ் வண்டியை அந்த இருப்புப் பாதையில் செலுத்துதற்குப் பார்லிமெண்டாரிடம் உத்தரவு பெற்று அவ்வாறே அதில் நடத்தி எல்லோருக்கும் காட்டினர்.

அதைக் கண்டு எல்லோரும் அதிசயித்தனர். 'பீஸ்' என்பவர் ஜார்ஜ் ஸ்டீவன்ஸனுடைய யந்திர வித்தையின் திறமையை மெச்சி அந்த இருப்புப் பாதைக்கு இவரையே 300-பவுன் சம்பளத்தில் தலைவராக நியமித்தார். பின்னர் ஜார்ஜ் ஸ்டீவன்ஸன் 1825-ஆம் ஆண்டில் அந்தப் புகைவண்டி யந்திரம் பல வண்டிகளை இழுத்துக்கொண்டு 1-மணிக்கு 4மைல் முதல் 12-மைல் வரை செல்லும் வேகமுள்ளதாக ஓடும்படி செய்தனர்.

இவருடைய சாமர்த்தியத்தை அன்னிய நாட்டார் பலரும் கேள்விப்பட்டுத் தங்கள் தேசங்களுக்கு இவரை அழைத்துச் சென்று இவருடைய உதவியால் இருப்புப் பாதைகளை

அமைத்துப் புகைவண்டிகள் ஓடும்படி செய்து கொண்டார்கள். இக்காலத்தில் அந்தப் புகைவண்டித் தொடர்கள் எங்கும் பரவியிருக்கின்றன; மேலும் மேலும் பரவியும் வருகின்றன. இன்னும் இந்த நீராவியால் எத்தனையோ அற்புதமான வேலைகளை யெல்லாம் செய்யலாம்.

---

16. நெல்சன்

'நெல்சன்' என்பவர் ஆங்கிலக் கப்பற்படைத் தலைவர்களில் சிறந்தவர்; மிகவும் கீர்த்தி பெற்றவர்; மகா வீரர். இவர், "ஹொராஷியோ, வைகவுன்ட் நெல்சன்" என்னும் கௌரவப் பட்டத்தோடு கூடிய பெயரையு முடையவராவர்.

இந்த ஆங்கிலேய மகாவீரர் இங்கிலாந்தில், 'நார்போக்'கைச் சார்ந்த, 'பர்ன்ஹாம் தார்பி' என்னும் ஊரில், 1758-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ஆம் தேதி பிறந்தார். இவருடைய தகப்பனார் அந்த ஊருக்கு குருஸ்தானம் பெற்றவர்; இவரைப் பெற்ற தாயார், 'வால்பூல்' என்பவருக்கு உறவினரான, 'டாக்டர் சக்லிங்' என்பவரின் குமாரத்தியாவர்.

நெல்சன் சிறு பருவத்தில் தாய் தந்தையரால் அன்புடன் வளர்க்கப்பட்டு உரிய பருவத்தில் கல்வி கற்று வாலிப திசையை அடைந்து எந்தத் தொழிலையும் சாமார்த்தியமாகச் செய்யும் புத்தி சாதுரிய முடையவராயிருந்தார். அப்போது இவருடைய மாமனாராகிய, 'காப்டன். மாரிஸ் சக்லிங்' என்பவரின் உதவியால் இவருக்குக் கப்பல் உத்தியோ



கம் கிடைத்தது. இவர், 1770-ஆம் ஆண்டில் அந்த உத்தியோகத்தை ஏற்று ஒரு வியாபாரக் கப்பலில் மேற்கு இந்திய தீவுக்குப் பிரயாணம் சென்றார். அங்குப் போய்க் கொஞ்ச காலமிருந்து பிறகு 1773-ஆம் ஆண்டில், 'ஆர்க்டிக்' சமுத்திர யாத்திரை செய்து, 'ஸீஹார்ஸ்' என்னும் கப்பலில் கிழக்கு இந்திய தீவுக்குச் சென்றார். இவ்வாறு இவர் இரண்டு வருடகாலம் யாத்திரையிலேயே இருந்தபடியால்

சீதோஷ்ண நிலைகளின் மாறுதலால் சரீர சௌக்கிய மில்லா மல் உடம்பிளைத்து வேலை செய்வதற்குச் சக்தியற்றவராய் 1776-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் தம்முடைய ஊருக் குத் திரும்பி வந்தார்.

பிறகு நெல்சன் கப்பல்தொழில் கல்விபயின்று, 1777-ஆம் வருடம் ஏப்பிரல் மாதம் அப்பரீட்சையில் தேறினர். அதன்மேல் இவருடைய தாயாரின் பந்து வர்க்கத்தார் செய்த உதவியால். 'லோயஸ்ட் ஆவ்ட்' கப்பலில் காப்டனு யிருந்த, 'லாக்கர்' என்பவருக்கு உதவியாளராக, 'லப்டி னன்ட்' உத்தியோகம் பெற்றார். அவ்வாறு பெற்றபின் அக் கப்பலில், 'ஜமாய்க்கா'வுக்குச் சென்றார். பிறகு 1778-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ஆம் தேதி, 'பாட்ஜர்' என்னும் கப்பலுக்கு உத்தியோகஸ்தராக அட்மிரலால்—தளகர்த்த ரால் மாற்றப்பட்டார். அதில் ஆறுமாதங்கள் இருந்து பிறகு, 'ஹின்சின்ப்ரூக்' என்னும் கப்பலுக்கு மாற்றப் பட்டார்.

அதற்குமேல் நெல்சன் 1780-ஆம் வருடம் ஜனவரி மாதம், 'சான்ஜுவே' னுக்கு எதிராகக் கப்பற் படையுடன் புறப்பட்டு ஒரு ஆற்றின் வழியாகச் சென்றார். அவ்வாறு செல்லும்போது இவருக்குத் தேகாரோக்கியம் கெட்டு மிகுந்த நோயுண்டாகி விட்டது. அதனல் மரணமடையத் தக்க நிலைமை உண்டாகிவிட்டது. அவ்வாருகவே இவர் ஊருக்குத் திரும்பி வந்துவிட்டார். வீடு சேர்ந்து நோய்க்குப் பரிகாரஞ் செய்து சில தினங்கள் இளைப்பாறினர். பின்னர் இவருக்குத் தேகாரோக்கிய முண்டாயிற்று.

அதன்மேல் நெல்சன் 1781-ஆம் வருடம் ஆகஸ்டு மாதம், 'ஆல்பிமார்லி' என்னும் கப்பலை வடசமுத்திரத்தில்

செலுத்தி வட அமெரிக்காவை அடைந்து அங்கிருந்த 'லார்ட் ஹூட்' என்பவரின் படையோடுசேர்ந்து, 'வில்லியம் ஹென்றி' என்னும் அரசிளங் குமரரோடு சிநேகானார். இந்த இராஜகுமாரரே பின்னல் நான்காம் வில்லியம் ஆன வர்.

பிறகு நெல்சன், 1784-ஆம் ஆண்டில், 'போரீயஸ்' என்னும் கப்பலை நடத்திக்கொண்டு மேற்கு இந்திய தீவுக்குச் சென்றார். அங்குப் போய்ச் சேர்ந்தவுடன், 'நாவிகேஷன் ஆக்ட்' என்னும் கப்பலைப் பற்றிய சட்டத்தை உண்டாக்கினார். அச்சட்டத்தில் அமைந்த விதிகள் அமெரிக்கர்களுக்கும், அங்கிருந்த வியாபாரிகளுக்கும் இடைஞ்சலை உண்டாக்கக் கூடியனவாயிருந்தபடியால் அவர்கள் இவர்மீது வெறுப்படைந்தனர்; அதனல் இவருக்குப் பல நஷ்டங்களும், தடைகளும் எற்பட்டன. எனினும் நெல்சன் அச்சட்டவிதிகளை ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவா விடாமுயற்சி செய்தார். முடிவில் அங்கிருந்தவர்களால் அந்தச் சட்டதிட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

பின்னர் அங்குச் சிலமாதங்கள் தங்கியிருந்து அந்த மேற்கு இந்தியத்தீவுக்குத் தலைவராகிய, 'மிஸ்டர்.ஹெர்பர்ட்' என்பவரின் மருமகளும், 'நெவிஸ்' என்னும் ஊரிலிருந்த, 'டாக்டர் நிஸ்பெட்' என்பவரை மணந்து அவர் இறந்து விட்டதால் கைம்பெண்ணாயிருந்தவளுமான, 'மிஸ்ட்ரஸ் நிஸ்பெட்' என்னும் பெண்மணியை நெல்சன் மணஞ் செய்துகொண்டார். அதன்மேல், 'போரியஸ்' என்னும் கப்பல் விற்கப்பட்டுவிட்டது. அதனல் அக்கப்பலுக்குத் தலைவராயிருந்த இவர், 1787-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தம் மனைவியோடு, 'பர்ன்ஹாம் தார்பி' என்னும் தம்முடைய

ஊருக்குத் திரும்பி வந்தார். அங்கு வந்து ஐந்து வருடங் கள்வரை இல்லற வாழ்க்கையை நடத்தினார். அப்போது மீண்டும் ஏதேனும் உத்தியோகம் பெறுவதற்குப் பலமுறை முயன்று பார்த்தார்; அவர் எண்ணப்படி சீக்கிரத்தில் வேலை கிடைக்கவில்லை.

இப்படி நெல்சன் வேலையின்றி இருக்கும்போது, 1793-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பிரான்சுக்கும், இங்கிலாந் துக்கும் போர் மூண்டது. அப்போருக்குப் போகும்படி யுத்த அதிகாரிகளிடமிருந்து நெல்சனுக்குக் கட்டளை கிடைத் தது. அக்கட்டளைப்படி நெல்சன் 64 துப்பாக்கி வீரர்களடங் கிய, 'அகமெம்னன்' என்னும் கப்பலில், 'லார்ட் ஹூட்' என்பவருடன் மத்தியதரைக் கடலுக்கு (மெடிடரேனிய னுக்கு)ச் சென்றார். அப்போது, 'டூலான்' என்னும் இடம் இங்கிலாந்தின் நேசதேசத்தாரின் வசமாயிற்று; அதன் பாது காப்பைப் பலப்படுத்துவதற்காக, 'நேபிள்ஸ்' என்னுமிடத் திற்குப் போகும்படி நெல்சனுக்கு மேலதிகாரிகளால் உத்த ரவு கிடைத்தது. நெல்சன் அங்குப் போய்க் காரியங்களை ஒழுங்கு படுத்திவிட்டுத் திரும்பி வந்து, 'கார்ஸிகா' என்னு மிடத்தைக் கப்பற்படையின் உதவியால் பாதுகாத்தார். பிறகு தம்மிடமிருந்த கப்பற்படையை, 'பாஸ்டியா கால்வி' என்னுமிடங்களில் நடத்திச் சென்றார். அவ்வாறு செல்லும் போது நெல்சனுடைய வலக்கண்ணில் எதிரியின் குண்டு பாய்ந்தது. அதனால் இவருக்கு வலக்கண் குருடாயிற்று.

பிறகு நெல்சன் 1795-ஆம் ஆண்டில், 'அட்மிரல் ஹோ தாம்' என்பவருக்கு உதவியாக, 'டூலான்' என்னும் இடத் திற்கு வெளியில் கப்பற் படையைச் செலுத்திப் பிரான்சுக் காருடன் சண்டை செய்தார். இச்சண்டையில் பிரான்

சுக்காரர் நஷ்டமடைந்து தோல்வியுற்றனர்; அவ்வாறு தோல்வியுற்றாலும் உயிர்தப்பிப் போய்விட்டனர். அதற்காக நெல்சன் ஆத்திரமும், கோபமுங் கொண்டார். அக் கோபத்தால் "பிரஞ்சுக்காரரை இன்னும் சின்னபின்னப்படுத்தியிருக்கலாம்; அவர்களைத் தப்பியோடும்படி விட்டது திருப்தியான காரியமாகாது" என்று மேலதிகாரிக்குத் தம் கோபத்தை வெளிப்படுத்தி ஒரு கடிதமெழுதினார்.

1795-ஆம் ஆண்டில், 'ஹோதாம்' என்பவர் இராணுவ உத்தியோகத்தினின்றும் நீங்கினார்; அவருடைய பதவிக்கு 'ஸர்ஜான் ஜெர்விஸ்' என்பவர் வந்தார். 1796-ஆம் வருடம் முழுவதும் கப்பற்படையைக்கொண்டு, 'டூலா'னைக் காப்பாற்றும்படி நெல்சனுக்கு மேலதிகாரிகளிடமிருந்து கண்டிப்பான உத்தரவு கிடைத்தது. இதற்கு முந்திய வருடங்களிற் சென்றது போலவே நெல்சன் சிறு படையுடன், 'ஜினேவா' என்னும் 'கல்பில்' சென்று தங்கியிருந்து அன்னியருடைய கரை சம்பந்தமான வியாபாரங்களையெல்லாம் நிறுத்தி வழிகளை அடைத்து அவ்விடத்தைப் பாதுகாத்தார்.

அந்த வருடம் முடிவதற்குள் ஸ்பெயின் தேசத்துக்கும், பிரான்சுக்கும் நேசப்பான்மை ஏற்பட்டது: அதனால் ஸ்பெயின் பிரஞ்சுக்காரருக்கு உதவியாக மத்தியதரைக் கடலுக்கு ஒரு கப்பற்படையை அனுப்பிற்று; இட்டலியும் பிரான்சுடன் சேர்ந்து கொண்டது. அதனால் ஆங்கிலேயரின் எதிரிகளாகிய பிரஞ்சுக்காரருக்கு வலிமை அதிகரித்தது. அப்போது நெல்சனின் மேலதிகாரியாகிய, 'ஜெர்விஸ்' என்பவர் கார்ஸிகாவிலிருந்தார்; அவருடைய நிலைமை மிகவும் நெருக்கடியாய்விட்டது. அதனால் அவர் கார்ஸிகாவை விட்டு,' ஜிப்

ரால்ட்டருக்கு வந்து, அங்கிருந்து, 'லிஸ்ப'னுக்கு வந்தார். அப்படி வந்தும, 'ப்ரெஸ்ட்' என்னும் இடத்திலிருக்கும் பிரஞ்சுப் படையுடன் சேர்ந்துகொள்ள அப்போது சென்று கொண்டிருந்த ஸ்பெயின் படையை அவ்வாறு சேரவொட்டாமல் தடுத்துவிட வேண்டுமென்று உறுதிகொண்டார். அவ்வாறே அந்தப் படையை 1779-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14-ம் தேதி, 'கேப் செயின்ட் வின்ஸன்ட்' என்னு மிடத்தில் எதிர்த்துத் தோற்கடித்துத் துரத்திவிட்டார். இந்தச் சண்டையில் நெல்ஸன், 'கம்மோடர்' என்னும் பதவி வகித்து 'காப்டென்'என்னும் கப்பலைநடத்தித் தமது முழுச் சாமார்த்தியத்தையும் காட்டி வேலை செய்தார். 'ஜெர்விஸ்' என்பவரால் தோற்கடிக்கப்பட்ட ஸ்பெயின்படை இருபிளவாகப் பிரித்துத் துரத்தப்பட்டது. அவ்வாறு பிரிக்கப்பட்ட படை ஒன்று சேராதபடி நெல்சன் தமது சிறு படையுடன் நடுவிற் புகுந்து ஸ்பெயின் அட்மிரலை எதிர்த்துப் போர் புரிந்தார். மேலும் இவருக்கு உதவிப் படைகள் வந்தன. அவ்வாறு வரவே ஸ்பெயினர்கள் ஓட்டம் பிடித்தனர். அப்பொழுது நெல்சனுடைய, 'காப்டென்' என்னும் கப்பலானது மிக்க சேதமடைந்திருந்ததால் இவர் அவர்களைத் துரத்திச்செல்லாமல் அங்கே தங்கியிருந்த ஸ்பெயின் தேசக் கப்பலான, 'சான் நிகோலாஸ்' என்பதைக் கைப்பற்றி அதிலிருந்த மனிதரைச் சிறைப்படுத்திப் பிறகு, 'சான்ஜோஸப்' என்ற கப்பலையும் கைப்பற்றினர்.

நெல்சன் இவ்வாறு காட்டிய சாமார்த்தியச் செயல்களுக்காகத் துரைத்தனத்தார் மகிழ்ந்து இவருக்கு, "க்ராஸ் ஆவ் தி பாத்" என்னும் பட்டமளித்தார்கள். பின்னர் நெல்சன் நாளடைவில் செய்துவந்த யுத்தத்திறமைகளால், "ரியர் அட்மிரல்" என்னும் பதவியும் பெற்றூர். பிறகு, 'சான்டா

க்ரூஸ்' என்னுமிடத்தில் விலை உயர்ந்த பொருள்களுடன் தங்கியிருந்த ஸ்பெயின் தேசத்துக் கப்பலொன்றைக் கைப் பற்றும்படி 1797 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அதிகாரிகளால் நெல்சனுக்கு உத்தரவளிக்கப்பட்டது. அந்த உத்தரவில், "அக் கப்பலைக் கைப்பற்ற முடியாவிட்டால் அவ்வூரிலுள்ள மனிதருக்கு வரி ஏற்படுத்தி வசூலித்து அந்தக் கப்பலின் மதிப்புக்குச் சரியான பொருளைக் கைப்பற்றி வரவேண்டும்" என்ற கட்டளையும் இடப்பட்டிருந்தது. நெல்சன் இவற்றை நிறைவேற்றுதற்குத் தகுதியான படை தமக்கு வேண்டு மென்று அதிகாரிகளிடம் கேட்டார். ஆனால் இவருடைய கோரிக்கைப்படி இவருக்குத் தகுதியான படை அளிக்கப் படவில்லை; இவருக்குக் கொடுக்கப்பட்ட கப்பல்களும் வலிமையுடையனவல்ல; இவரிடம் தரைப்படையும் குறை வாகவே யிருந்தது. இப்படியிருந்தும் நெல்சன் இரவில் சென்று அந்தக் கப்பலைத் தாக்கினார்; அப்போது மிகுந்த இருட்டாயிருந்த படியால் இவருடைய படகுகள் வழி தெரி யாமல் இடர்ப்பட்டன; பாதுகாப்பான இடமும் இவருக்கு வாய்க்கவில்லை. ஆதலால் நெல்சன் எதிரிகளால் துரத்தி யடிக்கப்பட்டு மிகுந்த நஷ்டத்துடன் திரும்பினார்; அப்போது எதிரிகளின் குண்டுபட்டு இவருடைய வலக்கை ஒடிந்து விட் டது; இவர் அந்தக் காயத்துடன் படையாட்களால் தம்மு டைய கப்பலுக்குக் கொண்டுபோகப்பட்டார். பிறகு இங்கி லாந்துக்குச் சென்று சௌக்கியமடைந்தார்.

அதன்மேல் நெல்சன் 1798-ஆம் வருடம் மார்ச்சுமீ 7-ஆம் தேதி, 74 துப்பாக்கி வீரர்களுடன் கூடிய, 'வான் கார்ட்' என்னும் கப்பலுக்குத் தலைமை வகித்து, "செயின்ட் ஹெலென்ஸ்" என்னுமிடத்திலிருந்து, "கேடிஸ்" என்னுமிடத் திலிருந்த படையுடன் சேர்ந்துகொள்ளப் போனார். பிறகு

இவர், "டூலான்" என்னுமிடத்தில் தங்கியிருந்த பிரஞ்சுப் படையின் அந்தரங்க நோக்கத்தை அறிந்து வரும்பொருட்டு அதிகாரிகளால் அங்கே அனுப்பப்பட்டார். ஆனால் இவருக்கு அந்தப் படையின் இரகசியமொன்றும் புலப்படவில்லை. இவருடைய, "வான்கார்ட்" என்னும் கப்பலானது புயற் காற்றினால் தாக்கப்பட்டுச் சுழன்று அபாயகரமான நிலைமையை அடைந்தது; அதனால் நெல்சன் அக்கப்பலை சார்டீனியாவுக்கருகிலுள்ள, 'சான்பீட்ரோ' என்னுமிடத்திற்குக் கொண்டுபோய்ச் சரிப்படுத்தினார். பிரஞ்சுப்படை எகிப்து நோக்கிச் சென்றது.

பின்னர் நெல்சனுக்கு உதவியாகப் பத்துக் கப்பல்கள் அதிகாரிகளால் அனுப்பப்பட்டன. ஆனால் அந்தச் சமயத்தில் நெல்சனுடைய சேனைகள் அங்குமிங்கும் அலைய வேண்டிய சிரமத்திற்கஞ்சி நெல்சனைவிட்டுப் பலவாறாகப் பிரிந்து போய்விட்டன; திரும்பி இவரிடம் வந்து சேரவில்லை. பிரஞ்சுப்படை டூலானைவிட்டுப் போன பிறகு அதைப்பற்றிய எந்தத் தகவலும் நெல்சனுக்குக் கிடைக்கவில்லை. பின்னர் நெல்சன், 'நேபிள்ஸ்' என்னுமிடத்திற்குப் போய்ப் பிரஞ்சுப்படையைப் பற்றிய விஷயத்தை அறிய முயன்றார்; அங்கும் ஒன்றும் புலப்படவில்லை. பின்னர் நெல்சன், 'மெஸ்ஸீனா' என்னுமிடத்தை அடைந்தார். அங்கே பிரஞ்சுக்காரர்கள் 'மால்டா'வைப் பிடித்துக்கொண்டு கொஞ்ச நாளைக்குமுன் அதைவிட்டுச் சென்றதாகக் கேள்விப்பட்டார். எனினும் அவர்கள் இன்னவிடத்திற்குத்தான் சென்றார்கள் என்பது நெல்சனுக்குத் தெரியவில்லை. ஆயினும் நெல்சன், "அவர்கள் எகிப்துக்குத்தான் சென்றிருப்பார்கள்" என்று யூகித்துணர்ந்து அங்குச் சென்றார். அவ்வாறு சென்றும் அவர்கள் அங்கேயிருக்கும் குறிப்பு எதுவும் இவருக்குத் தோன்ற

வில்லே; ஆனல் அந்த எதிரிகள் சமீபத்திலேயேதான் இருந்தார்கள்; அப்படியிருந்ததை இவர் சரியாகக் கவனித்துக் கண்டுகொள்ளவில்லே.

அதன்மேல் நெல்சன் ஆசியாக் கரை வழியாகத் திரும்பி, 'சிராக்யூஸ்' என்னுமிடத்தில் கப்பலுக்கு வேண்டிய தண்ணீரைநிரப்பிக்கொண்டு, 'ஆர்ச்சிபிலாகோ' வழியாகக் கான்ஸ்டான்டிநோபிளுக்குச் செல்லத் தீர்மானித்தார். அப்போது பிரஞ்சுக்காரர்கள் எகிப்திலேயே இருக்கிறார்கள் என்பது இவருக்கு நிச்சயமாகத் தெரிந்தது. உடனே நெல்சன் அங்குச் சென்றார். சென்று, 'அபூகிர் பே'யில் பிரஞ்சுக்காரர் கப்பல்கள் தங்கியிருந்ததைக் கண்டார். அவ்வாறு கண்டதும் அதற்கருகிலுள்ள, 'நைல்' நதியிற் சேர்ந்து எதிரிகளுடன் சண்டை தொடங்கினர். அப்போது நெல்சனுடைய கப்பற் படையோ மிகவும் கொஞ்சமாயிருந்தது; மேலும், 'கல்லோடன்' என்னும் இவருடைய கப்பலும் தரைதட்டிப் போருக்குதவாமற் போயிற்று. ஆனல் அத்தருணத்தில் மும்முரமான காற்றுக் கிளம்பிப் பிரஞ்சுக் கப்பல்களைத் தாக்கிற்று; அதனேடு நெல்சன் படைகளும் எதிர்த்து அவற்றைத் தாக்கின. பிரஞ்சுக் கப்பல்களுக்கு அதிகச் சேதம் ஏற்பட்டுவிட்டது. உடனே நெல்சன் சில பிரஞ்சுக் கப்பல்களை அழித்துச் சில கப்பல்களைப் பிடித்துக்கொண்டார். எதிரி கப்பல்களில் இரண்டு கப்பல்கள்தாம் தப்பிச் சென்றன. ஆனல் அந்த யுத்தத்தில் இவருடைய தலையில் எதிரிகளின் குண்டு தாக்கிக் காயம் உண்டாயிருந்தது.

இவ்வாறு நெல்சன் பூரண வெற்றி அடைந்த பிறகு மிக்க கெம்பீரத்தோடு, 'நேபிள்'ஸை அடைந்தார். இவருடைய கீர்த்தி எங்கும் பரவிற்று. அப்போது நேபிள்ஸி

லிருந்த இங்கிலீஷ்தூதரின் மனையாளான, 'லேடி ஹாமில்டன்' என்பவள் நெல்சனுடைய வீரத்திற்கு மகிழ்ந்து இவரைக் கொண்டாடினாள். அவளுக்கும், நெல்சனுக்கும் மிகுந்த நட்புண்டாயிற்று; அந்த நேசம் அவர்களின் ஆயுள்வரை நீடித்திருந்தது.

பிறகு நெல்சனுடைய சாமார்த்தியத்தின் பொருட்டு இங்கிலாந்தில் துரைத்தனத்தாரால் இவருக்கு, "பாரன் நெல்சன் ஆவ் தி நைல்" என்னும் பட்டம் கொடுக்கப் பட்டது; வருடமொன்றுக்கு இரண்டாயிரம் பவுன் உபகாரச் சம்பளமாகவும் கொடுத்துவரத் தீர்மானம் செய்யப்பட்டது. இவையின்றி நெல்சனுக்குக் கிழக்கு இந்தியா கம்பெனியார் பத்தாயிரம் பவுன் சன்மானம் அளித்தனர்; துருக்கி தேசத்து அரசாட்சியாரும், ருஷியா துரைத்தனத்தாரும் ஏராளமானவைகளும், விலை உயர்ந்தவைகளுமாகிய வெகுமதிகளை அனுப்பினார்கள்; 'நேபிள்ஸ்' அரசர் வருடத்திற்கு மூவாயிரம் பவுன் வருமானம் வரத்தக்க பூஸ்திதியைக் கொடுத்து சிஸிலியைச் சார்ந்த, 'பிராண்டி' என்னும் ஊரை நெல்சனுக்கு உரியதாக்கி, "ட்யூக் ஆவ் பிராண்டி" என்னும் பட்டத்தையும் வழங்கினார்.

அப்பால், 'நேபிள்ஸ்' அரசாங்கம் ஆஸ்டிரியாவுடன் சேர்ந்து பிரான்சுக்கு விரோதமாக யுத்தம் செய்ய ஆரம்பித்தது. அப்போது, 'நேபிள்ஸ்' தேசத்தார் பிரஞ்சுக்காரரோடு எதிர்த்துநிற்க முடியவில்லை; நேபிள்ஸ் அரசரும், அவருடைய படையாட்களும் தப்பியோடினார்கள்; நெல்சன் அவர்களை 'பாலெர்மோ' என்னும் இடத்திற்கு அழைத்துச் சென்று காப்பாற்றினார். அக்காலத்தில் 'நேபிள்ஸ்' அரசருடைய

உத்தியோகஸ்தனுகிய, "கார்டினல் ரவ்போ" என்பவன் எதிரிகளுக்கனுகூலமான உடன்படிக்கை செய்தான். "காராக்கியோலோ" என்னும் தலைவன் இராஜத் துரோகமான காரியங்களைச் செய்தான். நெல்சன் அங்குப் போய் அந்த உடன்படிக்கையை மாற்றியதோடு, 'காராக்கியோலோ' என்பவனையும் தூக்கிலிட்டுக் கொன்றுவிட்டார்.

அப்போது, "மைனார்கா" என்னுமிடத்தில் பிரஞ்சுக்காரரும் ஸ்பெயின் தேசத்தாரும் பிரவேசிக்க முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். மத்தியதரைக் கடலில் தங்கியிருந்த சேனுதிபதியாகிய, "லார்ட் கீத்" என்பவர் அக்குறிப்பை உணர்ந்து அவ்வெதிரிகளைத் தடுக்கும் பொருட்டு "உம்மால் இயன்றால், 'மைனார்கா' என்னுமிடத்திற்கு நீர் வரவேண்டும்; இயலாவிடில், உம்முடைய சேனையில் முக்கால் பாகத்தையாவது அனுப்பவேண்டும்" என்று 1799-ஆம் வருடம் ஜுலைமீ 19உ நெல்சனுக்கு உத்தரவனுப்பினார். ஆனால் நெல்சனுக்கு மண்டையில் பட்டிருந்த குண்டுக்காயம் வேதனை செய்துகொண் டிருந்தபடியால் அந்த உத்தரவின்படி நடந்து கொள்ள இவரால் முடியவில்லை; இக்கட்டளையை நிறைவேற்றும்படி நெல்சனுக்கு லார்ட் கீத்திட மிருந்து கண்டிப்பான உத்தரவுகள் மேலும் மேலும் வந்துகொண் டிருந்தன. அப்பால் நெல்சன் தம்முடைய துணைவரான, "ஜான் டக்வொர்த்" என்பவரை மாத்திரம் அங்கே அனுப்பிவிட்டு, "மால்டாவைக் காப்பாற்றும் பொருட்டு நான் இங்கேயே இருக்கிறேன்" என்று, "லார்ட் கீத்" என்பவருக்குக் கடிதம்மூலம் தெரிவித்தார். இதற்காக அவர் நெல்சன்மீது வெறுப்புற்று இவரைக் கண்டித்தார்.

நெல்சனுக்குத் தலையிற்பட்டிருந்த குண்டுக் காயத்தின் வேதனையால் தேகாரோக்கியம் கெட்டு விட்டது. இந்நிலைமை

யோடு நெல்சன் முன்னே, 'அபூகிர் பே'யிலிருந்து தப்பிச் சென்ற பிரஞ்சுக் கப்பல்கள் இரண்டையும் பிடித்துவிட்டார். அவ்வாறு பிடித்தபின் உடம்பைச் சௌக்கியப் படுத்திக் கொள்வதற்காக வேலையிலிருந்து நீங்கி லேடிஹாமில்டனையும், அவள் கணவனையும் அழைத்துக்கொண்டு, 'வியன்னா டிரெஸ் டன்' வழியாகத் தம்முடைய ஊருக்குச் சென்றார்; 1800-ஆம் வருடம் நவம்பர் மாதம் இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார்; இவர் அங்குப் போய்ச் சேர்வதற்கு நான்கு மாதங்கள் சென்றன; இந்த நான்கு மாதங்களுக்குள் இவருடைய உடம்பு நல்ல நிலைமைக்கு வந்துவிட்டது; இவர் மீண்டும் வேலையை ஏற்றுக்கொள்ளத் தக்க சௌகரியத்தை அடைந்திருந்தார்.

ஆனால், நெல்சன் ஊர்போய்ச் சேர்ந்தவுடன் சந்தோஷத்தை அடையவில்லை; தம்முடைய நட்பினரை உடனழைத்துச் சென்றதால் இவர்மீது இவர் மனைவிக்கு வெறுப்புண்டாயிற்று; இருவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டது; அதனால் இருவரும் பிரிந்துவிட்டார்கள்.

பிறகு, 1801-ஆம் வருடம் ஜனவரிமீ 1உ இராணுவ இலாகா அதிகாரிகளால் நெல்சன், "வைஸ் அட்மிரல்" பதவிக்கு உயர்த்தப்பட்டார்; கொஞ்ச காலத்திற்கப்பால், "ஸர் ஹைட் பார்கர்" என்பவருக்கு உதவி செய்யும் பொருட்டு, "பால்டிக்" கடலுக்கு அனுப்பப்பட்டார். அப்போது, "செயின்ட் ஜார்ஜ்" என்னும் பெரிய கப்பலை இவர் நடத்திச் சென்றார்; அந்தக் கப்பல், "கோபன்ஹாகன்" என்னுமிடத்தைத் தாண்டிச் செல்லமுடியாமல் தடைப்பட்டது. அதனால் நெல்சன் அக்கப்பலைவிட்டு, "எலிபன்டா" என்னும் கப்பலில் ஏறிக் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றார். அப்போது, "பார்கர்" யுத்தத்தின் முழுப் பொறுப்பையும் நெல்சன் வசத்தில் விட்டுவிட்டுச் சற்று தூரத்தில் இருந்து சண்டையைக்

கவனித்தார். மூன்று நான்கு மணி நேரம் மும்முரமான சண்டை நடந்தது; பீரங்கிகள் முழங்கின; எதிரி படைகளில் பெரும்பாகம் நெல்சன் வசப்பட்டது; வெடிக் குண்டுகளால் எதிரிகளின் படைகளும், கப்பல்களும் மேலும்மேலும் சேதமாய்க்கொண்டிருந்தன; முடிவில் நெல்சன் இவ்வாறு சேதமடைவதற்கு இரக்கமுற்று எதிரிகளுடன் சமாதானம் செய்துகொள்ள விரும்பி அதற்கறிகுறியான கொடியை உயர்த்தினார்; இருகட்சியாரும் சண்டையை நிறுத்தினார்கள்; கைதிகளை விடுதலைசெய்யவும் இசைந்தார்கள். இச்சமயத்தில் ருஷியா அரசர் இறந்துவிட்டார்; இச்செய்தி அங்கு எட்டிற்று; அதனால் அவர்களுக்குள் சமாதானம் நிலைத்துவிட்டது.

அதன்மேல் நெல்சன், "வைகவுண்ட்" பதவியை அடைந்தார்; 'பார்கர்' என்பவருக்குப் பிறகு, "கமாண்டர் இன்சீவ்ப்" (சேனைத்தலைவர்) ஆனார். ஆயினும் இவருடைய தேகாரோக்கியம் மிகவும் கெட்டிருந்ததால் வேலை செய்ய முடியாமல் லீவு பெற்று இங்கிலாந்துக்குத் திரும்பினார். இவர் அங்குப் போய்ச் சேர்ந்தவுடன் பிரஞ்சுக்காரர்கள் போர் தொடங்க ஆயத்தமாகி விட்டனர். அதனால் இங்கிலாந்தின் கடற்கரைப் பக்கங்களுக்கு எதிரிகள் வந்துவிடாமல் அவற்றைக் காக்கும்படி துரைத்தனத்தாரால் நெல்சனுக்கு உத்தரவளிக்கப்பட்டது. நெல்சன் அவ்வாறே காக்கத் தொடங்கி, "பொலோன்" என்னுமிடத்திலிருந்த ஒரு சிறு பிரஞ்சுக் கப்பற்படையைத் தாக்க முயன்றார். ஆனால் அப்படை சிதையவில்லை. எனினும் ஆயுதப் படைகள் தாங்கிய எதிரிகளுடைய எந்தக் கப்பலும் கரையோரங்களில் நெருங்காதபடி நெல்சன் காவல்புரிந்து வந்தார்.

பின்னர் எதிரிகளால் யுத்தம் தொடங்கப்பட்டது. அவ்வாறு சண்டை ஆரம்பமானவுடனே நெல்சன் இராணுவ அதிகாரிகளால் மத்தியதரைக் கடலுக்கு எதிரிகளைத் தாக்கும்பொருட்டு அனுப்பப்பட்டார். அப்போது, "விக்டரி" என்னும் கப்பலில் ஏறிச்சென்று, "டூலான்" என்னும் இடத்திற்கு முன்னே தங்கிப் பதினெட்டுமாத காலம்வரை அங்கே எதிரிகள் நெருங்காவண்ணம் அவ்விடத்தைப் பாதுகாத்து வந்தார்; சிற்சில சமயங்களில் ஆகாரம், தண்ணீர் முதலியவற்றைச் சேகரித்துக் கொள்வதற்காக, "மாடலீனு" என்னும் இடத்திற்கு மாத்திரம் போய்வந்துகொண்டிருந்தார்.

இப்படி யிருக்கும் சமயத்தில், 1805-ஆம் வருடம் மார்ச்சுமாதம், "வைஸ் அட்மிரல் வில்லெனீவ்" என்பவரின் தலைமையில் பிரஞ்சுக் கப்பற்படையொன்று கடலில் பிரவேசித்து எவ்வித தடையுமின்றி, "கேடிஸ்" முதலிய இடங்களைத்தாண்டி, "ப்ரேஸ்ட்" என்னுமிடத்திலிருந்து கப்பற்படை வரும், அதனுடன் சேர்ந்து கொள்ளலாம் என்று, "மார்டினிக்" என்னுமிடத்திற்குப் போயிற்று. நெல்சனுக்கு ஆறு வாரங்கள்வரை, 'வில்லெனீவ்' இன்னவிடத்திலிருக்கிறனென்பது தெரியாம லிருந்தது. வில்லெனீவ் உத்தேசித்தபடி பிரேஸ்ட் என்னுமிடத்தி லிருந்து படை வரவில்லை அதனால் அவன் இங்கிலீஷ்காரரோடு யுத்தஞ் செய்யாமல் தப்பித்துக் கொண்டு போய்விட வேண்டுமென்று ஐரோப்பாவுக்குத் திரும்பிச் சென்றான். அவன் அவ்வாறு செல்வதை நெல்சன் உணர்ந்து அவனைப் பின்பற்றிச்சென்றார்; அப்படிச் சென்றவர் அவனைத் தாண்டிக்கொண்டு முன்னே போய்விட்டார். பிரஞ்சுக்காரர் ஐரோப்பாவின் கடற்கரையை அடைவதற்குள் நெல்சன், "கேடிஸ்" என்னுமிடத்தை அடைந்து விட்

டார். 'வில்லெனீவ்' பிரேஸ்டிலிருந்து வரும் படையுடன் சேர்ந்து கொள்ள நினைத்திருந்த உத்தேசம் அப்போது நெல்சனுக்குத் தெரிந்துவிட்டது. அதனால் நெல்சன், 'பிரேஸ்'டில் இருக்கும் தம்முடைய சேனையைப் பலப்படுத்துதற்குத் தம்முடன் வந்த கப்பல்களை அங்கே நிறுத்திவிட்டுத் தாம் மாத்திரம் இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தார்; ஆனால் சில தினங்களே அங்கே தங்கினர். இரண்டு வாரத்திற்குள், 'வில்லெனீவ்' 'கேடிஸ்' என்னுமிடத்திற்குச் சென்றிருப்பதாக ஆங்கிலேய இராணுவ அதிகாரிகளுக்குச் செய்தி எட்டிற்று. உடனே நெல்சன் தலைமை வகித்துப் படைகளுடன்சென்று துறைமுகப் பட்டினங்களைப் பாதுகாக்கும்படி அதிகாரிகளால் இவருக்கு உத்தரவிடப்பட்டது. நெல்சன் அந்த உத்தரவுப்படி 1805-ஆம் வருடம் செப்டம்பர்மீ 25வ அவ்வேலையை ஒப்புக்கொண்டு ஒருமாத காலம்வரை துறைமுகப் பட்டினங்களைப் பாதுகாத்துக் கொண்டிருந்தார்; இவருக்கு நாளடைவில் சேனை அதிகரித்தது. நெல்சனுக்கு, "எப்படியாவது வில்லெனீவைச் சண்டைக் கிழுத்து ஒழித்துவிட வேண்டும்" என்ற எண்ணம் அதிகரித்திருந்தது. ஆனால், வில்லெனீவுக்குச் சண்டை தொடங்க இஷ்டமில்லாமலிருந்தது; அப்படியிருந்தும் ஆங்கிலப் படையுடன் யுத்தஞ் செய்யும்படி மேலதிகாரிகளிட மிருந்து அவனுக்கு அடிக்கடி உத்தரவுகள் வந்து கொண்டே யிருந்தன; அதனால் அவன் தனக்குச் சம்மதியில்லாவிடினும், 'சண்டை தொடங்கித் தான் தீரவேண்டும்' என்று தீர்மானித்தான். அத்தருணத்தில் இங்கிலீஷ் படைகளில் சிறிதுபாகம் ஜிப்ரால்டருக்குச் சென்றது. 'வில்லெனீவ்,' 'இதுதான் நல்ல சமயம்' என்று நெல்சனோடு யுத்தஞ்செய்ய முன்வந்தான். அப்போது, 'வில்லெனீவ்' வசத்தில் பிரஞ்சுப் படை, ஸ்பெயின் படை

ஆகிய இரண்டும் சேர்ந்திருந்தன; 33 கப்பல்கள் இருந்தன. நெல்சனிடம் 27 கப்பல்களே யிருந்தன.

1805 ஆம் வருடம் அக்டோபர்மீ 21உ காலை, "கேப் ட்ரபால்கர்" என்னுமிடத்தில் இருதிறக் கப்பற்படைகளுக்கும் போர் தொடங்கிற்று. நெல்சனைச்சார்ந்த, "ராயல் சாவரின்" என்ற கப்பலை நடத்திச்சென்ற, "காலிங்வுட்" என்பவர் பிரஞ்சுக் கப்பல்களுக்கும், ஸ்பெயின் கப்பல்களுக்கு மிடையில் புகுந்து மும்முரமான சண்டைசெய்தார். நெல்சன் தக்க படையுடன் எதிரிகளை வளைந்து தாக்கி அவர்களுக்கு அச்சத்தை உண்டாக்கிப் பின்னர் எதிரி படைகளின் மத்தியிற் புகுந்தார்; இவர் ஏறியிருந்த, "விக்டரி" என்னும் கப்பல் வில்லெனீவ் ஏறியிருந்ததும், 74 துப்பாக்கிகளை யுடையதுமாகிய, "ரிடௌடபிள்" என்னும் கப்பலோடு எதிர்த்தது. அவ்வாறு எதிர்க்கவே எதிரி கப்பல்களிலிருந்து குண்டுகள் வரிசையாக வந்து நெல்சனுடைய கப்பலைத் தாக்கிக்கொண்டிருந்தன; அதனால் நெல்சன் ஏறியிருந்த கப்பலின் மேல்தட்டில் பின்பாகம் சிதைந்து போயிற்று. அப்போது நெல்சன் "காப்டென் ஹார்டி" என்பவருடன் வார்த்தையாடிக்கொண்டிருந்தார். அத்தருணத்தில் எதிரியால் செலுத்தப்பட்ட குண்டு ஒன்று நெல்சனுடைய இடப்பக்கம் தோளில் பாய்ந்து முதுகின்பக்கம் ஊடுருவிச் சென்றது. உடனே நெல்சன் பிரக்ஞையற்று வீழ்ந்தார். பக்கத்திலிருந்தவர்கள் இவரைக் கப்பலின் கீழ்த்தட்டிற்கு எடுத்துச் சென்றார்கள்; மூன்றுமணி நேரத்திற்குப் பிறகு நெல்சன் உயிர் துறந்து இவ்வுலகத்தை விட்டுச் சென்றார். அதே சமயத்தில் இங்கிலீஷ்காரர் வெற்றியடைந்தார்கள்; அவர்களால் பிரஞ்சுப்படைகள் சின்னபின்னமாகச் சிதற அடிக்கப்பட்டன.

பிறகு நெல்சனுடைய உடம்பு இங்கிலாந்துக்குக் கொண்டுபோகப்பட்டு அரசாங்கத்தாரால் சகல இராஜாங்க மரியாதைகளுடனும், "செயின்ட்பா"லில் அடக்கம் செய்யப் பட்டது. இவர் தம் தேசத்திற்குச் செய்துவந்த நன்மைக்கும், உயிரைக் கொடுத்ததற்கும் இவருடைய ஞாபகார்த்தமாக இவருடைய சமாதியில் துரைத்தனத்தாரால் அழகிய கட் டிடம் கட்டப்பட்டிருக்கிறது.

---

17. 'ஆய்' என்னும் தமிழ் நாட்டு வள்ளல்

பிறர் விரும்பிய பொருளைத் தடையின்றி அவருக்குக் கொடுக்கும் ஈகைக் குணமுடையவனுக்கு, 'வள்ளல்' என்று பெயர். நம் தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட வள்ளல்கள் முற் காலத்தில் பலர் இருந்திருக்கின்றனர். அவர்களுள், 'ஆய்' என்பவனும் ஒருவன். இவன் கடையெழு வள்ளல்களிற் சேர்ந்தவன். பொதிகை மலைக்கருகில் கீழ்த்திசையில் உள்ள 'ஆய்க்குடி' என்னும் ஊரிலிருந்தவன்; இந்த ஆய்க்குடி பழ னிக்குக் கிழக்கில் மிகச் சமீபத்திலிருக்கின்றது; இப்போது ஜமீன் தலைநகரா யிருக்கின்றது.

இந்த ஆய் வள்ளல் வேளாளர் குலத்திற் பிறந்தவன்; வேளிர் (சிற்றரசர்) கூட்டத்தைச் சேர்ந்தவன்; சுரபுன்னை மாலையை அணிந்தவன்; இவனுக்கு, 'அண்டிரன்' என்னும் மற்றொரு பெயருமுண்டு. இவன் பகைவரால் தாக்கமுடி யாத மலைஅரண் உடையவன்; யானைகள் நிறைந்த காட்டை யுடையவன்; இவனுக்குப் பல மனைவியர் இருந்தார்கள்; இவ

னுடைய அரண்மனை எப்பொழுதும் மிக்க அழகுடனே விளங்கிக்கொண்டிருக்கும்; இன்னும், இவன் எவரிடத்தும் இனிய மொழியே பேசுவான்; சிவ பக்தியிற் சிறந்தவன்; தன்னிடம் வந்து பொருளை யாசிப்பவர்க்கு இல்லையென்னுமற் கொடுக்கும் ஈகையாளன்; பலருக்கும் யானைகளையே பெருங்கொடையாகக் கொடுத்திருக்கின்றான்; தமிழ்ப் புலவர்களுக்கு வேண்டிய பொருள்களையும், யானைகளையும் கொடுத்து அவர்களை மிகவும் ஆதரித்து வந்திருக்கின்றான்; உலகத்திற்குப் பெரிய உபகாரியாகவும் இருந்தான்; தமிழ் மொழியில் மிகுந்த விருப்பம் வைத்திருந்தான்; நற்குண நற்செயல்களால் எங்கும் தன் கீர்த்தியைப் பரப்பினவன். வெற்றியிலும் சிறந்தவன்; தினந்தோறும் மிக்க அலங்காரத்தோடு பவனி வருவான்.

இவனோடு ஒரு காலத்தில் கொங்கு நாட்டார் போர் செய்யத் தொடங்கி ஆய் நாட்டிற்குப் படையெடுத்து வந்தனர் அப்போது ஆய், அவர்களோடு எதிர்த்துப் போர்புரிந்து அவர்களைத் தாக்கி மேற்குக் கடற்பக்கத்தே துரத்திவிட்டான்.

இவனுக்கு ஒரு காலத்தில் ஒரு நீல நாகத்தால் அருமையான ஆடையொன்று கிடைத்தது. இவன் அந்த ஆடையைச் ‘சிவபெருமானே அணியத்தக்கவர்’ என்று கருதி அச் சிவபெருமானுக்கே அணிந்து மகிழ்ந்து புகழ்பெற்றான்.

ஒரு காலத்தில், ‘உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்’ என்னும் புலவர் ஆய் வள்ளலிடத்தில் பாடிப் பரிசுபெறலாமென்று சென்றார்; ஒருவனிடம் ஒரு பொருளைப்பெற விரும்பிச் செல்வோர்க்கு, ‘அவன் நாம் விரும்பியதைக் கொடுப்பானோ கொடுக்கமாட்டானோ?’ என்று பலவிதமான சந்

தேகங்கள் ஏற்படுவது இயற்கையல்லவா? அதனால் அப் புலவர் அவ்வாறு செல்லுங் காலத்தில், "ஆய் நமக்கு ஏதேனும் கொடுப்பானோ கொடுக்கமாட்டானோ? தயாள குணமுடையுவனோ கடினசித்த முள்ளவனோ? நம்மைக் கண்டவுடன் இனியமொழி கூறுவானோ கடிந்து பேசுவானோ? நாம் அவனிடம் செல்லலாமா திரும்பிவிடலாமா?" என்று பல சந்தேகங்களைக்கொண்ட சிந்தனையோடு சென்றார்; அவனைக் கண்டார். ஆய், அந்தப் புலவரைக் கண்டவுடன் மிகுந்த அன்புடன் முகமலர்ந்து வரவேற்றான்; அமுதத்தைக் காட்டினும் இனிய உபசார வார்த்தைகள் கூறி அவரை மிகவும் உபசரித்தான். ஆசனத்தில் உட்காருவித்தான்; அவருக்கு உயர்ந்த உணவளித்து உள்ள மகிழச்செய்தான்; அவருடைய மனக்குறிப்பை உணர்ந்து அவருக்கு வேண்டிய பொருள்களையும், யானைகளையும் கொடுத்தான். இப்படிப்பட்ட ஆயின் கொடையையும், குணத்தையும், அரிய செய்கையையும் கண்ட புலவராகிய மோசியார், "ஆ! என்னுடைய மூடப்புத்தியை என்னென்றுரைப்பேன்; இப்பேர்ப்பட்ட பெருங் குணமுடைய வள்ளலின் இயற்கையை நான் உணராமல் ஏதேதோ கருதினேன்; இவ்வளவு ஈகைக் குணமுடைய பிரபுவை நாம் உலகத்தில் காண்பது அரிதாகும்" என்று தம் அறிவை இகழ்ந்தும், ஆயின் குணங்களைப் புகழ்ந்தும் பாடினார். அது முதல் மோசியார் ஆயின்மீது மிகுந்த விசுவாச முடையவராய் அவனுக்கு மிகவும் வேண்டிய புலவராயும், நண்பராயும் இருந்து வந்தார்.

இந்த, 'ஆய்' என்னும் வள்ளலை மேற்கூறிய உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், துறையூர் ஓடைகிழார், குட்டுவன் கீரனார் என்ற மூன்று புலவருமே மிகுதியாகப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். இம்மூவருள்ளும் முட மோசியாரே

ஆயின் பெருமைகளை அதிகமாகப் புகழ்ந்து பாடி யிருக்கின்றார்.

இந்த வள்ளலின் ஈகை, அன்பு, இன்மொழி, பரோபகாரம், செல்வச் சிறப்பு, அரண்மனைச் சிறப்பு, தெய்வ் பக்தி, போர்த்திறம், மலைச் சிறப்பு, நாட்டுச் சிறப்பு, யானைக் கொடைச் சிறப்பு முதலியவைகளெல்லாம் மேற்கூறிய மூன்று புலவர்கள் இயற்றிய பாடல்களிலும், புறநானூற்றுச் செய்யுட்களிலும், நற்றிணையிலும் மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு ஆய் வள்ளல் தமிழ் நாட்டில் ஈகை முதலிய குணங்களிற் சிறந்து, ஆய் நாட்டை ஆண்டு முடிவில் விண்ணுல கடைந்தனன். அவனுடைய மனைவியர் அவன் பிரிவைச் சகிக்காமல் தீயில் பாய்ந்து உயிர் விட்டனர். ஆய் இவ்வாறு இறந்தபோது அவன் பிரிவுக்கு இரங்கி முடமோசியார், குட்டுவன் கீரனர் என்னும் இரண்டு புலவர்களும் உருக்கமான பாடல்களைப்பாடி வருந்தினர்கள். ஆய் வள்ளல் தன்மையிற் சிறந்து விளங்கியபடியால் அவனுடைய புகழ் தமிழ்நாட்டில் இப்பொழுதும் விளங்கிக்கொண் டிருக்கின்றது.

உலகத்தில் நற்குண நற்செயல்களை யுடையவர்களாயிருப்பவர்கள் எவர்களோ, அவர்களே பலராலும் கொண்டாடப்படுவார்கள்; அவர்களுடைய புகழே என்றென்றும் நிலைத்திருக்கும்.

---

18. மதுவிலக்கு

மனிதரின் அறிவைக் கெடுத்து அவருக்கு மிகுந்த மயக்கத்தை உண்டாக்கும் கள், சாராயம், பிராந்தி, உஸ்கி, பீர் முதலியவற்றிற்கு, 'மது' என்று பெயர். இந்த மதுவைக் குடிக்கும் பழக்கத்தை நீக்குவதற்கு, 'மதுவிலக்கு' என்று பெயர்.

இந்தக் குடிப் பழக்கத்தை ஏன் நீக்கவேண்டுமெனில் இதனால் பல கெடுதிகள் இருக்கின்றன. கொலை, களவு, சூது முதலாகிய பஞ்சமகா பாதகங்களில் மதுவும் ஒன்று. பஞ்சமகா பாதகங்கள் மனிதரைக் கெடுத்து நரகத்திற் கொண்டு போய்ச் சேர்க்கத் தக்கவைகள்; அவ்ற்றுள் முதன்மையானது மதுபானம். கள்ளுண்டவன் மற்ற கொலை, களவு, சூது முதலாகிய பாதகங்களை அஞ்சாமல் செய்து விடுவான். எப்படியெனில், மதுபானஞ் செய்தவனுக்கு முதலில் தன் அறிவு கெட்டு வெறியுண்டாகும்; அவ்வெறியால் அவன் பெண்களிடம் மரியாதையாக நடந்து கொள்ளமாட்டான்; பேசத்தகாத வார்த்தைகளைப் பேசி அவர்களுக்கு மிகுந்த துன்பத்தைச் செய்வான்; காரணமில்லாமல் பல மனிதரிடம் வீண்சண்டை தொடுப்பான்; சிலரைக் கொலை செய்து விடுவான்; மாமிசம் தின்னும் பொருட்டுப் பல பிராணிகளையும் வதைப்பான்; மதுபானம் செய்வதற்குத் திருடினால் மிகுந்த பணம் கிடைக்குமென்று தனியாகவும், திருடர் கூட்டத்திற் சேர்ந்தும் திருட்டுத்தொழில் புரிவான்; சூதாடினால் எளிதில் பொருள் கிடைக்குமென்று சூதாட்டத்திலும் சேர்வான்.

இன்னும் குடிகாரனுக்குக் கல்விஅறிவு உண்டாக மாட்டாது; ஆதலால் குடிப் பழக்க முள்ளவனை ஆசிரியர் மாணவ

ளுகச் சேர்க்கலாகாதென்று பெரியோர் நூல்களிற் கூறியிருக்கின்றார்கள். நன்றாகக் கல்வி கற்றவர்களும் மதுபானம் செய்தால் அக்கல்வி ஒன்றுக்கும் உதவாமல் போய் விடும்; அவர், தாம் கற்ற கல்வியைக் குடி வெறியால் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாமல் வாய்க்கு வந்தபடி பிதற்றிக் கெடுத்துக் கொள்வார்கள்; அவர்களைக் கல்வியாளரென்று எவரும் மதிக்கமாட்டார்கள்.

குடிகாரர்களுக்கு அறிவு சிறிதும் இராது; நன்மை தீமைகளைப் பகுத்துணருந்தன்மை கொஞ்சமும் இராது; எப்பொழுதும் அவர்கள் பயித்தியங் கொண்டவர்களைப்போன்று திரிந்தலைவார்கள். அதனால் எந்த வேலைக்கும் உபயோகப்பட மாட்டார்கள்; ஒரு தொழிலும் செய்யமாட்டார்கள். இவர்களுக்குப் பொருளைச் சம்பாதிப்பதும் தெரியாது; விருத்தி செய்வதும் தெரியாது; இவர்களிற் சிலர் குடிக்காத நேரங்களில் ஏதேனும் தொழிலைச்செய்து பணம் தேடினாலும் அதனை மாலையில் மதுபானத்துக்கே ஒழித்து விடுவார்கள். குடிகாரர்களில் பெரும்பான்மையோர் தங்கள் முன்னோர்கள் தேடிவைத்த பொருளை மதுபானத்துக்குச் செலவு செய்வதிலேயே நோக்கமுடையவர்களா யிருப்பார்கள்; கூடிய சீக்கிரத்தில் பொருள் முழுவதையும் செலவுசெய்து தரித்திரராகி விடுவார்கள்; மனைவி மக்களின்மீது அன்பில்லாமல் அவர்களுடைய நகைகளையும், உடைகளையும் விற்றுத் தொலைத்து விடுவார்கள்; அவர்களைத் தினந்தோறும் அடித்தும் திட்டியும் துன்புறுத்துவார்கள்; அவர்கள் பசியால் வருந்தி அலையச் செய்வார்கள். முடிவில் கள்ளைக் குடிப்பதற்குக் கையில் காசொன்று மில்லாமல் செய்யத்தகாத காரியங்களை யெல்லாம் செய்துகொண்டு பேய்போல் திரிந்தலைவார்கள்.

இன்னும் குடிகாரர்களுடைய செய்கைகளெல்லாம் பிறர் பார்த்துப் பரிகசிக்கக் கூடியவைகளாகவே யிருக்கும்; சிலர் குடிவெறியால் தெந்தினம் பாடிக்கொண்டு தெருக்களில் தள்ளாடிச் செல்வார்கள்; சாக்கடைகளில் வீழ்ந்து புரளுவார்கள்; மாங்களைக் கட்டிக்கொண்டு அழுவார்கள்; நாயோடு பேசிச் சிரிப்பார்கள்; குப்பைத் தொட்டிகளை எதிரிகளென்று நினைத்து அவற்றில்மோதி உடம்பைக் காயப்படுத்திக் கொள்வார்கள்; விரோதியைச் சிநேகனென்று நினைத்து அவனோடு பிரியமாய்ப் பேசுவார்கள்; சிநேகனை விரோதியென்று கருதி அவனோடு சண்டை தொடுப்பார்கள்; வெள்ளத்திலும் பள்ளத்திலும் வீழ்ந்து சாவார்கள்.

குடிகாரர்களுக்குச் சிநேகிதரிடத்திலாவது, சுற்றத்தாரிடத்திலாவது, மனைவி மக்களிடத்திலாவது விசுவாசம் இராது; எவரேனும் அவர்களுக்குக் கள்ளுக் குடிப்பதற்குப் பணம் கொடுத்து அவர்களின் சிநேகிதரையோ, சுற்றத்தாரையோ கொல்லச்சொன்னால் அவர்கள் தடையின்றிக் கொலை செய்து விடுவார்கள்; அவர்களை அடிக்கச் சொன்னாலும் அடிப்பார்கள்; அவர்கள் வீட்டில் நெருப்பு வைக்கச் சொன்னாலும் வைப்பார்கள்; தங்கள் மனைவி மக்களுக்கு ஆபத்து நேருங்காலத்திலும் அவர்கள்மீது இரக்கங்கொள்ளாமல் கள்ளுக் குடிப்பதிலேயே புத்தியைச் செலுத்திக்கொண்டிருப்பார்கள். ஒரு குடிகாரன் தன் குடும்பத்தைக் கெடுத்துத் தரித்திரத்திற்குள்ளாக்கிவிட்டுத் தன் புத்திரன் மிகுந்த நோயாயிருக்கும்போது அவனுக்கு ஒருதவியும் செய்யாமல் கையில் கிடைத்த காசையெடுத்துக்கொண்டு கள்ளுக் கடைக்குப் போயிருந்தான்; அத்தருணத்தில் அப்புத்திரன் இறந்து விட்டான். சுற்றத்தார் குடிகாரனைத் தேடினார்கள்; அவன் அகப்

படவில்லை. முடிவில் சவத்தைக் குளிப்பாட்டி அதன்மேல் புதுத்துணியொன்று போட்டு மூடி வைத்துவிட்டுச் சுடுகாட்டிற்குக் கொண்டுபோவதற்கு வெளியிலிருந்து அந்தக் குடிகாரன் வரவை எதிர்பார்த்திருந்தார்கள். நெடுநேரம் சென்று அவன் வந்தான். சுற்றத்தார், "உன் பிள்ளை இறந்துவிட்டான்; சவத்தைச் சுடலைக்குக் கொண்டுபோக வேண்டும்; உள்ளே போய் அவனைப் பார்த்துவிட்டு வா' என்று அவனிடம் சொன்னார்கள். அவன் உள்ளே போனான். போனவன் நெடுநேரம் வரை வெளியில் வரவில்லை. பின்னர்ச் சுற்றத்தார் உள்ளே போய்ப் பார்த்தார்கள்; அவன் அங்கில்லை; பிணத்தின்மேல் போடப்பட்டிருந்த புதுத்துணியும் இல்லை. அவன் உள்ளே சென்று பிணத்தின்மேலிருந்த புதுத்துணியைப் பார்த்தவுடன், 'இதை விற்றுக் கள்ளுக் குடிக்கலாம்' என்று அதை எடுத்துக்கொண்டு கொல்லைப்பக்கமிருந்த வழியாக நழுவிப்போய் விட்டான். அதைச் சுற்றத்தார் தெரிந்துகொண்டு அவனை நிந்தித்துவிட்டுப் பிரேதத்தை எடுத்துக்கொண்டுபோனார்கள். இதனால் குடிகாரர்களுடைய அன்பில்லாச் செய்கையைத் தெரிந்து கொள்ளலாம்.

இன்னும் குடிகாரர்களுக்குப் பரிசுத்தமிராது. அவர்கள், கள்ளைக் குடுவைகளில் வாங்கிச் சாக்கடை யோரங்களில் வைத்துக்கொண்டும், ஆபாசமான சிற்றுண்டிகளைத் தின்றுகொண்டும் குடித்து ஒருவரோடொருவர் விநோதமான சம்பாஷணைகளைச் செய்துகொண் டிருப்பார்கள். பிராந்தி, உஸ்கி முதலியவற்றைக் குடிக்கும் கௌரவக் குடிகாரர்கள் மதுபானம் செய்யும் இடங்களும் ஆபாசமாகவே யிருக்கும். அவர்கள் சமீபத்தில் பிறர் நெருங்கினால் எப்பொழுதும் அருவருக்கத்தக்க துர்நாற்றமே வீசிக்கொண்டிருக்கும். அதனால் அவர்களிடம் நெருங்க எவரும் அஞ்சுவார்கள்.

இன்னும் குடிகாரர்களுக்கு எப்பொழுதும் கௌரவ மென்பதே ஏற்படாது; குடிகாரர்கள் பெரிய தனவந்தரா யிருந்தாலும், உத்தியோகஸ்தராயிருந்தாலும், வியாபாரிகளா யிருந்தாலும், கல்விமான்களாயிருந்தாலும் அவர்களை எவரும் மதிக்கமாட்டார்கள்; 'குடிகாரப் பேய்கள்' என்று இகழ்ந்தே பேசுவார்கள்.

குடிகாரர்களிடத்தில் நாணயம் இராதாதலால் அவர்களை எவரும் நம்பமாட்டார்கள்; அவர்களுக்குக் கடன் கொடுப் பதற்கும், பொருள்களை இரவல் கொடுப்பதற்கும் அஞ்சுவார் கள். அந்தக் குடிகாரர்கள் எவரிடத்திலாவது கடன் வாங் கினால் அதைத் திரும்பக் கொடுக்க மாட்டார்கள்; இரவல் வாங்கின பொருள்களையும் விற்று மதுபானத்திற்குச் செலவு செய்து விடுவார்கள்.

மேலும் குடிகாரர்களுக்குத் தெய்வபக்தியிராது; சத்திய மிராது; தெய்வத்துக்கென்று வைத்த பொருளையும் அவர்கள் மதுபானத்துக்குச் செலவு செய்துவிடுவார்கள்; எப்பொழு தும் பொய்யே பேசுவார்கள்; பெரியோரை மதிக்கமாட்டார் கள்; கெட்டவர் சிநேகத்தையே விரும்புவார்கள்.

குடிகாரர்களிடத்தில் உறுதியென்பதே யிராது; அவர் கள் குடிக்காமலிருக்குங் காலத்தில் தாங்கள் குடிவெறியால் செய்யும் அக்கிரமங்களை உணர்ந்து, 'இனிமேல் மதுபானம் செய்யலாகாது' என்று நினைத்துக்கொள்வார்கள்; குடிக்கும் நேரம் வந்தவுடன் அதை மறந்து கள்ளுக்கடையிலோ, சாரா யக்கடையிலோ போய்ப் புகுந்து கொள்வார்கள். பிறரிடம், 'இனிக் கள்ளுக் குடிப்பதில்லை' என்று சத்தியம் செய்வார் கள்; செய்த அன்றைக்கே கள்ளுக் கடைக்குப் போய் விடு வார்கள்.

உத்தியோகஸ்தர் மதுவைக் குடித்தால், தங்கள் வேலையைத் தாறுமாறாகச் செய்து உத்தியோகத்தை இழந்து விடுவர்; வியாபாரிகள் குடித்தால் அவர்களுடைய வர்த்தகம் அடியோடு கெட்டுவிடும்; தொழிற் சாலைகளில் யந்திரம் ஓட்டுவோர் குடித்தால் அபாயத்திற்குள்ளாவர்; வைத்தியர் குடித்தால் அவர் கெடுவதோடு பலரையும் ஆபத்துக் குள்ளாக்கி விடுவர். இவ்வாறே மற்ற தொழிற்காரர்களும் மதுபானம் செய்வார்களானால் அவர்களுடைய தொழில்களெல்லாம் சர்வ நாசமாகிவிடும்.

இன்னும் குடிகாரர்களுக்குத் தேகாரோக்கியமே இராது. மதுவானது தினந்தோறும் அவர்கள் வயிற்றுக்குட் சென்று இரைப்பையையும், இரத்தத்தையும் கெடுத்து அவர்களின் உடம்பில் எண்ணிறந்த வியாதிகளை உண்டாக்கிவிடும். அவர்கள் எப்பொழுதும் அஜீரணம், இளைப்பு முதலிய வியாதிகளுக்குட்பட்டு வருந்துவார்கள். அவர்கள் இவ்வாறு எப்பொழுதும் அறிவு மயங்கி வியாதி கொண்டவர்களா யிருப்பதனாலே அவர்களுக்கு நல்ல பிள்ளைகள் பிறக்கமாட்டார்கள்; வியாதியுள்ள பிள்ளைகளும், அறிவற்ற பிள்ளைகளும், மந்தமான பிள்ளைகளும், உடற்குறையான பிள்ளைகளுமே பிறப்பார்கள்.

குடிகாரர்களை நம்பியிருக்கும் அவன் குடும்பத்தார்க்கு எப்பொழுதும் துக்கமே விளைந்துகொண்டிருக்கும்; மகிழ்ச்சியென்பது எந்தநாளுமிராது.

இக்குடியினால் கூலிக்காரராகிய ஏழைகளும் கெடுகிறார்கள்; பணக்காரர்களும் கெடுகிறார்கள். இன்னும் குடிப்பழக்கத்தால் விளையும் கெடுதிகள் எண்ணிறந்தவை.


இவ்வகைக் காரணங்களாலேயே மதுபானம் மிகக் கொடிதென்று அறிவுடையோரால் கருதப்படுகிறது; நீதி நூல்களிலும் கண்டிக்கப் படுகிறது. எந்த மதமும் மதுபானத்தை ஒப்புக்கொள்வதில்லை.

ஆயினும், உலகத்தில் பெரும்பான்மையான மனிதர் இந்த மதுபானத்தைப் பழகிக்கெடுகிறார்கள்; சிலர் வெளிக்கு மதுபானம் செய்யாதவர்கள்போன்று நடித்து இரகசியமாகச் சாராய வகைகளைக் குடித்து அதை மறக்கப் பிரயாசையெடுத்துச் சங்கடப்படுகிறார்கள். இந்தக் குடியினால் எத்தனையோ நாடுகள் பாழாகின்றன; எத்தனையோ ஊர்கள் கெடுகின்றன; எத்தனையோ குடும்பங்கள் இருந்தவிடம் தெரியாமல் போகின்றன. இதன் கெடுதியை உணர்ந்தே அமெரிக்கா முதலிய இடங்களில் உள்ள அறிஞர் மது விலக்குக்காக மிகவும் பிரயாசை யெடுத்து வருகின்றார்கள்; நம் தேசத்திலும் அதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், குடிகாரர்கள் இத்துர்ப்பழக்கத்தை விடுவது முடியாத காரியமாயிருக்கிறது. இந்த மதுபானம் தன்னோடு பழகியவரை எளிதில் விடுவதில்லை. ஆதலின், குடிப்பழக்க முள்ளவர்கள், அதனைச் சிறிது சிறிதாக நாளடைவிலாவது விட்டுத்தொலைப்பதற்கும், குடிக்காமலிருப்பவர்கள் அதைப் பழகிக்கொள்ளாம லிருப்பதற்கும் ஒவ்வொருவரும் தக்க முயற்சியெடுத்துக்கொள்வது நலம். மதுபானப் பழக்கம் ஒழியுமானால் நம் நாட்டிற்கு மிக்க மேன்மையுண்டு.

19. சீனாவின் அற்புத பீங்கான் கோபுரம்

சீனர்கள் கைத்தொழில்களில் மிகவும் சிறந்தவர்களென்பது உலகத்தார் எல்லோருக்கும் தெரியும். மற்ற தேசத்தார் நாகரிக மடையாதிருந்த சில நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே சீனர்கள் அற்புதமான கைத்தொழில்களிற் சிறப்புற்றோங்கி வந்திருக்கின்றார்கள்; எங்கும் நாகரிகம் மிகுந்த இக்காலத்திலோ அவர்கள் செய்யும் கைத்தொழில்களின் திறமை அளவிட்டுக் கூற முடியாததாயிருக்கின்றது. இவர்கள் இவ்வாறு கைவேலைப்பாட்டில் மிகச் சிறந்தவர்களா யிருப்பதனாலே இவர்களாற் செய்யப்படும் பலவகைப் பொருள்களும் மற்ற எல்லாத் தேசத்தார்களாலும் கொண்டாடப்பட்டு வருகின்றன; சீனர்கள் செய்யும் சிறுபிள்ளைகள் விளையாடும் விளையாட்டுப் பொருள்கள் முதல் பெரியவர்கள் உபயோகிக்கும் பொருள்கள்வரை எல்லாப் பொருள்களையும் பலரும் விலைகொடுத்து வாங்கி வீடுகளில் நிரப்புகின்றார்கள்; பலவகைப்பட்ட மனிதர்களுக்கும் ஏற்பட்டிருக்குப் பண்டிகைக்காலங்களில் சீனர்களால் செய்யப்படும் பட்டாஸ்-வெடிக்கட்டு-முதலிய விநோதப் பொருள் எங்கும் பலராலும் உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றால் சீனர்கள் மிகுந்த பொருளாதார நிலையைப் பெற்றிருக்கின்றார்கள்.

இந்தச் சீனர்கள் மனிதர்கள் பலவிதமாக உபயோகிக்கும் பலவகைப்பட்ட விசித்திரப் பொருள்களைப் பண்டைக் காலத்தில் செய்து வந்ததோடு சிற்ப வேலைகளிலும் சிறப்புற்று விளங்கி வந்திருக்கின்றார்கள்; மிக்க அற்புதம் பொருந்திய அநேகம் கட்டிட வேலைகளையும் செய்து புகழ்பெற்றிருக்கின்றார்கள்.



15, 16-ஆம் நூற்றுண்டுகளில் சீனு தேசத்திற்கு "நான்கின்" என்னும் நகரம் இராஜதானிப் பட்டினமாயிருந்தது. அந்நகரத்தை அக்காலத்தில் ஆட்சி புரிந்து வந்த சீன அரசர் பலர் அந்நகரத்தில் பெரிய மாளிகைகளையும், கோவில்

களையும், கோபுரங்களையும், இன்னும் பலவகைக் கட்டிடங்களையும் கட்டி வைத்திருந்தார்கள்; அவைகளெல்லாம் பார்ப்போர் அதிசயிக்கத்தக்க விசித்திரவேலைப்பாடுகளையும், விநோதக் காட்சிகளையும் உடையன. ஆதலால், அக்காலத்தில் அன்னியநாட்டார் பலரும் அந்த அற்புதங்களைப் பார்ப்பதற்குச் சீனவுக்குச் சென்றுகொண் டிருப்பார்கள். ஆனால் உலகத்திலேயே மிகவும் சிறப்புற்ற இந்த, "நான்கின்" நகரமானது இக்காலத்தில் முன்னிருந்த சிறப்போடு கூடியதாயில்லை. இது, முன்னிருந்த அளவில் நான்கிலொரு பாகத்தைத்தான் இப்பொழுது கொண்டிருக்கின்றது; இதிலிருந்த அற்புதமான கட்டிடங்களில் பலகட்டிடங்கள் இடிந்து சிதைந்துபோயிருக்கின்றன.

முற்காலத்தில் இந்நகரிலிருந்து சீனதேசத்தை ஆட்சி புரிந்துவந்த, "யங்லாப்" என்னும் சீன அரசன் தன்னுடைய தாயாரின் ஞாபகக் குறியாக ஒரு பிரமாண்டமான கோபுரத்தைக் கட்டி முடித்தான். இக்கட்டிட வேலை முடிவதற்கு இருபது வருடங்கள் சென்றன.

இக்கோபுரம் கண்ணடிச் சுவர்களால் கட்டப்பட்டது; கண்ணடியைப் பலவகை வேலைகளுக்கு உபயோகிக்கலாம் என்பது அக்காலத்தில் மேல் நாட்டாருக்குத் தெரியாது; அவ்வாறு தெரியாதிருக்கும்போதே சீனர்கள் கண்ணடியைக் கொண்டு இவ்வாறு கோபுரம் கட்டியிருக்கின்றார்கள்.

இந்தப் பீங்கான் கோபுரம் இருநூறு அடி உயரமுள்ளது; ஒன்பது மாடிகளைக் கொண்டது; ஒவ்வொரு மாடியும் கண்ணடிச் சுவர்களால் அமைக்கப்பட்டது. அதனால் அந்த மாடிகளில் உள்ளே இருக்கும் மனிதரின் உருவம் வெளியே இருப்பவர்க்கு நன்றாகத் தெரியும். மாடிகள் எல்லாம் மகா அற்புத வேலைப்பாடுகள் பொருந்தியவை; பார்ப்பவர்களின்

கண்களையும், மனத்தையும் கவரத்தக்கவை. இக்கோபுரத்தின் சிற்சில பாகங்கள் தங்கமுலாமும், வெள்ளிமுலாமும் பூசப் பட்டும், வேறு பல வர்ணங்கள் அமைக்கப்பட்டும் அலங்கார மான சித்திர வேலைகள் செய்யப்பட்டிருந்தன; இக்கோபுரத் திலுள்ள ஒன்பது மாடிகளில் ஒவ்வொன்றும் எட்டு மூலைச் சதுரமாய் அமைந்தது. மேல்மாடியிலிருந்து கீழ்மாடிவரை ஒவ் வொன்றிலும் இருப்புச் சங்கிலிகள் கோத்துத் தொங்கவிடப் பட்டு அச்சங்கிலிகளின் நுனிகளில் வெண்கல மணிகள் கட் டித் தொங்கவிடப்பட்டிருந்தன. இந்தக் கோபுரத்தின் உச்சி யில் பித்தளை மணியொன்று கட்டப்பட்டிருந்தது. இதன் உச் சியிலுள்ள முதல் மாடியில் பெரிய இரண்டு பித்தளைப் பாத்தி ரங்கள் வைக்கப்பட்டிருந்தன; இவற்றில் விலையேறப்பெற்ற பட்டாடைகளும், ஆபரணங்களும், சில விளைபொருள்களும், கையால் எழுதப்பெற்ற சில சாசனங்களும் வைக்கப்பட்டிருந் தன. சீன தேசத்துக்குத் தீங்கு வாராமல் அதனைத் தடுக்கும் பொருட்டே இவை அக்காலத்திலுள்ளவர்களால் அங்கே வைக்கப் பட்டனவென்று சிலர் நினைக்கின்றார்கள்.

இந்தக் கண்ணாடிக் கோபுரமானது இவ்வளவு விசித்திர வேலைப்பாடுகளுடன் அமைந்திருப்பதால் இராக்காலங்களில் நிலவு வெளிச்சத்தினாலும், விளக்கு வெளிச்சத்தாலும் மிகுந்த அற்புதக் காட்சியுடையதாய் விளங்கும். கண்ணாடியின் உப யோகமே மேல் நாட்டில் தெரியாமலிருந்த காலத்திலும், நாக ரிகம் பரவாதிருந்த காலத்திலும் இக்கோபுரம் கண்ணாடியால் கட்டப்பட்டிருந்த படியால் அக்காலத்திலிருந்த பலதேசத்து மனிதர்களுக்கும் பெரிய ஆச்சரியத்தை விளைவித்துக் கொண் டிருந்தது; பலரும் இக்கோபுரத்தை, "உலக அற்புதங்களில் ஒன்று" என்று புகழ்ந்து கொண்டாடி வந்தார்கள். அநேகர்

இந்த அதிசயக் கோபுரத்தைப் பார்ப்பதற்குச் சீனதேசத்திற்கு யாத்திரை போய்க்கொண்டிருந்தார்கள்.

இக்கோபுரம் இவ்வாறு மிக்க வேலைப்பாடுள்ளதா யிருந்தும், பலரும் பார்த்து அதிசயித்துக் கொண்டாடத் தக்கதா யிருந்தும், எப்பொழுதும் நிலைத்திருக்கக்கூடிய உறுதிபெற்றிருந்தும் மத்தியகாலத்தில் மறைந்து போயிற்று: 1853-ஆம் ஆண்டில் சீனதேசத்தில் வரிகொடா இயக்கத்தில் சேர்ந்த ஜனங்களால் நேர்ந்த பெருங் கலகத்தில் அந்தக்கலகக்காரரால் இஃது இடிக்கப்பட்டு அழிந்துபோயிற்று. கலகவெறியானது இதன் அருமையை உணரவில்லை. மனிதர் கோபத்தால் எப்பேர்ப்பட்ட நன்மையையும் ஒழித்துவிடுவது இயல்பாயிருக்கின்றது. இந்த அற்புதப் பீங்கான் கோபுரம் இக்காலத்தில் நிலைபெற்றிருக்குமானால் மனிதரின் கைத்தொழில் ஞான விருத்திக்கு மிகவும் அனுகூலமாயிருக்கும்.

20. உழவு.

'உழவு' என்பது மனிதர் பூமியை உழுது பயிரிட்டு அதில் கிடைக்கும் பலனைக்கொண்டு வாழ்வதாம். மனிதர் உலகத்தில் பொருள்தேடி வாழ்வதற்குப் பயிர்த் தொழில், வியாபாரம், கைத்தொழில், உத்தியோகம் முதலிய பல தொழில்கள் ஏற்பட்டிருக்கின்றன; எனினும் அவற்றுள் உழவுத் தொழிலே மிகவும் சிறந்தது. ஏனெனில், வியாபாரத்தில் அதிகப் பொருள் முதல் வைத்துத் தந்திரமாக வர்த்தகம் செய்பவர்களுக்குத்தான் மிகுந்த இலாபங் கிடைக்கும்; குறைந்த முதல் வைத்து வியாபாரம் செய்யும் ஏழைகளுக்கு அதிக இலாபங் கிடைக்காது; குறைந்த வருமானமே கிடைக்

கும்; கைத் தொழில் செய்வோர் நாள் முழுதும் வேலை செய்தாலும் அவர்க்குச் சொற்பப் பொருளே கூலியாகக் கிடைக்கும்; அதனால் அவர்கள் ஜீவனத்தை மாத்திரம் நடத்திக் கொண்டு போகலாமே தவிர மிகுந்த பொருள் சேர்த்தல் முடியாது. உத்தியோகம் செய்வதில் உயர்ந்த சம்பளத்தி லிருப் போருக்கே கொஞ்சம் பொருள் மீதிப்படும்; மற்றவர்களுக்கு ஜீவனத்திற்கு வேண்டிய அளவு பொருளே கிடைக்கும்; அவர்களுள்ளும் சிலருக்குக் குடும்பச் செலவிற்குப் போதுமான பொருளும் கிடைக்காது; இன்னும் உத்தியோகம் பிறர்க்கடங்கி ஏவல் கேட்டு மனிதர் சுயேச்சையிழந்து செய்யுந் தொழிலாம். உழவுத் தொழிலோ இவைகளைப் போன்றதன்று; அரசர்க்குப் பகுதியை மட்டும் செலுத்திவிட்டுப் பிறர்க்கு அடங்கி நடக்கவேண்டிய அவசியமின்றிச் சுயேச்யாகச் செய்யக்கூடிய தொழில்; மிகுந்த வருமானத்தைத் தரக்கூடியது; பலர்க்கும் உபகாரம் செய்யக்கூடியது.

ஒரு தானியத்தை உற்பத்திசெய்தால் அதிலிருந்து நூற்றுக் கணக்கான தானியங்கள் விளைகின்றன. ஆதலின் பயிர்த் தொழிலைப்போல் மனிதர்க்கு மிகுந்த இலாபந் தரத்தக்க தொழில் வேறெதுவுமில்லை; ஏழைகளும் விவசாயத்தில் பாடுபட்டால் அதிக வருமானத்தை அடையலாம். மனிதர் உயிருடன் வாழ்வதற் குதவியாயிருக்கும் உணவுப் பொருள்கள் முழுவதும் உழவுத்தொழிலில் இருந்து விளைவதால் மற்ற தொழில்களைச் செய்யும் எல்லோரும் உழவுத் தொழில் செய்வோருடைய உதவியைப்பெற்றே வாழ்ந்து வருகின்றனர்; இன்னும் விவசாயம் செய்வோர் தானியங்களை நிலத்தில் விதைப்பதிலிருந்து அவை முளைத்துப் பயிராய் விளைந்து அவர்களால் வீட்டில் கொண்டுவந்து சேர்க்கப்பட்டுச் செலவாகித் தீரும் வரையில் எறும்பு, வண்டு முதலிய பல சிறு ஜங்

துக்களும், பறவைகளும், மிருகங்களும் விதைகளையும், முளை களையும், பயிர்களையும், கதிர்களையும், தானியங்களையும் தின்று ஜீவிக்கின்றன; இன்னும் யாசகர், துறவிகள், வித்வான்கள், பிச்சைக்காரர், விருந்தினர், சுற்றத்தார் முதலியவர்க ளெல் லோரும் பயிர்த்தொழில் செய்வோர் கொடுக்கும் உணவைக் கொண்டே உயிர் பிழைத்திருக்கின்றனர்; தேவபூசனைகளும், ஆலயச் சிறப்புக்களும் விவசாயிகளின் உதவிபெற்றே நடந்து வருகின்றன; ஆதலின் பயிர்த்தொழில் செய்வோர் உலக முழுவதுக்குமே ஜீவாதாரமா யிருக்கின்றுர்கள்; உழவுத் தொழிலைச் செய்வோர் அதனைச் செய்யாதிருந்து விட்டால் உலகத்திலுள்ளவர்கள் உணவு பெற்றுப் பிழைத்திருப்பது மிகவும் அரிதாகும்; ஒரு மனிதன், எவ்வளவு கல்வியைக் கற் றிருந்தாலும், எந்தத் தொழிலில் வல்லவனுயிருந்தாலும் விவ சாயி கொடுக்கும் உணவுப்பொருளை வாங்கி யுண்டுதான் ஜீவிக்க வேண்டும்; அதனுலேயே, "ஓதுவாரெல்லாம் உழு வான் தலைக்கடையில்'' என்ற பழமொழியும் வழங்கி வரு கின்றது.

இன்னும் உழவுத் தொழில் செய்வோரிடத்தில் மனிதர் ஜீவிப்பதற் குதவியான எல்லாப் பொருள்களும் உற்பத்தியாவ தால் அவர்கள் எந்தப் பொருளையும் பிறரிடம் யாசிக்க மாட் டார்கள்; மற்றவர்க்கு வேண்டிய ஒவ்வொரு பொருளையும் அவர்களே கொடுப்பார்கள். மனிதர் உணவுண்டு உடலையும், உயிரையும் நிலைக்கச்செய்து கொண்டபின்பே தங்கள் தங்க ளுக்கேற்பட்ட தொழில்களை நடத்தவேண்டியவர்களா யிருப் பதால் அவர்களுக்கு உணவளிக்கும் உழவுத் தொழில் இல்லாவிடில் உலகத்தில் எந்தத் தொழிலுமே நடைபெற மாட்டாது.

இன்னும் அரசருடைய செங்கோலும் உழவுத் தொழி லின் உதவியைக்கொண்டே நடைபெற்று வருகின்றது; பயிர்த்தொழில் செய்வோர் விளைவித்துப் பகுதியாகக் கொடுக் கும் பொருள்களாலேயே அரசருடைய தானியக் களஞ்சியங் களும், திரவியச் சாலைகளும் நிறைந்திருக்கின்றன; அப் பொருள்களைக்கொண்டே இராஜ காரியங்கள் செவ்வையாக நடந்து வருகின்றன; அரசர் தான தர்மங்களைச் செய்து வரு கின்றார்கள். உழவுத் தொழில் செய்யும் குடிகள் இல்லாவிடில் அரசருக்கு எவ்வகைச் சிறப்புமில்லை. இதனாலேயே ஔவைப் பிராட்டியார், "வரப்புயர நீர் உயரும்; நீர் உயர நிலம் உய ரும்; நிலம் உயரக் குடி உயரும்; குடி உயரக் கோன்-அரசன்- உயரும்" என்று கூறினாள். இவ்வாறு உலகம் முழுவதுக் குமே பயிர்த் தொழில் ஜீவாதாரமா யிருப்பதால், "உழவுத் தொழில் புரிவோர் உலகத்தாராகிய தேருக்கு அச்சாணி யாவார்" என்று திருவள்ளுவரும் கூறுகின்றார். இன்னும் உழவுத் தொழில் பிறருடைய உதவியை நாடாத சுயேச்சைத் தொழிலா யிருப்பதனாலேயே, "எல்லோரும் உணவுண்டு ஜீவிக்கும்படி பயிர்த்தொழில் செய்து வாழ்வோரே கௌரவத் தோடு வாழ்கின்றவர்; மற்றவர் பிறரை வணங்கி அவர் உதவிபெற்று வாழ்கின்றவர்" என்றும் கூறி யிருக்கின்றார். இன்னும் ஔவை, "தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது" என்றும், "மேழிச்செல்வம் கோழை படாது" என் றும், "நெற்பயிர் விளை" என்றும் கூறி யிருக்கின்றாள்.

இவ்வாறு உலக முழுவதையுமே பாதுகாத்து வருகின்ற பயிர்த் தொழிலை எந்த நாடு சிரத்தையுடன் செய்து வருகின் றதோ அந்த நாடு எப்பொழுதும் செல்வம் பொருந்திய நாடாய் விளங்கும்; விவசாயத்தைத் தளர்ச்சியின்றிச் செய்து வருவோருக்கு எப்பொழுதும் பஞ்சமே கிடையாது; அவர்

கள் பசிப்பிணியால் வருந்தவே மாட்டார்கள்; மழையில்லாமல் உலகம் வறண்டுபோன காலத்திலும் அவர்கள் கிணற்று நீரையும், ஊற்று நீரையும் இறைத்துப் பயிர்களை விளைவித்து உணவு தேடிக் கஷ்டமின்றி வாழ்வார்கள்; உழவுத் தொழில் செய்யாமல் சோம்பி யிருப்பவர்களே உணவின்றி வருந்துவார்கள்; நிலமிருந்தும் அதை உழுது பயிர்த்தொழில் செய்யாமலிருப்பவர்க்கே தரித்திரம் வரும்; "பயிர்த்தொழில் செய்யாமல் சோம்பியிருந்து, 'நாங்கள் தரித்திரத்தால் வாடுகின்றோம்' என்று வருந்துவோரைப் பார்த்து அந்நிலம் 'உங்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்கும் நானிருந்தும் நீங்கள் என்னை உழுது நற்பயன் அடையாமல் வருந்துகின்றீர்களே; உங்களுடைய பேதமையை நான் என்னென்று சொல்வேன்' என்று நகைக்கும்" என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

இவ்வாறு பயிர்த்தொழில் பல வகைகளிலும் சிறந்ததாயிருந்தும், மனிதரின் தரித்திரத்தைப் போக்கக் கூடியதாயிருந்தும், அவர்களைக் காப்பாற்றக்கூடியதா யிருந்தும் இக்காலத்தில் நமது நாட்டிலுள்ளவர்களிற் பலர் அது தேகப் பிரயாசையான தொழிலென்றும் நாகரீகமற்றதென்றும், மனிதரின் சுகத்தைக் கெடுப்பதென்றும் கூறி அதைக் கைவிட்டு உத்தியோகம் முதலிய இடம்பமான தொழில்களை விரும்பி நகரங்களை அடைந்து ஏதோ கிடைப்பதைக்கொண்டு ஜீவித்து வருகின்றார்கள்; பயிர்த் தொழில் செய்வோரும் விவசாய முறைகளை நன்றாகத் தெரிந்துகொண்டு மிகுந்த பலன் பெறத் தக்க வகையில் அதைச் செய்யாமல் கிரமந் தவறிச் செய்து சொற்ப பலனை அடைந்து வருகின்றார்கள்; விவசாயத்துக்குச் செலவு செய்த பொருளுக்கு ஈடான பலன்கூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை; அவர்கள் நிலத்திற் கிடைக்கும் சொற்ப பலனை வரிக்குச் செலுத்திவிட்டு ஜீவனத்துக்குக்

கஷ்டப்படுகின்றார்கள். இக்காரணங்களாலேயே நம் நாட்டில் எங்கும் ஏராளமான நிலங்கள் தரிசுகளாய்க் கிடக்கின்றன; எப்பொழுதும் தரித்திரமே குடிகொண்டிருக்கின்றது.

நம் நாட்டினர் தரித்திரமின்றி வாழவேண்டுமானால் பலரும் விவசாயத் தொழிலைக் கைக்கொள்ள வேண்டும். விவசாய விருத்திக்காக அறிவுடையார்கள் பற்பல விடங்களில் விவசாய சங்கங்களை ஏற்படுத்தி யிருக்கின்றார்கள்; கவர்ன்மெண்டாரும் விவசாய இலாகா ஏற்படுத்திப் பயிர்த்தொழில் செய்வோருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றார்கள்; விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களால் ஆங்காங்கே உள்ள விவசாயிகளுக்கு விவசாய முறைகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன; இவற்றின்மூலம் நாம் அதிக இலாபம் வரத்தக்க விவசாயமுறைகளை நன்கு தெரிந்துகொள்ள வேண்டும்; மேல்நாட்டு விவசாய முறைகள் அதிகச்செலவு பிடிக்கக்கூடியவைகளாயிருக்கின்றன; எனினும் அவற்றில் சொற்பச் செலவில் அதிகப் பலன் கிடைக்கக்கூடிய முறைகளை அனுபோகமுள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்; நம் நாட்டு விவசாய முறைகளிலும் நற்பயன் அடையத்தக்க முறைகளைத் தெரிந்த அனுபோகசாலிகள் பலர் இருக்கின்றனர்: தஞ்சாவூர் ஜில்லாவில் நெற்பயிர் செய்யும் முறைகள் தெரிந்தவர்கள் இருக்கின்றார்கள்; மதுரை, இராமநாதபுரம், சேலம் முதலிய ஜில்லாக்களில் புன்செய்ப் பயிர் செய்யும் முறைகள் நன்றாகத் தெரிந்தவர்கள் இருக்கின்றார்கள்; இப்பேர்ப்பட்டவர்களிடத்தில் நம்நாட்டு விவசாய முறைகளிலும் நல்ல பலன் பெறத்தக்க முறைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும்; விவசாய நூல்களை நன்றாகப் படிக்கவேண்டும்.

புன்செய்ப்பயிர் செய்வோர் நிலங்களிலுள்ள மரம் செடிகளை வெட்டி நிலங்களைப் பண்படுத்தி உழுது புழுதியாக்க வேண்டும்; புழுதி நன்றாய்க் காயும்படி பலமுறை மடக்கி மடக்கி உழவேண்டும்; புழுதி எவ்வளவுக் கெவ்வளவு காய்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நிலங்களில் விசேஷ பலன்கிடைக்கும்; புழுதி நன்றாகக் காய்ந்தால் எருவிடாமலே நிலம் நல்ல பலனைத்தரும்; "ஒரு நிலத்தில் ஒரு பலப்புழுதி காற்பலமாகக் காய்ந்தால் அந்நிலம் எருவில்லாமலே மிகுந்த பலனைக் கொடுக்கும்" என்று திருவள்ளுவர் கூறியிருக்கின்றார். இவ்வாறு புன்செய் நிலங்களைப் புழுதிகாய உழுது அவற்றில் எருவும் இட்டுப் புன்செய்த் தானியப் பயிர் செய்யவேண்டும்.

நன்செய் நிலங்களில் தண்ணீர் பாய்ச்சிப் புற் பூண்டுகள் அறும்படி பன்முறை நன்றாக உழுது தொளி - சேறு - ஆக்க வேண்டும்; எரு, தழை முதலியவற்றை உரமாக இட வேண்டும்; பழந் தொளியானபின் நெற்பயிர் முதலிய நன்செய்ப் பயிர்களைச் செய்யவேண்டும். நிலத்தின் வளத்துக்குத் தக்கபடி விதைகளை நெருக்கமாக விதைத்தல், நெருக்கமில்லாதிருக்கும்படி விதைத்தல், நாற்றுக்களை ஒற்றை நாற்று நடுதல், சேர்த்து நடுதல், நெருக்கமாக நடுதல், நெருக்கமில்லாமல் நடுதல் ஆகிய முறைகளைச் சமயத்துக்குத் தக்கபடி தெரிந்து செய்ய வேண்டும்.

ஒவ்வொரு பயிரையும் செய்வதற்குப் பட்டங்கள்-காலங்கள் ஏற்பட்டிருக்கின்றன; அந்தப் பட்டங்களைத் தெரிந்து எந்தப் பட்டத்தில் எந்தப் பயிரை உற்பத்தி செய்யலாமோ அந்தப் பயிரைச் செய்ய வேண்டும்; "பருவத்தே பயிர்செய்" என்று ஔவையார் கூறியிருக்கின்றார்.

நிலத்தில் பயிரிட்டபின் அப் பயிருக்குப் பறவை, மிருகம் முதலியவற்றால் சேதம் வாராதபடி அதைக் காத்துவர

வேண்டும்; அதற்குத் தட்டில்லாமல் தண்ணீர் பாய்ச்சவேண்டும்; களை யெடுக்கவேண்டும்; "பயிருக்கு நன்றாய் உழுவதைக் காட்டினும் எருவிடுதல் நல்லது; களையெடுத்தல் அதைக்காட்டினும் நல்லது; நீர் பாய்ச்சுதல் அதிலும் சிறந்தது; காவல் புரிதல் அதைக் காட்டினும் நல்லது" என்று நாயனார் கூறியிருக்கின்றார்.

இன்னும் நிலத்தில் பயிர்ஏறியபின் அடிக்கடி அங்கேபோய் அதைப் பார்க்கவேண்டும்; அவ்வாறு பார்க்காவிடில் விளைவு குறையும். விவசாயம் செய்வோர், எருவைச் சேகரிப்பதற்கு ஆடுகளையும், மாடுகளையும் விருத்திசெய்து வைத்துக்கொள்ள வேண்டும்; உழவுக்கு எருதுகளை நன்றாகக் காப்பாற்றி வைத்துக்கொள்ள வேண்டும்; உழவுக் கருவிகளாகிய கலப்பை முதலியவற்றைச் சேகரித்து எப்பொழுதும் ஆயத்தமாக வைத்திருக்க வேண்டும்; பயிரிடும் வித்துக்களைப் பொன்னைப்போல் போற்றி வைத்திருக்க வேண்டும்; பண்ணைத் தொழில் செய்யும் வேலையாட்களை அன்புடன் ஆதரித்து வரவேண்டும்.

இம் முறைகளைக் கைக்கொண்டு மனிதர் உழவுத் தொழில்செய்து வந்தால் தங்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் நில வருமானத்திலிருந்து பெற்றுச் சுகமாக வாழலாம்; நம் நாடு செல்வம் பெருகிய நாடாக விளங்கும்.

---

21. அச்சுத் தொழில்.

'அச்சு' என்பது - அடையாளம். மனிதனுடைய வடிவத்தையோ, மரம் செடி கொடி கட்டிடம் முதலியவற்றின் வடிவத்தையோ, எழுத்துக்களின் வடிவத்தையோ

உள்ளபடி ஒன்றில் பதிப்பித்துக்காட்டும் தொழிலுக்கு அச்சுத்தொழில் என்று பெயர். இந்த அச்சுத் தொழிலில் பல வகைகள் அடங்கியிருப்பினும் எழுத்துக்களைப் பதிப்பிக்கும் தொழிலே மிகவும் சிறந்ததாம். மனிதருடைய உள்ளக் குறிப்புக்களையும், மனிதர் நூதனமாகக் கண்டுபிடிக்கும் வித்தைகளையும், மனித வாழ்க்கைக்கு உபயோகமாகும் தொழில்களையும், நீதிகளையும், பற்பல சரித்திரங்களையும், கணக்கு முதலியவைகளையும் எப்போதும் நிலைபெற்றிருக்கும்படி எழுதி வைப்பதற்கு உரியவை எழுத்துக்களே. ஆதலால், எழுத்துக்களைப் பதிப்பிக்குந்தொழில் எல்லாவற்றினும் சிறந்ததாயிற்று. அதனுல் அச்சுத்தொழில் என்பது பெரும்பான்மையும் எழுத்துக்களைப் பதிப்பிக்கும் தொழிலுக்கே வழங்கி வருகின்றது.

இந்த அச்சுத் தொழிலானது எல்லாத் தேசங்களிலும் உள்ள எல்லா மனிதர்களுக்கும் மிகவும் அவசியமானது. இந்தத் தொழிலைக் கொண்டே எல்லா நாடுகளும் பற்பல வித்தைகளிலும், தொழில்களிலும் விருத்தியடைந்திருக்கின்றன.

முதலில் மனிதர் தங்கள் உள்ளக் குறிப்புக்களை வாய்ப்பேச்சினுல் வெளிப்படுத்தி வந்தார்கள். அப்பேச்சுக்கள் சில நாழிகைகள் வரையிலோ, சிலதினங்கள் வரையிலோ இருந்து மறைந்துவிடக் கூடியனவாயிருந்தன. அதனுல் மனிதரின் அறிவிலிருந்து உண்டாகும் வித்தை முதலியவற்றை உலகத்தில் எப்பொழுதும் நிலைபெற்றிருக்கும்படிசெய்ய ஏதுவில்லாமலிருந்தது. பின் அவற்றை நிலைத்திருக்கும்படி எழுதி வைக்க மனிதர் எழுத்துக்களைக் கண்டுபிடிக்க ஆரம்பித்தார்கள். எழுத்துக்களை எழுதும் பழக்கம் முதல்முதலாக மத்தியதரைக் கடலின் கிழக்கு முனையிலுள்ள சின்ன ஆசியாவில் உண்டாயிற்றென்று ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிருர்கள்.

முதலில் சீனம், எகிப்து, சால்டேயா முதலிய தேசத்தார் ஒவ்வொரு பொருளுக்கு ஒவ்வொரு அடையாளமிட்டு அந்த அடையாளங்களை எழுத்துக்களாகக் கொண்டு அவற்றின் மூலம் பொருள்களைத் தெரிவித்து வந்தார்கள். பின் நாள் செல்லச் செல்ல அந்த அடையாளங்கள் சத்தத்தைக் குறிக்கும் எழுத்துக்களாகப் பிற்காலத்தவர்களால் உபயோகப்படுத்தப்பட்டன. அதன்மேல் ஜர்மன், ருஷியன், உரோமன், தேவநாகரி, கிரீக், தமிழ் முதலிய மொழிகளில் அந்த அந்த மொழிகளைப் பேசுகின்றவர்களால் பற்பல ஒலிகளைக் காட்டும் பற்பல எழுத்துக்களும், எழுத்துக்களின் பேதங்களும், அந்த எழுத்துக்களால் ஆகும் பதங்களும், பதங்களால் ஆகும் வாக்கியத் தொடர்களும், அவற்றிற்கு இலக்கணங்களும், இன்ன இன்ன வார்த்தை இன்ன இன்ன அர்த்தத்தைத் தருமென்பதும் உண்டாக்கப்பட்டன. மேற்குத் தேசத்து எழுத்து வரிசைகளெல்லாம் டயர், சிதோன், கார்தேச், மார்சாலிஸ் முதலிய பட்டணங்களை ஏற்படுத்திய, 'போனீஸியர்' என்னும் வர்த்தக வகுப்பினரால் உற்பத்தி செய்யப்பட்டதென்றும் இதை கிரேக்கர் நம்பியிருந்தார்களென்றும், இது உண்மையானதென்றும் ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள்.

இவ்வாறு உற்பத்தியான எழுத்துக்களை ஆங்காங்குள்ள மனிதர்கள் தங்கள் தங்களுக்கிசைந்தபடி முதலில் கற்களிலும், செப்பேடுகளிலும், தோல்களிலும், பலவிதமான இலைகளிலும், மண் ஓடுகளிலும், பனை ஓலைகளிலும் எழுதி வைத்து வந்தார்கள்: இந்தியாவில் கற்களிலும், செப்பேடுகளிலும் பனை ஓலைகளிலும் எழுதும் பழக்கம் ஏற்பட்டிருந்தது; கற்களில் எழுதுவோர் இருப்புளிகளைக்கொண்டு எழுத்துக்களைச் செதுக்குவார்கள்; செப்பேடுகளில் எழுதுவோர் இருப்பூசிகளைக்கொண்டு எழுதுவார்கள்; ஓலையில் எழுதுவோர் இரும்பி

ணல் செய்யப்பட்ட எழுத்தாணி யென்னும் கருவியால் எழுதுவார்கள். இவ்வாறு எழுதப்பட்ட சாசனங்களும், நூல்களும் இப்பொழுதும் காணப்படுகின்றன. 'இறையனார் அகப்பொருள்' என்னும் தமிழ் நூல் மூன்று செப்பேடுகளில் எழுதப்பட் டிருந்ததென்று அதன் உரையாசிரியர் கூறியிருக்கின்றார். மற்ற சில தேசத்தார்கள் இலைகளிலும், தோல்களிலும் சில இறகுகளைக்கொண்டு மையால் எழுத்துக்களை எழுதி வந்திருக்கின்றார்கள்; ஆப்பிரிக்காவின் வடபாகத்தில் உள்ளவர்கள் மண் ஓட்டில் எழுத்துக்களை எழுதும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் களிமண்ணால் ஓடுகள் செய்து அவற்றில் நூல்களை எழுதி அந்த ஓடுகளைச் சூளையிலிட்டுச் சுட்டு அடுக்கிவைத்துப் பாதுகாத்து வருவார்கள். இப்பேர்ப்பட்ட ஓடுகள் சில நூற்றாண்டுகளுக்கு முன்னே ஆப்பிரிக்காவின் வடபாகத்தில் உள்ள, 'அலெக்ஸாண்ட்ரியா' வில் இருந்த ஒரு கல்விச் சங்கமண்டபத்தில் இருந்தன.

இவ்வாறு நூல்கள் எழுதப்பட்டு வந்த காலத்திற்குப் பின் சணலினால் செய்யப்பட்ட, 'பாப்பீரஸ்' என்னும் காகிதத்தை எகிப்தியர் எழுதுவதற்கு உபயோகமாக உண்டாக்கினார்கள்; தோலினால் செய்யப்பட்டு மெழுகிட்ட, 'பார்ச்மென்ட்' என்னும் தோற்காகிதமும் சிலரால் உண்டாக்கப்பட்டது. இவற்றில் மனிதர் மையினாலும், இறகினாலும் எழுத்துக்களை எழுதிவந்தார்கள். பிறகு கந்தைத் துணிகளாலும், மரத்தாலும், வேறு பொருள்களாலும் பலவகைக் காகிதங்களும், பேனாக்கள் என்ற எழுதுகருவிகளும், மையும் மேல்நாடுகளில் பலவிடங்களில் உற்பத்தியாயின. இவ்வாறு பல சாதனங்கள் ஏற்பட்டபின் எல்லாத் தேசங்களிலும் உள்ள மனிதர்களும் பலவகைக் காகிதங்களில் எழுதத்

தொடங்கினார்கள்; எழுத்து வேலைகள் மிகுதியாக எங்கும் விருத்தியாயின.

இப்படி விருத்தியடைந்தாலும் நூல்களை எழுதி வைக்கும் தொழிலை மாத்திரம் கொண்டு கல்வி விருத்தியோ, நூல்கள் எங்கும் பரவுவதோ உண்டாவதற்கு ஏதுவில்லாமலிருந்து வந்தது. காகித எழுத்துக்கள் உண்டாவதற்கு முன் எங்கும் கல்வி விருத்தி மிகக் குறைவாயிருந்து வந்தது. ஏனென்றால், கல்லில் எழுதப்பட்டவை இருந்த இடத்திலேயே அசையாமலிருக்கும்; ஓலை முதலியவற்றில் ஒருவன் ஒரு நூலை எழுதுவதென்றால் அதற்குப் பல நாட்கள் செல்லும்; அப்படிப் பிரயாசைப்பட்டு எழுதிய நூல்கள் சிலரிடத்தில் மாத்திரந்தான் அருமையாக இருக்கும்; அவர்களும் பிறர் எழுதிக் கொள்ளும்படி அவற்றை எவரிடத்தும் கொடுக்க மாட்டார்கள்; யாரேனும் அதிகப்பணம் கொடுத்தால் அவர்களுக்கு மாத்திரம் கொடுப்பார்கள். இக்காரணங்களால் ஏடுகளில் எழுதப்பட்ட நூல்கள் எங்கோ ஒவ்வொன்றுதான் இருக்கும்; அவற்றைக் கொண்டுதான் ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கல்வி போதித்து வருவார்கள்; சிலர் அருமையாக நூற்பிரசங்கம் செய்து வருவார்கள். ஆதலின் செல்வமுடைய சிலரும், முயற்சியுள்ள சிலரும் மாத்திரம் கல்வி கற்று வருவார்கள்; காகித எழுத்துக்கள் விருத்தி யடைந்த பின் நூல்களைச் சற்று அதிகமாகக் காப்பி செய்து கொள்வதற்குமாத்திரம் சௌகரியம் ஏற்பட்டது; கல்வியோ, தொழில்களோ பூரணமாக எங்கும் பரவுதற்கு அனுகூலம் ஏற்படவில்லை.

இவ்வாறு கல்வி விருத்தியில்லாமல் உலகம் இடர்ப்பட்டு வந்த காலத்தில் எழுத்துக்களை அச்சிற் பதிப்பிக்கும்

அரிய தொழில் சிறந்த அறிவாளிகளால் கண்டு பிடிக்கப்பட்டது. இந்தத் தொழில் கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் உலகமெங்கும் கல்விப் பிரகாசம் பரவலாயிற்று; ஞான சூரியன் உதயமாயிற்று.

ஆனால், எழுத்தின் வடிவத்தையோ, வேறு வடிவத்தையோ அச்சிடும் தொழிலை முதலிற் கண்டு பிடித்தவர் இன்னார்தாமென்று துணிந்துகூற உறுதியான ஆதாரமொன்றும் ஏற்படவில்லை; கிறிஸ்து அப்தத்திற்கு முந்தியே பாரத நாட்டில் உருவங்கள் பதிக்கப்பெற்ற நாணயங்கள் இருந்தனவென்பது தெரிகிறதென்று, டீ. ஆர். பந்தார்கார் அவர்கள் செய்த பண்டைக்கால நாணயங்களைப்பற்றிய பிரசங்கம் 68-69-ல் கூறுகின்றார்கள். இந்த ஆராய்ச்சியைக் கொண்டு மேல் நாடுகள் நாகரிகமடைவதற்கு முந்தியே பாரதநாட்டில் உருவங்களை அச்சிற் பதிக்கும் கருவிகள் இருந்தன வென்றும், இந்நாட்டிலிருந்த முன்னோர்கள் அக்கருவிகளை விருத்தி செய்து அச்சுத் தொழிலைத் தெரிந்து கொள்ளாமல் விட்டு விட்டார்களென்றும் துணிய இடமிருக்கின்றது.

இது நிற்க, இந்த அச்சுத்தொழிலைப் பிற்காலத்தில் முதன்முதலாகக் கண்டுபிடித்தவர் சீனர்களே யென்றும், கிறிஸ்து சகாப்தம் ஆறாவது நூற்றாண்டில் ஒருவகையான அச்சுவேலை சீனதேசத்தில் நடைபெறத் தொடங்கிற்றென்றும் ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள். இதைக்கொண்டு சீனதேசத்தாரே இத்தொழிலை முதலிற் கண்டுபிடித்தார்களென்று துணியலாம். சீனதேசத்தார் முதலில் மரப்பலகையில் எழுத்துக்களை உயரமாகச் செதுக்கி அவற்றின்மேல் மையிட்டு அப்பலகையைக் காகிதம் முதலியவற்றில் ஒற்றிப் பிரதி செய்துகொண்டு வந்தார்கள். இது, ஒரு புத்தகத்தின்

ஒரு பக்கத்திற்கு மட்டுமே உதவக்கூடியதா யிருந்தது. இந்த முறையைக்கொண்டு பல புத்தகங்களை எளிதாக அச்சிட்டு வெளிப்படுத்துதல் முடியாமலிருந்தது. சீனர்களின் அச்சு வேலை இதற்குமேல் விருத்தியடையவில்லை.

இந்த அச்சுத்தொழில் கி. பி. 1430-ஆம் ஆண்டு வரையில் ஐரோப்பியர்களுக்குத் தெரியாமலே யிருந்து வந்தது. இப்படியிருக்கும் காலத்தில், ஜெர்மன் தேசத்தைச் சேர்ந்த மேயென்ஸ் நகரத்தாரான, 'ஜான் கூடன்பெர்க்' என்னும் ஜெர்மானியராலும், ஹாலெண்டு தேசத்தைச் சார்ந்த ஹார்லெம்நகரில் இருந்த, 'லாரென்ஸ் கோஸ்டெர்' என்னும் உலாந்தாக்காரராலும் இத்தொழில் கண்டுபிடிக்கப்பட்டு விருத்திக்குக் கொண்டுவரப்பட்டது. 'லாரென்ஸ் கோஸ்டெர்' என்பவர் 1426-ஆம் ஆண்டில் இதைக் கண்டுபிடித்து விருத்தி செய்தாரென்று உலாந்தாக்காரர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். 'ஜான் கூடன்பெர்க்' என்பவர் 1438-ஆம் ஆண்டில் அத்தொழிலைக் கண்டுபிடித்து விருத்தி செய்தாரென்று ஜெர்மன்காரர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். இந்த இருவகையாரும் சொல்லும் வரலாறுகளில் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. எனினும், இவ்விருவரும் இத்தொழிலில் சம்பந்தப்பட் டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

'ஜான் கூடன்பெர்க்' என்பவர், ஒரு காலத்தில் தம் நகரத்தை விட்டு வெளியேறி ஹார்லெம் நகரில் வசித்து வந்தார். அப்போது லாரென்ஸ் கோஸ்டர் என்பவர் இவருக்கு நண்பரானார். அவர் ஒருநாள் லத்தீன் இலக்கணம் செதுக்கப்பட்டிருந்த ஒரு பலகையை இவருக்குக் காண்பித்தார். அதை இவர் பார்த்தவுடன் அச்சுத்தொழிலைக் கண்டு பிடிக்க வேண்டுமென்னும் விருப்பம் இவர் மனத்தில் உதித்தது.


அக்காலத்தில், 'ஆன்னெட்' என்னும் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள விரும்பியிருந்தார். அப்படியிருக்கும் போது இந்த, 'ஜான் கூடன்பெர்க்' தினந்தோறும் அந்த ஹார்லெம் நகருக்கருகிலுள்ள ஒரு சோலைக்குச் சென்று உல்லாசமாகப் பாடுவதும், தம் பெயரையும் தாம் கலியாணம் செய்ய எண்ணியிருந்த பெண்ணின் பெயரையும் மரப்பட்டைகளில் எழுதிப் பார்ப்பதுமா யிருந்து வந்தார். ஒருநாள் அவ்வழக்கப்படி ஒரு ஈரமான மரப்பட்டையில் அப்பெயர்களைச் செதுக்கி அப்பட்டையை ஒரு தோற்காகிதத்தால் சுற்றி வீட்டிற்கு எடுத்துக் கொண்டுவந்து வைத்திருந்தார். மறுநாள் அதைப் பிரித்துப் பார்த்தார். அந்தப் பட்டையிலிருந்த எழுத்துக்கள் தோற்காகிதத்தில் படிந்திருந்தன. அவ்வாறு படிந்திருந்ததை இவர் பார்த்தவுடன் இந்த முறையைக் கொண்டு அச்சுத்தொழில் செய்யலாமென்று மகிழ்ச்சியடைந்தார்.

அதன்மேல் இவர் பெரிய மரப்பலகைகளில் எழுத்துக்களைச் செதுக்கிக் கரிய நிறமுள்ள மையைத் தடவிக் காகிதங்களில் பதிப்பிக்க முயன்றார். பல வருடங்கள் வரை இம்முறையில் அச்சுத் தொழிலைப் பலவகைகளாகச் செய்து பார்த்தார்; முடிவில் ஒவ்வொரு எழுத்தையும் ஒவ்வொரு சிறு மரத்துண்டில் செதுக்கி அத்துண்டுகளை வார்த்தைகளுக்குத் தக்கபடி வரிசையாகச் சேர்த்து அச்சடித்தால் இத்தொழிலைச் சற்று எளிதாகச் செய்யலாமென்று தீர்மானித்தார். பின் இந்த முறையைப் பழக்கத்திற்குக் கொண்டுவந்தார். இதற்கு அதிக நாட்கள் சென்றன.

பிறகு இவர் ஸ்விட்ஸொர்லாந்து சென்று, எழுத்துக்கள் செதுக்கப்பட்ட மரத்துண்டுகளை வார்த்தைகளுக்குத் தக்க

படி சேர்த்து வரிவரியாக அமைத்து அவை விழுந்துவிடாத படி கயிற்றால் கட்டி ஒரு பக்கமாக்கிக் காகிதத்திற் பதிப்பித்துப்பார்த்தார். இஃதிவருக்கு மிகவும் திருப்திகரமாயிருந்தது. பிறகு இவர் இதைச் செய்வதற்குத் தொழிற்சாலையொன்று ஏற்படுத்த நினைத்தார். அதற்குத் தக்க பொருளில்லாமையால் அது முடியாமற் போயிற்று. அதனால் இவர் சில தொழிலாளிகளோடு சேர்ந்து வைர ஆபரணங்கள் செய்யும் தொழிற்சாலை யொன்று ஏற்படுத்தி அதில் வேலைசெய்து கொண்டு அச்சுத் தொழிலை விருத்தி செய்வதற்குத் தக்க ஆலோசனைகளைச் செய்துவந்தார். பிறகு அச்சுத் தொழிலைத் தாம் ஒருவரே செய்வது முடியாத காரியமென்று நினைத்து அத்தொழிலின் இரகசியத்தைத் தம் கூட்டாளிகளுக்குத் தெரிவித்தார். அவர்கள் இதைத் தெரிந்து கொண்டவுடன் இதனால் வரும் இலாபத்தையும், புகழையும் தாங்களே அடையக் கருதி, "நாங்கள் பணம் செலவிட்டு இத்தொழிலை நடத்துவோம்; வருமானத்தில் உமக்குப் பங்கு கொடுக்கமாட்டோம்; நீர் எங்களிடம் கூலியாளாக வேலை செய்துவரவேண்டும்" என்று ஜான் கூடன்பெர்க்கிடம் தெரிவித்தார்கள். எப்படியாவது அச்சுத் தொழில் விருத்தியடைய வேண்டுமென்று இவர் அதற்கிசைந்தார். பிறகு அச்சுத்தொழில் இவர்களால் நடைபெற்றது. அதில் நல்ல இலாபம் கிடைத்தது. அதனால் அச்சுத் தொழில் உரிமை ஜான்கூடன்பெர்க்குக்குப் பூரணமாக இல்லையென்பதைக் கோர்ட் மூலம் உறுதிப்படுத்த வேண்டுமென்று கூட்டாளிகள் அதைப்பற்றி இவர்மீது கோர்ட்டில் வழக்குத் தொடுத்தனர். அதில், அவர்களுக்கு விரோதமாகத் தீர்ப்புக்கிடைத்தது; அச்சுத்தொழில் உரிமை, 'ஜான் கூடன்பெர்க்' என்பவருக்குக் கிடைத்தது.

பின்னர் இவர், தம் சொந்த நகராகிய மேயென்ஸுக்குத் திரும்பி வந்தனர். வந்து, தாம் விரும்பியிருந்த பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டனர். ஆனால் இவருக்கு வறுமைத் துன்பமே அதிகரித்திருந்தது. அதனால் இவர் திரும்பவும் தம்மனைவியுடன் ஸ்விட்ஸொர்லாந்துக்குப் போய் அச்சியந்திரசாலை ஏற்படுத்தி விவிலிய நூல் முதலியவற்றை அச்சிட்டு வெளிப்படுத்தித் தொழில்நடத்திவந்தார். 1460-ம் ஆண்டில், 'பைபில்' என்னும் வேத புத்தகம் அச்சிடப் பட்டது.




ஜான்கூடன்பெர்க் இவ்வாறு அச்சுத்தொழில் நடத்தும்போது தொழிற்சாலையிலிருந்த வேலைக்காரர்கள் மீண்டும் இவருக்கு இடையூறு செய்தார்கள். அதனால் இவர் திரும்பவும் தம் நகருக்கு மீண்டு வந்தார். அங்கு வந்தவுடன்

ஹூஸ்டு, ஷோபெர் என்பவர்களுடன்சேர்ந்து பற்பல கிறிஸ்து மதநூல்களை அச்சியற்றி வெளிப்படுத்தினர். அங்கும் இவருக்குப் பலகஷ்டங்கள் ஏற்பட்டன. பின்னர், 'லூயி' என்னும் பிரான்சு அரசர் இவரைச் சிறிதுகாலம் ஆதரித்து வந்தார். அக்காலத்தில் இவர் புதிய கூட்டாளிகள் சிலரைச் சேர்த்து அச்சுத் தொழில் நடத்தி வந்தார். அவர்களும் இவரை வஞ்சிக்க நினைத்தார்கள். ஆனால் அது கைகூடவில்லை. பின்னர், இவர், தமது நகரத்தில் உண்டான குழப்பத்தினால் தம் மனைவியுடன் வெளியேறிப் புறநாடுகளிற் சென்று அலைந்துகொண்டிருந்தார். அக்காலத்தில், 'நாஸ்ஸோ' நாட்டின் அரசனால் ஆதரிக்கப்பட்டார். அவ்விடத்திலே இவர் முடிவுகாலம்வரை வாழ்ந்து கொண்டிருந்து அறுபத்தொன்பதாம் வயதில் மரணமாயினார்.

இவர் இறந்தபின் சில வருடங்களுக்குள் ஐரோப்பா கண்டத்தில் அச்சுத்தொழில் பரவலாயிற்று. கி. பி. 1475-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில், 'கென்ட்' என்னும் ஜில்லாவிலிருந்த, 'வில்லியம் காக்ஸ்டன்' என்பவர், வெஸ்டு மினிஸ்டரில் முதலாவதாக அச்சியக்திர சாலையொன்றை ஏற்படுத்தினார். இந்தத் தொழிற்சாலையில் முதன்முதலாக அச்சிடப்பட்டது சதுரங்க ஆட்டத்தைப்பற்றிய ஒரு சிறு நூலாகும்; இது, பிரிட்டிஷ் விநோதக்காட்சி சாலையில் வைக்கப்பட்டு இப்பொழுது மிருக்கிறது. இவர் தொழில் நடத்தியகாலத்தில் மரக்கட்டை எழுத்துக்களாலேயே அச்சுவேலை செய்யப்பட்டு வந்தது. ஆதலால் அக்காலத்தில் இத்தொழில் மெதுவாகவும், கஷ்டத்தோடும் செய்யப்பட்டுவந்தது. பின்னால் லோகஎழுத்துக்கள் வார்க்கும் முறைகள் கண்டபிடிக்கப் பட்டன. லோக எழுத்துக்கள் வார்க்கும் முறை, 'பாஸ்ட்' என்பவனாலும், அவன் மருமகனாலும் கண்டுபிடிக்கப்பட்டு விருத்தியாயின

என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். லோக எழுத்துக்களை உபயோகப்படுத்திய பிறகுதான் அச்சுத்தொழில் எளிதாக நிறைவேறி எங்கும் பரவலாயிற்று. பதினாறாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் அச்சுத்தொழில் உலாந்து, ஜர்மனி, இத்தாலி, இங்கிலாந்து முதலிய தேசங்களில் மிகவும் விருத்தியடைந்தன. நூறு வருஷங்களுக்கு முன்புதான் இத்தொழில் இந்தியாவுக்கு வந்தது.

இவ்வாறு அச்சுத்தொழில் எங்கும் பரவி இக்காலத்தில் பல வகைகளாக விருத்தி யடைந்திருக்கின்றது. பற்பல தேசங்களிலும் உள்ளவர்கள் தங்கள் தங்கள் மொழிகளில் புத்தகங்களையும், பத்திரிகைகளையும், துண்டுப் பிரசுரங்களையும் அச்சிட்டு வெளிப்படுத்தி வருகின்றார்கள்.



இக்காலத்தில் பெரும்பான்மையும் ஈய எழுத்துக்களும் சிறுபான்மை செம்பு முதலிய உலோகங்களாற் செய்யப்பட்ட எழுத்துக்களும் புத்தகங்கள் அச்சடிப்பதற்கு உபயோகிக்கப்பட்டு வருகின்றன; மரக்கட்டைகளில் தோண்டப்பட்ட பெரிய எழுத்துக்கள் பெரிய விளம்பரங்கள் அச்சடிக்க உபயோகப்பட்டு வருகின்றன; ஒருவகைக் கல்லில் அரபு எழுத்

துக்கள் செதுக்கப்பட்டு அரபு புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு அறையா கப் பல அறைகள் அமைக்கப்பட்ட (கேஸ்) என்னும் பேழை யில் எழுத்துக்கள் நிரப்பப்பட் டிருக்கும்; எழுத்துக்களை அடுக் கும் மனிதன் இடக்கையில் பகரவடிவமாகச் செய்யப்பட்ட 'ஸ்டிக்' என்னும் மரச் சட்டத்தையோ, பித்தளைச் சட்டத் தையோ பிடித்துக்கொண்டு வார்த்தைகள் அமையும்படி எழுத்துக்களை ஒவ்வொன்றாக வலக்கையால் எடுத்து வரி வரி யாக அடுக்கி, காலியென்னும் மரப் பலகையிலோ, பித்தளைப் பலகையிலோ எடுத்து வைத்துப் பக்கங்களாக்கி அவற்றை, 'செஸ்' என்னும் இரும்புச் சட்டங்களாற் செய்யப்பட்ட கருவியிற் சேர்த்து மரத்துண்டுகளை இடை வெளிகளில் வைத்து முடுக்கி, 'பிரஸ்' என்னும் அச்சியந்திரத்தில் வைத்து விடுவான்; ஒருவன் அதன்மேல் மையைத் தடவுவான்; மற் றொருவன் காகிதம் வைக்கும் சட்டத்தில் காகிதத்தை எடுத்து வைத்து எழுத்துக்களின்மேல் படியும்படி செய்து அவற்றை அழுத்தும் இருப்புப் பலகைக் கடியில் தள்ளி அச்சியந்திரத்திலுள்ள கைப்பிடியை இழுத்து அழுத்து வான்; காகிதத்தில் எழுத்துக்கள் படிந்து விடும்; பின் அவன் அவற்றை வெளியே தள்ளி அச்சடிக்கப்பட்ட காகிதத்தை எடுத்து அடுக்குவான். பிறகு இக் காகிதங்கள் மடிக்கப்பட் டுப் புத்தகங்க ளாக்கப்படும். இவ்வாறு வேலை செய்யும் யந் திரம் 'கைப்பிரஸ்' என்று சொல்லப்படும். இதைக் கொண்டு தான் முதலில் வேலை செய்யப்பட்டு வந்தது. இதில் ஒரு நாளைக்கு 2000 ம் காப்பிகள் தாம் அச்சடிக்க முடியும். பிறகு தாமே காகிதங்களில் மைதவிடவி அச்சடிக்கும் யந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன; இவற்றில் யந்திரத்தைச் சுற்றி இயக்குவதற்கு ஒரு ஆளும், காகிதத்தை யந்திரத்தில் செலுத் துவதற்கு ஒரு ஆளும் இருந்தால் எளிதாக வேலை செய்ய

லாம்; இவற்றில் ஒவ்வொன்றில் ஒரு நாளைக்குப் பத்து அல்லது பன்னிரண்டு ஆயிரம் காப்பிகள் அச்சிடலாம்; இந்த யந்திரங்கள் நீராவியினாலும், மின்சார சக்தியினாலும் தாமே இயங்கும் மார்க்கங்கள் இப்பொழுது கண்டு பிடிக்கப்பட் டிருக்கின்றன; இவற்றில் காகிதம் விடுவதற்கு மாத்திரம் ஒரு மனிதன் இருந்துகொண்டு வேலை செய்யலாம்; இவற்றில் ஒரு நாளைக்குப் பல்லாயிரக் கணக்கான காப்பிகள் அச்சடிக்கலாம். இக்காலத்தில் இவ்வகை யந்திரங்கள்தாம் மிகுதியாக அச்சு வேலைகளைச் செய்து வருகின்றன. இன்னும் எழுத்துக்களைத் தாமே எடுத்துச் சேர்த்துக்கொள்ளும் யந்திரங்களும் இப்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு அச்சுத் தொழில் விருத்தி யடைந்தபின் உலகத்துக்கு ஏற்பட்டிருக்கும் நன்மைகள் பல. எங்கும் பலவகைக் கல்விகளும் விருத்தி யடைந்து வருகின்றன; விலை உயர்ந்த புத்தகங்களையும், பத்திரிகைகளையும் ஏழைகளும் குறைந்த விலைக்கு வாங்கிப் படிப்பதற்கு அனுகூலங்கள் ஏற்பட்டிருக்கின்றன; இவற்றால் பல தொழில்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. மனித வாழ்க்கைக்கு அனுகூலமான தொழில்களில் அச்சுத் தொழில் மிகவும் சிறந்ததாகும்.

—:(o):—

22. நீதிவெண்பா.

——:():——

தாமரைபொன் முத்து † சவரங்கோ ரோசனைபால்
பூமருதேன் பட்டு புனுகுசவ்வா-தாமழன்மற்
றெங்கே யிருந்தாலு மெள்ளாரே நல்லோர்க
ளெங்கே பிறந்தாலு மென். 1

*அரி*மந் திரம்புகுந்தா லானை மருப்பும்
பெருகொளிசேர் முத்தும் பெறலாம்-நரிநுழையில்
வாலுஞ் சிறிய மயிரெலும்புங் *கர்த்தபத்தின்
தோலுமல்லாமல் வேறுமுண்டோ சொல். 2

மென்மதுர வாக்கால் விரும்புஞ் சகங்கடின
வன்மொழியி னலிகழு மண்ணுலக-நன்மொழிசேர்
ஓதுகுயி லேதங் குதவியது கர்த்தபந்தான்
ஏதபரா தஞ்செய்த தின்று. 3

வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்-தரித்திரமாய்
§ வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ் தான். 4

---

† சவரம்-சாமரை

* அரி-சிங்கம். *மந்திரம்-குகை. *கர்த்தபம்-கழுதை.

§ வேழம்பர்-கழைக்கூத்தர்.

கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணும்விழி யேழாகு மீவோர்க்கு-நண்ணும்
அனந்தந் தவந்தா லருண்ஞானம் பெற்றோர்க்
கனந்தம் விழியென் றறி. 5

ஆசைக் கடியா னகிலலோ கத்தினுக்கு
மாசற்ற நல்லடியா னவானே-யாசை
தனையடிமை கொண்டவனே தப்பா துலகந்
தனையடிமை கொண்டவனே தான். 6

கற்றோர் கனமறிவர் கற்றாரே கற்றறியா
மற்றோ ரறியார் வருத்தமுறப்-பெற்றறியா
வந்திபரி வாய மகவைப் பெறுந்துயரம்
நொந்தறிகு வாளோ நுவல். 7

செய்யி லொருகருமந் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபஞ் சேருமே-செய்யவொரு
நற்குடியைக் காத்த *நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல். 8

நாவி னுனியி னயமிருக்கிற் பூமாது
நாவினிய நல்லோரு நண்ணுவார்-நாவினுனி
யாங்கடின மாகினு லத்திருவுஞ் சேராள்முன்
ஆங்கே வருமரண மாம். 9

ஈக்கு விடந்தலையி லெய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே-நாக்கரிய

*நகுலன்-கீரி

பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம். 10

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே-வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. 11

அவ்விய நெஞ்சத் தறிவிலாத் துர்ச்சனரைச்
செவ்விய ராக்குஞ் செயலுண்டோ-திவ்வியநற்
கந்தம் பலவுங் கலந்தாலு முள்ளியது
கந்தங் கெடுமோ கரை. 12

வென்றி வரியுகிரும் வெண்கவரி மான்மயிருந்
துன்றுமத யானைச் சுடர்மருப்பு-நின்றநிலை
வேறுபடி னுஞ்சிறப்பா மெய்ஞ்ஞானி நின்றநிலை
வேறுபடி னுஞ்சிறப்பா மே. 13

கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூர மாமோ கடலுப்பு-பொற்பூரும்
புண்ணியரைப் போல விருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல். 14

சுற்றுணர்வோ ரென்றுஞ் சிலுசிலுப்ப ரான்
[றமைந்த
முற்றுணர்வோ ரொன்று மொழியாரே-வெற்றி
[பெறும்
வெண்கலத்தி னோசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தி லுண்டோ வொலி. 15

உள்ளபொழு தேது முவந்தளிப்ப தல்லாமல்
எள்ளளவு மீய விசையுமோ-தெள்ளுதமிழ்ச்
சீரளித்தோ னுண்டநாட் சேர்மேகத் துக்கருந்த
நீரளித்த தோ * முன்னீர் நின்று. 16

பேதையரைக் கண்டால் பெரியோர் வழிவிலகி
நீதியொடு போகல் நெறியன்றோ-காதுமத
மாகரத்த யானை வழிவிலகல் புன்மலமுண்
+சூகரத்துக் கஞ்சியோ சொல். 17

மந்திரமுந் தேவு மருந்துங் குருவருளுந்
தந்திரமு ஞானந் தருமுறையும்-யந்திரமும்
மெய்யெனில் மெய்யாய் விளங்குமே மேதினியில்
பொய்யென்னிற் பொய்யாகிப் போம். 18

ஈசனெதிர் நின்றானு மீசனருள் பெற்றுயர்ந்த
நேசரெதிற் நிற்ப தரிதாமே-தேசுவளர்
செங்கதிர்முன்னின்றலுஞ் செங்கதிரின்வண்கிரணந்
தங்குமணல் நிற்கரிதே தான். 19

முற்று மிறைசெயலே முற்றிடினுந் தண்ணருளைப்
பெற்றவர்தம் பாலே பெரிதாகும்-பற்றுபெருந்
தாபத் திடத்தே தழன்றிடினு நற்சோதி
தீபத் திடத்தே சிறப்பு. 20

தன்னை யளித்தாள் தமையன் மனைகுருவின்
பன்னி யரசன் பயில்தேவி-தன்மனையைப்

---

* முன்னீர்-சமுத்திரம்.
+சூகரம் பன்றி.

பெற்ரு ளிவரைவர் பேசி லெவருக்கும்
நற்ருய ரென்றே நவில். 21

ஆபத்து வந்தா லரும்பொருள்தான் வேண்டுமே
ஆபத்தேன் பூமா தருகிருந்தால் ஆபத்து
வந்தா லவளு மருவாம லெப்பொருளும்
அந்தோ வுடன்போ மறி. 22

இன்னல் தரும்பொருளை யிட்டுதலுந் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே-யன்ன
தளித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பா
விழத்தலுந் துன்பமே யாம். 23

தானே புரிவினையாற் சாரு மிருபயனுந்
தானே யனுபவித்தல் தப்பாது-தானூறு
கோடிகற்பஞ் சென்ருலுங் கோதையீர் செய்தவினை
நாடிநிற்கு மென்ருேர் நயந்து. 24

தூய வறிவினர்முன் சூழ்துன்ப மில்லையாங்
காயும் விடங்கருடற் கில்லையாம்-ஆயுங்கால்
பன்முகஞ்சேர் தீமுன் பயில்சீத மில்லையாந்
துன்முகருக் குண்டோ சுகம். 25

இந்திரவி நீள்கிரண மெங்கு நிறைந்தாலும்
இந்திரவி காந்தத் திலகுமே-யிந்திரவி
நேத்திரத்தோ னெங்கு நிறைந்தா லு நித்தனருள்
நேத்திரத்தோர் பாலே நிறைவு. 26

தாமோ தரன்முதலோர் சாதகநூல் சாற்றுவதும்
பூமேலோர் பொன்றுவதுங் கண்டோமே-நாமுடலை
நேசிப்ப தென்னே நிலையாகுஞ் சங்கரனைப்
பூசிப்ப தென்றே புகல். 27

அரசி னிலையதி +னக்கிர த்தி னின்று
விரைய விழுதுளியே போலும்-புரையுடைய
ஆக்கைவிடா முன்ன மரன்பாதம் பூசிக்க
நோக்கனன் றென்றே நுவல். 28

சத்தியத்தைவெல்லா தசத்தியந்தா னீள்பொறையை
மெத்தியே கோபமது வெல்லாது-பத்திமிகு
புண்ணியத்தைப் பாவமது வெல்லாது பேரரக்கர்
கண்ணனைத்தான் வெல்லுவரோ காண். 29

பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பெற்றதிலோர்
நற்புதல்வ னைப்பெறுதல் நன்றாமே-பொற்கொடியே
பன்றிபல குட்டி பசந்ததனு லேதுபயன்
ஒன்றமையா தோகரிக்கென் றோது. 30

காளவிடப்*பாந்தள் கருடனையுங் கட்டுமோ
வாளெரியைக் கட்டுமோ வன்கயிறு-நீளும்
பவமருளும் பாசம்வெம் பஞ்சேந் திரியம்
சிவயோகி யைப்பிணியா வே. 31

+ அக்கிரம்-நுனி.
*பாந்தள்-பாம்பு.

புத்தியொடு முத்திதரும் புண்ணியத்தா லன்றியே
*மத்தமிகு பாவத்தால் வாழ்வாமோ-வித்துபயிர்
தாயாகி யேவளர்க்குந் தண்புனலா லல்லாது.
தீயால் வளருமோ செப்பு 32

தாமுங் கொடார்கொடுப்பார் தம்மையுமீ யாதவகை
சேமஞ்செய் வாருஞ் சிலருண்டே-ஏமநிழல்
இட்டுமலர் காய்கனிக ளீந்தருளு மாமரத்தைக்
கட்டுமுடை முள்ளெனவே காண். 33

ஆயுமலர்த் தேன்வண் டருந்துவது போலிரப்போர்
ஈயு மவர்வருந்தா தேற்றலறந்-தூயவிளம்
பச்சிலையைக் †கீடமறப் பற்றி யரிப்பதுபோல்
அச்சமுற வாங்க §லகம். 34

மாதா மரிக்கின் மகனுவி னற்சுவைபோந்
தாதா வெனிற்கல்வி தான்போமே-கோதாய்கேள்
சோதரராற் றோள்வலிபோந் தோமில்மனைவியெனில்
ஆதரவு யாவும்போ மாங்கு. 35

பாவிதனந் தண்டிப்போர் பாலாகு மல்லதருள்
மேவுசிவ னன்பர்பால் மேவாதே-ஓவியமே
நாயின்பா லத்தனையு நாய்தனக்கா மன்றியே
தூயவருக் காகுமோ சொல். 36

---

*மத்தம்-வெறி

† கீடம்-புழு. §அகம்-பாவம்.

பொன்னுங் கரும்பும் புகழ்பாலுஞ் சந்தனமும்
சின்னம் பட வருத்தஞ் செய்தாலும்-முன்னிருந்த
நற்குணமெ தோன்றும் நலிந்தாலு முத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. 37

அன்னமனை யீர்குயிலுக் கானவழ கின்னிசையே
கன்னன்மொழி யார்க்கழகு கற்பாமே மன்னுகலை
கற்றோர்க் கழகு கருணையே யாசைமயக்
கற்றோர்க் கழகுபொறை யாம். 38

தீயவர்பாற் கல்வி சிறந்தாலு மற்றவரைத்
தூயவரென் றெண்ணியே *துன்னற்க-சேயிழையே
தண்ணொளிய மாணிக்கஞ் சர்ப்பந் தரித்தாலும்
நண்ணுவரோ மற்றதனை நாடி. 39

நன்றறியாத் தீயோர்க் கிடங்கொடுத்த நல்லோர்க் [குந்
துன்று கிளைக்குந் துயர்சேருங்-குன்றிடத்திற்
பின்னிரவில் வந்த †கரும் பிள்ளைக் கிடங்கொடுத்த
அன்னமுதற் பட்டதுபோ லாம். 40

* துன்னற்க-நெருங்காதிருக்க.

† கரும்பிள்ளை-காக்கை.

23. குமரேச சதகம்.

—:(o):—

(உழு தொழிற் பெருமை)

நல்லதே வாலயம் பூசனை நடப்பதும்
நாடோறு மழை பொழிவதும்
நாடிய தபோதனர்கள் மாதவம் புரிவதும்
நவில்வேத வேதிய ரெலாஞ்
சொல்லிய யாகாதி கருமங்கள் செய்வதுந்
தொல்புவி செழிக்கு நலமுஞ்
சுபசோப னங்களுங் கொற்றவர்கள் செங்கோல்
துலங்குமனு நெறி முறைமையும்
வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலையும்
விற்பனையு மதிக புகழும்
மிக்கவதி காரமுந் தொழிலாளர் சீவனமும்
வீரரண சூர வலியும்
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினுன் விளைவ வன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(பலர்க்கும் பயன் படுவன)

கொண்டல் பொழி மாரியு முதாரசற் குணமுடைய
கோவுமூ ருணியி னீருங்
கூட்டமிடு மம்பலத் தறுதருவி னீழலுங்
குடியாளர் விவசாய மும்

கண்டவர்க ளெல்லாம் வரும் பெருஞ் சந்தியிற்
கனிபல பழுத்த மாமுங்
கருணையுட னேவைத் திடும்தணீர்ப் பந்தலுங்
காவேரி போலூற்ற மும்
விண்டலத் துறைசந்தி ராதித்த கிரணமும்
வீசுமா ருதசீத மும்
விவேகியெனு நல்லோ ரிடத்திலுறு செல்வமும்
வெகுசனர்க் குபகார மாம்
வண்டிமிர் கடப் பமலர் மாலையணி செங்களப
மார்பனே வடிவே லவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்ற எமது சொந்தப் பிரசுரப் பாடசாலை புத்தகங்கள்.

	அ.	பை.
1-ம் வகுப்பு மாணவர் தமிழ் பாலபாடம்	2	0
2-ம் வகுப்பு மாணவர் தமிழ் வாசகம்	3	0
3-ம் வகுப்பு ஷை	4	0
4-ம் வகுப்பு ஷை	5	0
5-ம் வகுப்பு இளைஞர் இந்திய சரித்திரக் கதைகள்	4	0
சிறுவர் துரைத்தன முறைகள் (1-ம் பாகம்)	5	0
ஷை (2-ம் பாகம்)	6	0

உப பாடமாக வைப்பதற்குரிய புத்தகங்கள்.

	ரூ.	அ.
கர்ணன் சரிதை	0	12
அரிச்சந்திரன் சரிதை	0	8
சகோதரவாஞ்சை	0	7
நீலக்கொடி	0	5
மணவாளன்	0	3
பரசுராமன்	0	3
ஸ்ரீ கிருஷ்ணன் தூது	0	8
தசாவதார மகிமை	0	6
சிசுபாலன்	0	8
சண்டோபாக்கியானம்	0	6
அங்கதன்	0	4
மங்களேசுவரன்	0	8
சத்திய வசனி	0	4
நாலு மந்திரி கதை	0	4
விமலன் or விதியின் வெற்றி	0	4
கண்ணபிரான்	0	4
உதயணன்	0	6
ஸ்ரீபாலன்	0	8
போஜ சரித்திரம்	0	[illegible]
மூப்பெருந்தாசர்	0	10
சீமந்தனி	0	8
தக்கன்	0	6
ரிப்பன் பிரபு	0	10
மாதர் நீதிமஞ்சரி	0	6
பாரத வீரர்கள்	0	8
நான்கு கோடி அல்லது நான்கு கடமைகள்	0	4
நரிவிருத்தம் மூலமும் உரையும்	0	4
கண்ணகி	0	10
சங்ககாலத்துப் புலவர்கள் அல்லது பண்டைத் தமிழ்ப் புலவர் மாண்பு	0	10
கருணாகரரும் சத்திய சீலரும்	0	8

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.